# கல்கி

KALKI 8-12-74 60 காசு



# மனங்கவரும் யாவற்றையும் என்றும் மன மகிழ படம் பிடித்து வைப்பீர்!



## ஆக்.:பா ஐஸோலி குறைவான ஒளியிலும் நிறைவான போட்டோக்களுக்கு.

விலை Rs.182/50 (எக்சைஸ் தீர்வை உள்ளிட்டது. இதர வரிகள் தனி).



ISOLY-I

ஆக்பா–கேவர்ட் இந்தியா லிமிடெட்.,

SIMOES/AG/33 TAM



இவளுக்குத் தெரியும்
குங்கும திலகங்களிலே
இணையிலா அழகு திலகம் சிங்கார்...
எங்கெங்கும் கிடைக்கும்
உங்களுக்குத் தெரியுமா—பாரத நாட்டின்
பேரழகு திலகமான சிங்கார் எந்த உடைக்கும்
உளங்கிக்கும் பொருந்துமாறு சொக்குமழகுள்ள
பலவிதமான சாயல்களில் உருவாக்கப்படுகிறது.
மென்மைய மெருகுடனோ, மின்னும் மெருகுடனோ...
சிந்தூரப் பொடி உண்டு. சாந்தும் உண்டு.
Shingar
சிங்கார்— பாரத நாட்டின் உச்சவிற்பனையுடைய,
பரிபூரண நம்பிக்கைக்குரிய குங்குமப் பொட்டு.
தயாரிப்பாளர்கள் பாரமவுண்ட் பிராடக்ட்ஸ், பம்பாய்-400 004.
விநியோகஸ்தர்கள் :- முல்லர் & பிப்ஸ் (இந்தியா) லிட்.
Shingar
Shingar


THE MOST WONDERFUL IDEAS GROW WITH COTTON
FINISHES
wash-n-wear... stain resistant... non-shrink... finishes-to heighten the utility of the natural fibre...
Century– FOR 100% COTTON TEXTILES
THE CENTURY SPG. & MFG. CO. LTD., Bombay 400 025
Adroit-CM-540-P

ஆனந்த, கார்த்திகை, 23
டிசம்பர், 8, 1974

★






## அஞ்சலி

இந்தப் பத்திரிகையின் ஸ்தாபகர் கல்கி அவர்கள் அமரராகி இந்த டிசம்பர் 5ந் தேதியோடு இருபதாண்டுகள் ஆகின்றன. அவர் தமது வாழ்நாளில் பெரிதும் மதித்துப் பக்தி செலுத்தி வந்த ராஜாஜி அவர்கள் பிறந்ததும் அமரரானதும் இம்மாதத்தில்தான். இந்த இருவருமே போற்றி மகிழ்ந்த அமர கவி பாரதியின் பிறந்த நாளும் டிசம்பரில்தான். பாரதியின் இரு வரிகளைத்தானே இப்பத்திரிகையின் முத்திரை வாக்கியமாகத் தேர்ந்தெடுத்தார் கல்கி. தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற எங்கள் தாயென்று கும்பிட்டோம்; இனியும் வணங்கித் தொண்டாற்றுவோம். அதோடு இம்மூன்று மகான்களின் வாழ்க்கை லட்சியத்தையும் ரத்தினச் சுருக்கமாகக் கூறும் ''உள்ளத்தில் உண்மை ஒளி யுண்டாயின் வாக்கினிலே ஒளி யுண்டாகும்'' என்ற பாரதியின் வரிகளையும் மறவாதிருப்போம்.

★ ★ ★

இந்த இதழை ராஜாஜி சிறப்பிதழ் என்றே வர்ணிக்கலாம். ஒரு யோசனை: மாஸ்தி வேங்கடேச அய்யங்காரின் கட்டுரையைப் படித்துவிட்டுத் திரு கோபுலுவின் மேலட்டைக் கார்ட்டூன் சித்திரத்தை இன்னொருமுறை பாருங்கள். புதுப் புது உணர்வுகள் எழக் காண்பீர்கள்!

—ஆசிரியர்






| சந்தா விவரம் | ஒரு வருடம் | ஆறு மாதம் |
|---|---|---|
| இந்தியா | ரூ. 30-00 | ரூ. 15-00 |
| இதர நாடுகள் | ரூ. 60-00 | ரூ. 30-00 |
| இலங்கை (இலங்கை நாணயம்) | ரூ. 44-00 | ரூ. 22-00 |



# திறமை வென்றது! ஏமாற்றம் தோற்றது!



இந்தியக் கிரிக்கெட்டின் முதுகெலும்பாக விளங்கும் பலரை — விசுவநாத், சந்திரசேகர், பிரசன்னு, பி. பி. பட்டேல் போன்ஜேரை — கர்நாடக மாநிலம் வழங்கியுள்ளது. ஆனல் இதுவரை கர்நாடக மாநிலம் டெஸ்ட் ஆட்டம் கண்டதில்லே. கர்நாடக கிரிக்கெட்டின் 'தாத்தா' சின்னசாமி இந்த ஆட்டத் தொடரின் முதல் டெஸ்ட் பங்களூர் காணும் முதல் டெஸ்டாகவும் விளங்கப் பெருமுயற்சி எடுத்துக்கொண்டார். இதற்காகப் பல நாட்கள் பல மாதங்கள் கண் அயராது உழைத்தார்.

'தாத்தா' சின்னசாமி மேலும் இரு பெரிய சாதனேகளுக்கு இந்த ஆண்டு வழி வகுத்திருக்கிருர். ரஞ்சித் கோப்பைப் பந்தயத்தில் கர்நாடக வெற்றி ஒன்று; கர்நாடக கிரிக்கெட் சங்கத்துக்குச் சொந்தமாக விளேயாட்டு மைதானம் ஏற்பட்டது இரண்டு.

**அதிசயக் காட்சி!**


''நோடு! நோடு!'' என்று நாடக பாணியில் சொல்லிக் கொண்டே வந்தார் கன்னட டைரக்டர், நடிகர் வாதிராஜ்!

''என்ன? என்ன?'' என்றேன்.

''கல்யாண ரிஸப்ஷனின்போது மாப்பிள்ளே காசி யாத்திரை டிரஸ்ஸிலேயே இருந்தால் எப்படி இருக்கும்? அதுமாதிரி பட்டோடி நவாப் டெஸ்ட் கோட் அணியாமல் 'டாஸ்' போடப் போவதை 'நோடு நோடு!'' என்றுர் வாதிராஜ்.

**முதல் அனுபவம்**

இதுவரை மட்டைப் பிடித்து ஆடி வந்த ஜெயஸிம்மா தினப் பத்திரிகை நிருபராகப் பேஞ பிடித்து 'உழுது'கொண்டிருந்தார்.







1. 'பூவா தலையா?' போட்டுப் பார்த்த பிறகு கைகுலுக்குவதில் பலப் பரீட்சை!
2. கிரினிட்ஜின் விக்கெட்!
3. காளிச்சரணின் ஏ ழன் விக்கெட்!
4. 'பிட்ச்'சி லிருந்து தண்ணீரை நீக்கப் பெரும் பாடு!
5. 'பம்பர்' வீசிக் கலக்கிய ஆன்டி ராபர்ட்ஸ்.
6. நான்கு விக்கெட்கள் வீழ்த்திய வெங்கட்.

''உங்கள் முதல் எழுத்து அனுபவம் எப்படி?''

''மட்டை பிடிக்கிறதைவிடக் கஷ்டமான வேலை! ஆனால் 'இன்டிரஸ்டிங்' வேலை!'' என்றார் ஜெயசிம்மா.

**லாலாவின் ஹாஸ்யம்!**

லஞ்ச் இடைவேளையில் லாலா அமர்நாத் ஒரு வாழைப் பழத்தை மற்றொரு கிரிக்கெட் விமர்சகருக்கு வீசி எறிந்தார். அவர் அதைக் கை நழுவ விட்டு விட்டார்!

''பிரஸன்னா இன்று காட்ச் கோட்டை விட்டது மாதிரி நீரும் கோட்டை விட்டுட்டீரே!'' என்று சொல்லி நகைத்தார் லாலா.

**வெங்கட்டின் வீச்சு!**

நன்கு பந்து வீசிய பெருமை தமிழகத்தின் ஒரே பிரதிநிதியாக டீமில் இருந்த வெங்கட்டுக்குக் கிடைத்தது! மூன்று சிக்ஸரும் பதின்மூன்று பவுண்டரியும் அடித்து செஞ்சுரிக்கு வேகமாய் முன்னேறிக்கொண்டிருந்த கிரினிட்ஜின்



விக்கெட்டை அவர் 'ரன் அவுட்' செய்து வீழ்த்திய போது ஒரே உற்சாகம்.

## "பிட்ச்" படுத்திய பாடு!

மேற்கிந்தியத் தீவிலிருந்து கிரிக்கெட் விமர்சனம் செய்ய வந்திருக்கும் டோனி கோஸியர்' "கடுமையான மழை வெய்யிலிலிருந்து காக்க நாங்கள் பிட்சை மூடி விடுவோம்!" என்றார்.

"இங்கேயும் பிட்சை மூடியிருக்க வேண்டாமோ?" என்று சகோதரப் பத்திரிகையாளர் கேட்டார்.

"இரு காப்டன்களும் டெஸ்ட் தொடர் ஆரம்பிப்பதற்கு முன்னால் 'பிட்சை' மூட வேண்டாம் என்று ஒப்பந்தம் செய்துகொண்டிருக்கிறார்கள். இந்தத் தொடர் முழுக்க 'பிட்சை' மூடமாட்டார்கள்."

"அது என்னவோ இந்த முதல் டெஸ்டில் பிட்சும் ரொம்ப நன்று விளையாடறது!"

## பேடீ விவகாரம்

பிரஸ் பாக்ஸுக்குக் கிரிக்கெட் போர்டிலிருந்து தாக்கீது வந்தது: "பேடீ விவகாரம் முற்றுப் பெற்று விட்டது. அவர் மன்னிப்புப் பெற்றுவிட்டதால் இனி விசாரணை இல்லை! செலக்ஷன் கமிட்டி இனி அவரைப் பற்றிச் சிந்திக்கலாம்!"

"ஸார்! உங்களை டெலிவிஷன் இண்டர்வியூவுக்குக் கூப்பிடறாங்கோ!" என்று வேடிக்கையாகப் பத்திரிகை நிருபர் சொல்ல, கிரிக்கெட் ஆட்டக்காரர், "ஐயையோ! வேண்டாம்! வேண்டாம்! பேடீ ஒருவர் மாட்டிண்டு விழித்தது போதாதோ!" என்று சொல்லி ஓட்டம் பிடிப்பது போல் பாசாங்கு செய்தார்!

## தஞ்சாவூர் மகாராஜா!

"இவர் யார் தெரியுமா?" என்று பரோடா மகாராஜா, நடிகர் திலகத்தை மற்றொரு பிரமுகருக்கு அறிமுகப்படுத்த முற்பட்டார்.

உடனே சிவாஜி கணேசன் சடக்கென்று, "இவர் பரோடா மகாராஜா; நான் மகாராஜா ஆஃப் டாஞ்சூர்!" என்றார். ராஜ ராஜ சோழனை நினைவுபடுத்திக்கொண்டு சுற்றியிருந்த அனைவரும் விழுந்து விழுந்து சிரித்தார்கள்!

## ஸிக்ஸர்கள்!

முதல், இரண்டு இன்னிங்ஸ்களிலும் ஐந்து ஸிக்ஸர்கள் அடித்த பெருமை கிரீனிட்ஜுக்கு! லாயிட்டும் காளிசரணும் ஆளுக்கு இரண்டு ஸிக்ஸர்கள் அடித்தார்கள். இந்திய கோஷ்டியில் அத்தி பூத்தாற்போல் விசுவநாத் ஒரு ஸிக்ஸர் அடித்து வைத்தார்.

## பார்ட்னர்ஷிப் சிறப்பு!

மேற்கிந்தியத் தீவு கோஷ்டியில் இரண்டு இன்னிங்ஸிலும் இரண்டு பார்ட்னர்ஷிப் கிரிக்கெட் ரஸிகர்களுக்கு மறக்க முடியாதவை. கிரீனிட்ஜும் காளிசரணும் 177 நிமிஷங்களில் 177 ரன்களைக் குவித்தார்கள்! லாயிட்டும் கிரீனிட்ஜும் இரண்டாவது இன்னிங்ஸில் 207 ரன்களை 160 நிமிஷங்களில் அள்ளிக் குவித்தார்கள்.

பிரசன்னா – அபீத் அலி முப்பத்தைந்து நிமிஷ 42 ரன் பார்ட்னர்ஷிப் அற்பாயுளில் முடிந்தது விசனத்துக்குரிய விஷயம்.

## சதம் கண்ட மன்னர்கள்!

இந்த முதல் டெஸ்டில் காளிசரண், லாயிட், கிரீனிட்ஜ் ஆகியோர் சதத்தைத் தாண்டினர். ஆண்டி ராபர்ட்ஸும் ஹோல்டரும் தங்கள் விரைவான பந்து வீச்சுக்களினால் இந்திய பாட்ஸ்மன்களை அலற வைத்தனர். இவர்களது 'பம்பர்'கள் ஒரு கண்ணில் பார்வைக் குறைவுடைய பட்டோடி நவாப்பிடம் தவிர்க்கப்பட்டது மேற்கிந்தியக் கோஷ்டியினரின் பெருந்தன்மை!

இந்தியக் கோஷ்டியில் தமிழக வெங்கடராகவனும் கர்நாடக சந்திரசேகரும் முதல் இன்னிங்ஸில் ஆளுக்கு நான்கு விக்கெட்களாகப் பங்கிட்டுக் கொண்டனர், காவிரி நீர்ப் பிரச்னை அரசியலில் தலைதூக்கினாலும்!

## அதிக பவுண்டரி ஷாட்கள்!

பெங்களூரில் முதல் டெஸ்டில் அதிக பவுண்டரிகளை மேற்கிந்திய கோஷ்டியில் அடித்த பெருமை லாயிட்டைச் சாரும். இந்தியக் கோஷ்டியில் பாட்ஸ்மன் கனிட்கர் தகைப்புக் காளான போதிலும் அவர்தான் 11 பவுண்டரி கண்டவர் என்பது குறிப்பிடத் தக்கது.

## கடைசிநாள் ஹாஸ்யம்

மனம் முதிர்ந்த ஒரு கிரிக்கெட் ரஸிகர், "பட்டேல், கனிட்கர் இரண்டு பேரையும் அடுத்த டெஸ்டிலாவது நீக்கிவிட்டு வேறு நல்ல ஆட்டக்காரர்களுக்கு இடம் தரவேண்டும்" என்றார்.

இதைக் கேட்ட ஒரு இளைஞர், "எதற்கு அந்த இரண்டுபேரைமட்டும் நீக்க வேண்டும்? பாக்கி ஒன்பது பேர் என்ன பாவம் பண்ணினார்கள்?" என்றாரே பார்க்கலாம்!

## கிரிக்கெட் சாணக்கியம்

வேடிக்கை ஒருபுறமிருக்க மேற்கிந்தியக் கோஷ்டி எல்லா விதத்திலும் நம்மைவிடச் சிறந்ததென நிரூபித்து விட்டது. நம்மவருக்கு வேகப் பந்து வீச்சை எதிர்க்கும் ஆற்றல் இல்லை. ஆனால் அவர்களோ நமது சுழல் பந்து வீச்சைத் தவிடுபொடியாக்கத் தெரிந்துகொண்டுவிட்டார்கள். நம்மிடம் வேகப் பந்து வீச்சாளர்களும் இல்லை. அதுபோக லாயிட்டின் தலைமை, அவருடைய கிரிக்கெட் சாணக்கியம் வியந்து போற்றற்குரியவை. அதற்கெதிரே பட்டோடியின் தலைமை ஏனோ தானோ வாகிவிட்டது. தோல்வி நம்மைப் பாதிக்க விடலாகாது என்றாலும் நாம் கற்றுக்கொள்ள வேண்டியவை நிறைய இருப்பதையும் மறக்க வேண்டாம்.

— குண்டுமணி

# என்ன சேதி?

## பம்பாய் ஷெரீப்

சிவசேனை ஆர்ப்பாட்டங்களுக்குப் பிரசித்திபெற்ற பம்பாயில் இன்று மகிழ்ச்சிகரமான ஒரு திருப்பம். பம்பாய்த் தமிழர்களுள் மிகப் பிரபலமான திரு டி. வி. ராமானுஜம் நகரின் ஷெரீபாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.



திரு ராமானுஜம் நமது கலைகளை வளர்ப்பதில் எத்தனை ஆர்வம் காட்டி வந்திருக்கிறார் என்பதை நாடு நன்கறியும். பம்பாய் ஷண்முகானந்த சபை இதற்கு அசைக்க முடியாத ஒரு சான்றாகக் கம்பீரமாய் எழுந்து நிற்கிறது. பம்பாய் தொழில் வர்த்தகத் துறையிலும் அவருக்குள்ள செல்வாக்கு மட்டில்லாதது. அவர் ஏற்படுத்தியுள்ள நல்லெண்ணம், பெற்றுள்ள செல்வாக்கு இவற்றின் பிரதிபலிப்பாக இன்று அவரை ஷெரீப் பதவி வந்தடைந்துள்ளது. இனிய சுபாவமும் இடைவிடா உழைப்பும் அறிவாற்றலும் மிக்க ராமானுஜம் ஷெரீப் பதவி ஏற்றதில் பம்பாய்த் தமிழர்கள் பெருமிதமும் மகிழ்ச்சியும் சொல்லி அடங்காத அளவில் அடைந்துள்ளார்கள். நாம் அடையும் மகிழ்ச்சிப் பெருமிதம் அதற்குக் கொஞ்சமும் குறைவல்ல என்பதை பம்பாய்த் தமிழர்களுக்குத் தெரியப்படுத்திக் கொள்கிறோம். பம்பாயில் வடக்குத்தெற்கு நல்லுறவில் ஒரு புதிய அத்தியாயம்பிறக்கட்டும்.

## உச்சாணிக் கொம்பில் உட்கார்ந்தது!

அரிசி விலை குறையும், குறையப் போகிறது, குறைந்து கொண்டிருக்கிறது என்றெல்லாம் முதல்வரும் மற்ற அமைச்சர்களும் கதறு கதறு என்று கதறினார்கள். ஆனால் அது 'உனக்கும் பெப்பே உன் புலம்பலுக்கும் பெப்பே' என்று உச்சாணிக் கொம்பில் ஏறிக் கொண்டிருக்கிறது. மற்ற மாநிலங்களை விடத் தமிழகம் எவ்வளவோ மேல் என்று சொல்லிக் கொண்டிருந்தார்கள். இந்த அடிப்படைப் பிரச்னையில் இப்போது அதுவுமில்லை என்றாகி விட்டது.

மக்களின் ஜீவாதாரமான இந்த விஷயத்தில் அனுபவ அறிவுள்ளவர்களைக் கலந்தாலோசித்து முதல்வர் தாமதமின்றி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## மனிதத் தன்மை இல்லையா?

காவிரி நீர்ப் பிரச்னையில் விதண்டாவாதம் புரிந்து கொண்டிருக்கும் கர்நாடக முதல்வரை நோவதா அல்லது கோர்ட்டிலிருந்து வழக்கை வாபஸ் பெற்றுக் கொண்டு பேச்சு வார்த்தை மூலம் ஒரு முடிவு காண முடியாமல் தவிக்கும் முதல்வரை நொந்துகொள்வதா என்று புரியவில்லை.

'ஆறு மாதக் கெடுவில் புதிய ஒப்பந்தம் ஏற்பட வேண்டும் என்றேன்' என்கிறார் நமது முதல்வர். கர்நாடக முதல்வரோ, 'ஆறு மாத காலத்துக்குப் பழைய ஒப்பந்தம் நீடிக்கவேண்டும் என்றுதான் சொன்னீர்கள். அந்தக் கெடு முடிந்து விட்டது. இனி காவிரி நீரைத் தமிழகத்துக்கு விடுவதும் விடாததும் எங்கள் இஷ்டம்' என்கிறார். இவற்றையெல்லாம் நாளிதழ்களில் படிக்கவே அருவருப்பாயிருக்கிறது. மைசூரில் மட்டும்தான் காவிரி ஆறு ஓடுவது போலவும் அவர்கள் மனம் வைத்தால் தான் நமக்கு நீர் என்பது போலவும் பேசுவது எவ்வளவு கேவலம்? மனிதத் தன்மை என்பதே இல்லாமல் போய்விட்டதா?

புது தில்லிக்கு விரைந்துள்ள முதல்வர் உருப்படியான ஓர் ஒப்பந்தத்துடன் திரும்பி வரட்டும்.


## ஆ என்றால் ஆர்ப்பாட்டம்!

பஸ் ஊழியர் – மாணவர் மோதல்; கல்லூரி நிர்வாகம் – மாணவர் மோதல் என்றிப்படிச் செய்திகள் வந்தவண்ணம் இருக்கின்றன. தொடர்ந்து கல்லூரிகளுக்கு மூடுவிழா!

ஆ என்றால் ஆர்ப்பாட்டம்; ஊ என்றால் ஊர்வலம் என்ற ரீதியில் மாணவர்கள் நடந்து கொள்ளக் காரணம் என்ன? தங்களுடைய எதிர்காலத்தில் அவர்களுக்கு நம்பிக்கை விழாததுதான் முக்கிய காரணம். பட்டம் பெற்றதும் வேலை வாய்ப்பு, கௌரவமாய் வாழ ஏற்ற சம்பளம் என்றிருந்தால் படிப்பில் நாட்டமின்றி ஆர்ப்பாட்டத்தில் ஆர்வம் கொள்வார்களா? மற்றொரு காரணம் தங்களுடைய முன்னேற்றத்தைக் கருதி அரசியல்வாதிகள் மாணவர்களைப் பயன்படுத்திக் கொள்வது. இந்தப் போக்குக்கு நாடு விடுதலை பெற்ற பின்னராவது முற்றுப்புள்ளி வைத்திருக்க வேண்டும். ஆனால் ஜெயப்பிரகாசரே மாணவர் கிளர்ச்சி என்று நடத்தும்போது யாரிடம் போய் முறையிடுவது?

## உண்மைக்கு உழைத்த வாழ்வு!

ஓர் உபாத்தியாயராகப் பர்மாவில் வாழ்க்கை தொடங்கிப் படிப்படியாகத் தமது அறிவாற்றலால் உயர்ந்து கடைசியில் ஐ. நா. சபையின் பிரதம காரியதரிசி பொறுப்பை ஏற்ற ஊதாண்ட் காலமாகிவிட்டார். ஐ. நா. சபையின் சரித்திரத்தில் பெரும் புயல் வீசிய சிக்கலான கட்டங்களில் அவர் திறம்படச் சபை நடவடிக்கைகளைக் கவனித்துச் சென்ற அழகை இன்றைய பிரதம காரியதரிசி வியந்து போற்றியிருக்கிறார். நேர்மையாளர்கள் அரிதாகி வரும் சூழலில் ஊ தாண்டின் கொள்கைப் பிடிப்பும் உண்மைக்கு உழைத்த வாழ்வும் நமக்கெல்லாம் புத்துணர்ச்சி அளிக்கட்டும்.





தாக்கெர்ஸி கலைவண்ணக்
கேம்ப்ரிக் துணி
...காலத்தை
வெல்லும் அணி
ப்ளீச், ப்ரிண்ட், டை,
''ஸான்பொரைஸ்''
மற்றும் ''மெர்ஸெரைஸ்''
''செய்யப்பட்டவை''.
தாக்கெர்ஸி
க்ரூப் ஆஃப மில்ஸ்
ஹிந்துஸ்தான் மில்ஸ் • கிரௌண் மில்ஸ்
வார் விதல்தாஸ் சேம்பர்ஸ், 16, பாம்பே ஸமாச்சார் மார்க், பம்பாய்-400 023
Madison/TGM/1/74 A TM.

கல்கி

மலர் 34

இதழ் 19

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற - எங்கள் தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

# தலைமை ஏற்கத் தயக்கம் ஏன்?

'எதிர்க்கட்சிகளின் ஒருமைப்பாட்டுக்கு ஜெயப்பிரகாசர் ஓர் இயக்கம் நடத்தட்டும்; ஒருங்கிணைந்த எதிர்க்கட்சித் தலைவர்கள் சிறந்ததொரு பொருளாதார மாற்றுத் திட்டத்தைத் தயாரித்து மக்கள் மன்றத்தில் சமர்ப்பிக்கட்டும்; பணத்தின் செல்வாக்குப் பயனற்றுப் போகும் விதத்தில் தேர்தலை நடத்த வழி சொல்லட்டும்'

என்ற மூன்று கோரிக்கைகளை மூன்று வாரங்களுக்கு முற்பட்ட தலையங்கத்தில் எழுப்பியிருந்தோம். ஜெயப்பிரகாசர் இந்த ஆக்க பூர்வமான பணிகளில் இறங்கியிருப்பதைக் கண்டு மகிழ்கிறோம். புது தில்லியில் எதிர்க்கட்சித் தலைவர்களை அழைத்து ஜெயப்பிரகாசர் மகாநாடு நடத்தியபோது தேர்தல்கள் தர்ம நியாயமான முறையில் நடப்பதற்கான பல யோசனைகள் கூறப்பட்டுள்ளன. இந்திரா அம்மையாரின் மாயா சோஷலிஸத்துக்கு நேர்மாறான மெய்யான க்ஷேமநலத் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. அதோடு, 'ஜனநாயகப் பற்றுள்ள எதிர்க்கட்சிகள் இணைந்து இந்திரா அரசுக்கு ஒட்டுமொத்தமான ஓர் எதிர்ப்பைத் தெரிவிப்பதை வரவேற்கிறேன்' என்றும் ஜெயப்பிரகாசர் தெளிவாகக் கூறியுள்ளார்.

ஆனால் இப்படி இணைந்து செயல்படும் எதிர் அணிக்குத் தாம் தலைமை ஏற்க முடியாது என்று அவர் சொல்லிவிட்டதுதான் பெரிய ஏமாற்றம்! எந்தக் கட்சியிலும் சேராமல் இருப்பதால்தான் அவருக்கு இத்தனை கௌரவமாம்; அரசியல் கூட்டணிக்குத் தலைமை வகிப்பதால் அந்தக் கௌரவத்தை இழந்து விடுவாராம்! ஜே.பி.யின் இந்த வாதத்தை நம்மால் ஏற்க முடியவில்லை. அவர் கௌரவம் தலைமை ஏற்பதால் குறையாது. அதிகரிக்கும் என்றே அடித்துச் சொல்கிறோம். தமது இந்த வயோதிக காலத்தில், அரசியல் ஈடுபாடு என்பதே வேப்பங்காயாகக் கசக்க வேண்டிய தருணத்தில், நாட்டு நலனைக் கருதி அரசியலில் குதித்துத் தலைமைப் பொறுப்பை ஏற்க முன்வந்ததைத் தியாகம் என்றே நாடு நினைக்கும். தியாகத்தால் விளைந்த தலைமையை மதிக்கும், பின்பற்றும். இரண்டே ஆண்டுகளில் இந்திரா அரசு ஊழல்கள் இருந்த இடம் தெரியாமல் போகும். ஆளுவோரிடையும் மக்களிடையும் நேர்மையும் நியாயமும் தர்மமும் தழைத்தோங்கும்.

ஜெயப்பிரகாசரை யாரும் பதவிப் பித்தன் என்று எண்ணிவிடப் போவதில்லை. அவர் ஆட்சிப் பொறுப்பு ஏற்கவும் வேண்டாம். சிதறிக் கிடக்கும் எதிர்க்கட்சிகளை இணைத்துச் சக்தி வாய்ந்த ஒரே அணியாக்கி மாற்றுச் சர்க்கார் அமைய உதவினாலே போதும். அதைத்தான் நாடு அவரிடம் எதிர்பார்க்கிறது.

ஆனால் தேசத்தின் துரதிர்ஷ்டம், ஜெயப்பிரகாசர் தலைமை ஏற்கத் தயங்குகிறார். அதுமட்டுமல்ல, பீகார் இயக்கம் போன்ற இயக்கங்கள் நாடு முழுவதும் பரவ எதிர்க் கட்சிகளின் ஒத்துழைப்பையும் கோரிப் பெற்றிருக்கிறார். ராமன் ஆண்டால் என்ன ராவணன் ஆண்டால் என்ன என்ற மக்களின் ஏனோதானோ மனப்பான்மையிலிருந்து அவர்களைத் தட்டி எழுப்ப இப்படிப்பட்ட இயக்கம் தேவை என்று ஜே. பி. கருதுவதாகத் தோன்றுகிறது. ஆனால் இவையெல்லாம் அடிமைப்பட்ட நாட்டில்தான் சரி; சுதந்திர பாரதத்தில் நிலைமை வேறு. இதோ தேர்தல் வந்து கொண்டேயிருக்கிறது. அங்கே வெற்றிக்கு வழிகோலுவதை விடுத்துக் கதவடைப்பு ஏன், மக்களுக்கும் நாட்டுப் பொருளாதாரத்துக்கும் கஷ்ட நஷ்டம் ஏன்?

அதிலும் கொரில்லாப் போர் முறைக்கும் தயாராகுமாறு ஜே. பி. அறைகூவல் விடுக்கும்போது, வாக்குத் தவறியதா அல்லது வயதான கோளாறா என்றே கேட்கத் தோன்றுகிறது. பாராளுமன்ற ஜனநாயகத்தில் தமக்கு ஆழ்ந்த நம்பிக்கை உண்டு என்றும் சமகால சர்க்கார் அமைக்கப் போவதாகத் தாம் சொல்லவே இல்லை என்றும் கூறிய வாயால் கூடவே கொரில்லாப் போர் முறை பற்றியும் பேச அவர் எப்படித் துணிந்தார்?




D.C.G.49 TM (R)

## கால்கேட் டென்டல் க்ரீமின் மூலம் வாய் துர்நாற்றத்தைத் தடுத்திடுங்கள்... நாள்முழுவதும் பற்சிதைவை எதிர்த்திடுங்கள்!

கால்கேட் 10க்கு 7 பேர்களில் வாய் துர்நாற்றத்தை உடனடியாக அகற்றுகிறது என்றும், உணவு உட்கொண்டவுடன் கால்கேட் முறையில் பற்களைத் துலக்குவதால், இதுவரை பற்பசை வரலாற்றிலேயே கண்டிராத பேரளவில் ஏராளமானவர்களுக்கு பற்சிதைவு தடுக்கப் படுகிறது என்றும் விஞ்ஞான சோதனைகள் நிரூபித்துள்ளன. ஏனெனில், ஒரே தேய்ப்பில் வாய் துர்நாற்றத்தையும், பற்சிதைவையும் விளைவிக்கும் கிருமிகளை 85 சதவீதம் வரை, கால்கேட் டென்டல் க்ரீம் அகற்றி விடுகிறது.
அதன் விந்தைமிக்க பெப்பர்மின்ட் சுவையே தனி—
கால்கேட் டென்டல் க்ரீம் கொண்டு குழந்தைகள் தவறாமல் பல்துலக்க விரும்புவதில் வியப்பென்ன!
தூய்மையான இனிய மூச்சுடனே, வெண்மையான பற்களையும் பெற்றிடவே...

வெண்மையான பற்களையும் ஆரோக்கியமான ஈறுகளையும் தூய்மையான இனிய மூச்சையும் பெற்றிடவே **கால்கேட் டூத் ப்ரஷ்களை** உபயோகியுங்கள்! உங்கள் குடும்பத்தில் ஒவ்வொருவருக்கும் ஏற்றவாறு அமைய—16 ரகங்கள்.

**உலகிலேயே அதிக மக்கள் மற்றெந்த பற்பசையையும் விட, கால்கேட் பற்பசையையே வாங்குகிறார்கள்!**

# ஓர் அழகிய அகவாழ்க்கை

## மாஸ்தி வேங்கடேச அய்யங்கார்

நமது நாட்டில் தோன்றிய மிகப் பெரிய மனிதர்களுள் ராஜாஜி ஒருவர். அந்தப் பெருமையை அவர் தமது அபாரமான அறிவாற்றலாலும் முக்கியமான லட்சியங்களில் தமக்கிருந்த பற்றுதலாலும் அந்தப் பெரிய லட்சியங்களுக்குத் தாம் செய்த தியாகங்களாலும் அடைந்தார். நமது நாட்டின் ஒரே இந்திய கவர்னர் ஜெனரல் அவர்தான். மேலும் பல உயர் பதவிகளையும் வகித்தார். ஆனால் அவையெல்லாம் அவரது மாட்சிமைக்கு அணிகலன்களே தவிர அந்தப் பதவிகளால் அவர் மேன்மையுறவில்லை.

இவரைப் போன்ற பெரிய மனிதர்களின் பொது வாழ்வு அவர்களது அக வாழ்க்கையை மறைத்து அதை முக்கியமற்றதாகத் தோன்றச் செய்து விடும். ஆனால் உண்மையில் அவர்களது அகவாழ்வும் சமமான முக்கியத்துவம் பெற்றதேயாகும். நான் அறியும் பாக்கியம் பெற்ற பெரிய மனிதர்களுள் ராஜாஜியின் அகவாழ்க்கை மிக அழகான ஒன்று.

1900க்கு முற்பட்ட நாட்களில் ராஜாஜி சென்ட்ரல் கல்லூரி மாணவர். டெய்ட் அப்போது ஆங்கிலப் பேராசிரியர். நவரத்ன ராமராவ் அதே கல்லூரியில் அந்நாளில் படித்தார். ராஜாஜியும் நவரத்ன ராமராவும் ஒரே வகுப்பில் படித்தவர்கள் அல்ல. ராஜாஜி பெரிய வகுப்பில் இருந்தார். ஆனால் ராமராவ் ரொம்பக் கெட்டிக்கார மாணவர். விளையாட்டிலும் திறமை மிக்கவர்; தோற்றமும் எடுப்பாயிருக்கும். எனவே ராஜாஜி ராமராவின் நட்பை நாடினார். இதன் தொடர்பாக ஒரு நீடித்த நட்பு உருவாயிற்று. அதற்கு 1960ல் ராமராவ் காலமானபோதுதான் முடிவு ஏற்பட்டது. ராமராவின் மறைவு அவரது குடும்பத்துக்கு ராஜாஜியை நண்பராகவும் காப்பாளராகவும் ஆக்கியது. தமது குழந்தைகளின் நலனில் பெற்றோர் அன்புள்ளத்துடன் அக்கறை கொள்வது போலவே ராஜாஜி ராமராவின் மக்களுடைய வாழ்க்கையைக் கவனித்து வந்தார்.

பிற்காலத்தில் ராமராவ் என்னையும் நண்பனாக ஏற்றார். நானும் பேராசிரியர் டெய்ட்டின் மாணவன். அவர் சுபாவத்தில் ஏதோ ஒரு விசித்திர அம்சம் இருந்தது. அதன் விளைவாக அவரிடம் அக்கறை கொண்ட மாணவர்கள் தங்களுக்குள் ஒருவர் மீது ஒருவர் அக்கறை கொள்ளவும் செய்தனர். நான் ராஜாஜியின் நட்பையும் தேடினேன். அதைப் பெறும் பாக்கியசாலியானேன். ராமராவ் தமது வாழ்நாள் முழுதும் நண்பராய் விளங்கிய ராஜாஜியைப் பற்றி அடிக்கடி என்னிடம் பேசுவார். ஆழ்ந்த அன்பும் அபரிமித மரியாதையும் பெருமிதமும் தொனிக்க வியந்து போற்றுவார். ராமராவுக்கு ராஜாஜிதான் அன்றைய மிகப்பெரிய இந்தியர். 'காந்திஜியை விடவும் பெரியவரா?' என்று சிலர் வினவலாம். ராஜாஜியை ராமராவ் இந்தவிதமாக என்னிடம் வர்ணித்தபோது காந்திஜி உயிருடன் இல்லை. எனவே, அந்தக் கேள்வியை எழுப்ப எனக்குத் தோன்றவில்லை. அந்த வர்ணனையைச் சரியான விதத்தில் நாம் அர்த்தம் செய்து கொண்டால் அந்தக் கேள்வி எழவும் நியாயமில்லை. ஒரு மனிதனின் மாண்பினை நாம் அளவுகோல் கொண்டு அளப்பதில்லை. அது, அம்மனிதர் நம் மனத்தில் ஏற்படுத்துகிற உணர்வுகளைப் பொருத்த விஷயம். ராமராவ் ஓர் அன்னியோன்னிய நண்பர் என்ற விதத்தில்தான் பேசினார். ஆனால் ஒரு மனிதனை எடை போடுவதில் தமக்கு இருக்கும் ஆற்றலை நட்பு மட்டுப்படுத்த அவர் அனுமதிக்கக் கூடியவரல்ல.

ராஜாஜி பற்றி ராமராவ் கூறப் பல விஷயங்களை நான் கேட்டிருக்கிறேன். அவற்றில் இரண்டை மட்டும் இங்கு எழுதுகிறேன். அந்தச் சம்பவங்கள் ராஜாஜியின் சுபாவ அழகை வெளிப்படுத்துவனவாகவே எனக்குத் தோன்றுகின்றன.

ஒரு சமயம் மத்தியான நேரத்தில் ராஜாஜி ரயில் பிரயாணம் செய்து கொண்டிருந்தார். நல்ல வெய்யில். அதே பெட்டியில் வேறு பயணிகளும் இருந்தனர். ஒருவன் ஆங்கிலேயன். அவனுக்கு ஏகமாக வியர்த்துக் கொட்டியது. கொஞ்ச தூரம் போன பிறகு அவன் ''அப்பப்பா! என்ன உஷ்ணம்!'' என்றான் ராஜாஜியைப் பார்த்து.

''இந்த உஷ்ணம் போதவில்லையே!'' என்றார் ராஜாஜி.


''போதவில்லையா? என்ன சொல்கிறாய்?'' என்று அவன் வினவினான்.

''ஆங்கிலேயர்களாகிய உங்களை இந்த நாட்டிலிருந்து வெளியேற்றும் அளவுக்கு உஷ்ணமாயில்லையே!'' என்றார் ராஜாஜி.

சக பிரயாணி கோபமடைந்திருக்கலாம். ஆனால் ராஜாஜி இதைப் புன்னகையுடன் கூறியதால் அதன் தாக்குதல் வேகம் குறைந்தது.

ராஜாஜி ஒரு முறை காரோட்டிச் சென்று கொண்டிருந்தார். மோட்டார் சைக்கிளில் பின்னால் வந்து கொண்டிருந்த ஓர் ஆங்கிலேயன் அவரை முந்தப் பார்த்துப் பல முறை ஹாரன் அடித்தான். சாலை குறுகலாயிருந்தது. ராஜாஜியால் அவனுக்கு வழிவிட்டு ஒதுங்க முடியவில்லை. மோட்டார் சைக்கிள் ஆசாமி காரை எப்படியும் முந்திவிடுவது

ராம ராவ் — ராஜாஜி



எனத் தீர்மானித்து இடது பக்கமாக முந்த முற்பட்டான். ராஜாஜி அவனுக்குப் பாடம் கற்பிக்கத் தீர்மானித்தார். மோட்டார் சைக்கிள் காருக்குப் பக்கத்தில் வந்தபோது காரை இடது பக்க ஓரமாய் ஓடித்து மோட்டார் சைக்கிள் ஆசாமியை மடக்கினார். அவன் வாகனத்தை நிறுத்திக் கீழிறங்க வேண்டியதாயிற்று.

அவனுக்கு ஒரே கோபம். "வேண்டுமென்றே நீ இப்படிச் செய்தாய்" என்று கூச்சலிட்டான்.

"ஆமாம், வேண்டுமென்றேதான் செய்தேன். வலது பக்கம் நீ முந்துவதற்கு இடமில்லையானால் இடது பக்கமும் இல்லைதான்" என்றார். இதையும் புன்சிரிப்புடன் கூறினார்.

நவரத்ன ராமராவ் இந்தக் கதைகளைக் கூறி விட்டுச் சிரிப்பார். நானும் அவருடன் சேர்ந்து சிரிப்பேன்.

இவை ராஜாஜியின் இளமைக் காலத்தில் நடந்தவை. அவர் கவர்னர் ஜெனரலான பிறகு நடந்த ஒரு நிகழ்ச்சி இதே போன்று அவரது அக வாழ்வின் சுபாவ அழகைக் காட்டுகிறது. அந்நாட்களில் அவர் ஒரு முறை பங்களூர் வந்தார். கார் சாலையில் மெதுவாகப் போய்க் கொண்டிருந்தது. இரு பக்கமும் ஏகக் கூட்டம். திடுமென்று ஒருவன் கரம் கூப்பியபடி கூட்டத்தைவிட்டு விலகிக் காரை நோக்கிப் பாய்ந்தான். போலீஸார் தடுத்தார்கள். ஆனால் ராஜாஜி அவனை உடனே இனம் கண்டு கொண்டார். முப்பது ஆண்டுகளுக்கு முன்னும் தம்மிடம் பணியாற்றிய சமையல்காரன் ராஜா அய்யங்கார் தான் அவன் என்று புரிந்து கொண்டார். அவன் அவரிடம் வேலை செய்த போது ராஜாஜி பிரபல வழக்கறிஞர். அவர் அத் தொழிலைவிட்டு விடுதலைப் போரில் ஈடுபட்ட போது அவனும் அவரைவிட்டுப் பிரிந்தான்.

இப்போது கவர்னர் ஜெனரல் தமது காரை நிறுத்தி, அவனை அருகே அழைத்துத் தமது ஜாகைக்கு வருமாறு கூறினார். அங்கே அவன் வந்த போது அவனைப் பற்றியும் அவன் குடும்பத்தைப் பற்றியும் குசலம் விசாரித்துத் தமது அன்பளிப்பாக நூறு ரூபாய் கொடுத்தார்.

**ரா**மராவுக்கும் ராஜாஜிக்கும் இருந்த நட்பு பற்றி எத்தனையோ விஷயங்களை எழுதலாம். ஆனால் ராமராவின் இறுதிக் காலத்தையொட்டிய உருக்கமான நிகழ்ச்சியை மட்டும் குறிப்பிடுகிறேன். ராமராவ் உடல் நலம் குன்றிப் படுத்தபோது ராஜாஜி அவ்வரைப் பார்க்க வந்தார். அப்போது ராஜாஜிக்கு ரொம்ப வேலை. பெல்காம் மாவட்டத்தில் பல இடங்களில் அவர் பொதுக் கூட்டங்களில் பேசவேண்டியிருந்தது. தமது இறுதி நெருங்குவதை உணர்ந்த ராமராவுக்கோ தமது நெடுநாள் நண்பர் அருகிலேயே இருக்க வேண்டும் என்ற ஆசை. ராஜாஜிக்கும் அதுவேதான் விருப்பம். ஆனால் கடமை அவரை அழைத்தது. ராமராவோ விடமாட்டார். எனவே, நண்பரிடம் சொல்லிக் கொள்ளாமல் அவரது குடும்பத்தினரிடம் மட்டும் விஷயத்தை விளக்கி விட்டுப் போனார். ராஜாஜி பெங்களூரை விட்டுப் போகவில்லை என்றும் அங்கேயே சில பொதுக் கூட்டங்களில் கலந்து கொள்ளச் சென்றிருப்பதாயும் சீக்கிரம் வந்துவிடுவார் என்றும் அவர்கள் ராமராவிடம் கூறினார்கள். ஆனால் எத்தனை நாள் உண்மையை மறைக்க முடியும்? ராமராவுக்குப் புரிந்துவிட்டது. கடமை உணர்வு நட்புணர்வையும் வெற்றிகொண்டுவிட்டிருப்பதை அவர் அறிந்து கொண்டார்.

ராஜாஜி நண்பரிடம் அவர் கண்களை மூடு முன்னர் திரும்பிவிடப் பிரயாசைப்பட்டார். ஆனால் அதற்கு முன்பாகவே ராமராவ் காலமான செய்தி அவருக்கு எட்டியது. பங்களூருக்கு மனமுடைந்து வேதனை உள்ளத்தோடு வந்து சேர்ந்தார். தமது நண்பரின் கடைசி விருப்பத்தைப் பூர்த்தி செய்ய முடியாது போயிற்றே; அவரது கடைசிக் காலத்தில் அவருடனேயே இல்லாமல் போய் விட்டோமே என்ற வேதனை ராஜாஜியை ஆட்கொண்டது.

ஓர் ஆங்கிலேயக் கவி நெப்போலியனைப் பற்றிக் கூறுகையில், அவனது வெற்றிகளைப் பற்றி எண்ணிப் பார்ப்பதைவிட அவன் அக வாழ்வு பற்றி நினைப்பது சிலாக்கியமானது என்கிறான். ஆனால் ராஜாஜியைப் பொருத்த மட்டில் அவரது புற வாழ்வின் மேன்மைகளைக் குறித்து எண்ணுவது எவ்வளவு சிலாக்கியமானதோ அதே அளவுக்கு அவரது அக வாழ்வின் அழகுகளைப் பற்றிச் சிந்திப்பதும் சிலாக்கியம்தான் என நான் அடிக்கடி நினைப்பது உண்டு.

ஆங்கிலத்திலிருந்து தமிழாக்கம்: குட்டி கிருஷ்ணன்

ராஜாஜி சிந்தனை

## முடிவான முக்கியமான கேள்வி!

..கடந்த பதினேழு ஆண்டுகளில் எத்தனையோ ஆயிரம் கோடி ரூபாய்களை நமது அரசாங்கம் செலவிட்டிருக்கிறது என்பது அனைவருக்கும் தெரியும். இதில் மக்கள் செலுத்திய வரிப் பணமும் உண்டு. அயல்நாடுகளிலும் உள்நாட்டிலும் கடன் வாங்கிய பணமும் உண்டு. இத்தனை செலவழித்தும் பதினேழு வருஷங்களுக்கு முன்பிருந்ததை விடச் சந்தோஷமாக இன்று மக்கள் இருக்கிறார்களா? முன்பிருந்ததை விடச் சிலர் அதிகப் பணக்காரர்களாகி யிருக்கிறார்கள் என்பது வாஸ்தவம்தான். ஆனால் பொது மக்கள் முன்பிருந்ததைவிட இன்று அதிகச் சந்தோஷத்தோடு இருக்கிறார்களா? இதுவல்லவோ கேட்கப்பட வேண்டிய முடிவான முக்கியமான கேள்வி? மற்றதெல்லாம் வெறும் மாயை, ஏமாற்று!

சுயராஜ்யா, செப்டம்பர் 11, 1965

# துளசி மணம்

மதுராபுரியில் ஒரு நந்தவனம்.

நந்தவனத்தில் துளசிச் செடிகளும் ரோஜாச் செடிகளும் இன்னும் பல வகையும் அடர்ந்து வளர்ந்து வந்தன.

விஷ்ணு பக்தர் ஒருவர் வந்து தினமும் குடலை நிறையத் துளசி பறித்து எடுத்துக் கொண்டு போவார். அரண்மனைப் பெண்கள் ரோஜாப் பூவைப் பறித்துப் போவார்கள்.

துளசிச்செடியைப் பார்த்து ரோஜாப் பூ கொஞ்சம் இறுமாப்போடு பேசிற்று: ''ஏன் ராஜகுமாரிகள் உன்னை நெருங்குவதில்லை? வெறும் இலையாகப் படர்ந்திருக்கிறாய்; சிவப்பாகப் பூப்பூத்தாயானால் உன்னையும் லட்சியம் செய்வார்கள்'' என்றது.

''ஏழைப் பிராமணன் பக்தியே எனக்குப் போதும். சுவாமியின் பாதத்தில் என் கொழுந்துகள் போய்ச் சேருகின்றன. அதைவிட என்ன வேண்டும்?'' என்றது துளசி.

ராஜகுமாரியின் தலையில் கூந்தலை அலங்கரிக்கும் கௌரவம் பெரிதென்று ரோஜாச் செடி நினைத்தது. 'இந்தத் துளசிச் செடிக்குத் தெரிந்தது இவ்வளவுதான்' என்று அதற்கு மேல் ரோஜாச்செடி பேசவில்லை

* * *

ஒரு நாள் ராஜாவினுடைய கடைசிக் குமாரத்தி – சிறு குழந்தை – தானே பூப் பறிக்க வேண்டும் என்று ஆசைப்பட்டு நந்தவனத்துக்கு வந்தாள். பூப்பறிக்கும் போது கையில் முள் தைத்தது. வலி பொறுக்க முடியாமல் அழுதாள். கூட வந்தவர்கள் குழந்தையை அரவணைத்து அரண்மனைக்கு எடுத்துப் போனார்கள்.

ராஜாவுக்குத் தன் அருமைக் குழந்தையின் கையில் ரத்தத்தைப் பார்த்து வெகு கோபம் உண்டாயிற்று. ரோஜாச் செடியில் முள் இருப்பது அரசனுக்குத் தெரியாது. அவன் தோட்டத்துக்குப் போவதில்லை. ரோஜா மாலைகளைத்தான் கண்டவன்.

''இந்த முள் செடியிலா ரோஜாப் பூ உண்டாகிறது? அது இனி நம்முடைய நந்தவனத்தில் வேண்டியதில்லை. பிடுங்கி எறிந்துவிடுங்கள்!'' என்று உத்தரவிட்டான் அரசன்.

ராஜா முரட்டுத்தனக்காரர். ஆனபடியால் யாரும் தடை சொல்லவில்லை. சேவகர்கள் நந்தவனத்திலிருந்த ரோஜாச் செடிகளையெல்லாம் பிடுங்கி எறிந்து விட்டு அரசனுக்குத் தெரிவித்தார்கள். அவனும் ''ரொம்பச் சரி!'' என்று சொல்லி விட்டான்.


துளசிச் செடி மட்டும் நந்தவனத்தில் நின்றது. ''ஐயோ பாவம்!'' என்று அரண்மனையை நம்பிய ரோஜாச் செடியின் கதியைக் கண்டு துயரப்பட்டது. வழக்கம் போல் துளசி பறிக்க வந்தவர் 'இன்று என்ன துளசி அதிக வாசனையாக இருக்கிறதே!' என்று வியந்தார்.

துளசியினுடைய துயரம்தான் அப்படி மணமாக வீசுகிறது என்று அவருக்குத் தெரியாது!



சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்

# யூகோபாங்கின் உதவிக் கரம்-




## இப்பொழுது உங்கள் டெபாஸிட், 14% அதிகமாக பயனுடைய வட்டியைப் பெற முடியும்

உங்கள் சேமிப்புகளை வளர்க்க விரும்பினால் யூகோபாங்க், எல்லா வாய்ப்புகளையும் வழங்குகிறது. இப்பொழுது உங்கள் ஃபிக்ஸட் டெபாஸிட் வட்டியை, ரெக்கரிங் டெபாஸிட் திட்டத்துடன் இணைப்பது மூலம் 14%க்கும் அதிகமான பயனுடைய வட்டியைப் பெற முடியும். அல்லது உங்களது டெபாஸிட்டை எங்களது கேஷ் டெபாஸிட் ஸர்டிஃபிகேட் திட்டத்தின் மூலம் 15 வருடங்கள் பூர்த்தி ஆன பிறகு நான்குமடங்குக்கு மேல் அதிகப்படுத்திக் கொள்ளலாம். வட்டி வருமானமோ 23%க்கு மேல்!


இவை தவிர, எங்களது துரிதமான - நேரடியான சேவைகளுடன் சேமிப்புகள், ஃபிக்ஸட் டெபாஸிட் மற்றும் ரெக்கரிங் டெபாஸிட் திட்டங்களும் எல்லா யூகோபாங்க் கிளைகளிலும் இயங்கிவருகிறது.

விவரங்களுக்கு அருகிலுள்ள யூகோபாங்க் கிளையுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

UCOC-39 TAM

**யுனைடெட் கமர்ஷியல் பாங்க்**

தாங்களே தங்களுக்கு உதவ மக்களுக்கு லாபகரமாக உதவுகிறது



# மகாலக்ஷ்மி 5

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி
சங்கராசாரிய சுவாமிகள்

வித்யாரண்யர் சகல சாஸ்திரமும் அறிந்தவர். அவற்றில் சகுன சாஸ்திரம் ஒன்று. அதனால் பெரிய சநாதன தர்ம சாம்ராஜ்யம் அமைக்க அப்போதே உரிய சமயம் வந்து விட்டது என்று தெரிந்து கொண்டார். இன்ன இடத்தில் இன்னாரைக் கொண்டு அதை ஸ்தாபிக்க வேண்டும் என்றும் அவருக்கு ஸ்புரித்தது. அதன்படி அங்கே ஆடு மேய்க்கிற இரு குறும்பர்களைப் பார்த்து இவர்களே புதிய ராஜ்யத்தில் அரசாள வேண்டியவர்கள் என்று தீர்மானித்துக் கொண்டார். அண்ணன், தம்பிகளான அந்த இரண்டு பேருக்கு ஹரிஹரன், புக்கன் என்று பெயர். அந்த துங்கபத்திரைப் பிரதேசத்திலேயே ஓரிடத்தில் ராஜதானியை ஸ்தாபித்து, அந்த இரண்டு பேரையும் அங்கே ராஜாக்களாகப் பட்டாபிஷேகம் செய்து வைத்தார். அந்த இடம் தான் ஹம்பி. ''ஹம்பி ரூயின்ஸ்'' என்று அதன் இடிபாடுகளை இப்போதும் வெளி தேசங்களிலிருந்து வருகிறவர்கள் கூடப் பார்த்து வியக்கிறார்கள். பம்பாசரஸ் என்று ராமாயணத்தில் வரும். அது கிஷ்கிந்தையைச் சேர்ந்த இடம். மற்ற மொழிகளில் 'ப'வாக இருப்பது கன்னடத்தில் 'ஹ' ஆகும். தமிழில் 'பால்' என்பது கன்னடத்தில் 'ஹாலு'. நம்முடைய 'பவளம்' அவர்களுக்கு 'ஹவளம்'. இப்படியே 'பம்பா'தான் 'ஹம்பா'. — இன்றைய ஹம்பி. மகாலக்ஷ்மியின் அனுக்கிரகத்தால் கிடைத்த ஐசுவரியத்தைக் கொண்டு ராஜ்ய பரிபாலனம் பண்ணவும், பெரிய சைனியம் திரட்டித் துருக்கரை எதிர்த்துப் போரிடவும் வசதி கிடைத்தது. வித்யாரண்யர் ராஜ்ய ஸ்தாபனத்தின் போதே அது பெரிய வெற்றி அடையும் என்று அதன் ஜாதகத்தை கணித்து விட்டார். அதற்கேற்றாற் போல் அது விஜயநகர சாம்ராஜ்யம் என்றே பெயர் பெற்று ஓங்கி வளர்ந்தது. ஆனால் அது அதற்கு ஆதிகாலப் பேரில்லை. வித்யாரண்யரை குருவாகக் கொண்ட ஹரிஹர, புக்கர்கள் அந்த ராஜ்யம் அவருக்கே சொந்தமென்று கருதி அதற்கு 'வித்யாநகர சாம்ராஜ்யம்' என்று அவர் பெயரையே வைத்தார்கள். பிற்பாடு அது விஜயநகரமாயிற்று. தற்போது விசாகப்பட்டினத்துக்குப் பக்கத்தில் ஒரு விஜயநகரம் இருக்கிறது. பலர் இதை விஜயநகர சாம்ராஜ்யத்தோடு குழப்பிக் கொண்டிருக்கிறார்கள். இது வேறு, அது வேறு. நான் சொல்லும் சாம்ராஜ்யம் பெல்லாரி ஜில்லாவை மையமாகக் கொண்டு அமைந்தது. வித்யாரண்யரின் ஆலோசனைப்படியே நடந்து, ஹரிஹர, புக்கர்கள் ராஜ்யத்தை விஸ்தரித்தார்கள். இந்த இருவரின் ஒன்று விட்ட சகோதரனான கம்பண்ணனை வித்யாரண்யர் சேநாதிபதியாக நியமித்தார். அவனைத் தென்னாட்டுக்கு அனுப்பி வைத்துத் துருக்கப் படைகளை வெற்றி கொள்ளச் செய்தார். அப்படியே இவன் சிதறுண்டு போன ராஜ்யங்களை யெல்லாம் ஒன்று சேர்த்தான். 'கம்பண்ண உடையார்' என்று அவனைச் சொல்வார்கள். இந்த உடையார் பட்டம் மைசூர் ராஜாக்களுக்கும் உண்டாயிற்று.

வித்யாரண்யரின் ஆசீர்வாத பலத்தால் கம்பண்ண உடையார் ராமேசுவரம் வரைக்கும் திக்விஜயம் செய்திருக்கிறார். வழியில் தில்லி சுல்தானின் பிரதிநிதிகளோடு ஐந்தாறு யுத்தங்கள் செய்து ஜயசாலியாக ஆனார். மதுரையில்தான் பெரிய யுத்தம் நடந்தது. மதுரா நகர தேவதையே கம்பண்ணனுக்குப் பிரத்யட்சமாகி ஒரு வாளை அனுக்கிரகித்தது. அவருக்கு அத்தனை உபாசனா பலம். அதன் விசேஷத்தால்தான் மாலிக்காபூர் முதலானோர் செய்திருந்த நாசத்தையெல்லாம் அவர் தவிடுபொடியாக்கி, நம்முடைய கோவில்களை மறுபடி புதுப்பித்தார். தமிழ் ஜனங்களுக்குப் புதிய உற்சாகத்தைத் தந்து, வைதிக சம்பிரதாயத்துக்குப் புனர் ஜீவனம் தந்தார்.

திருச்சியில் சமயபுரத்துக்குப் பக்கத்தில் ஒரு கண்ணனூர் இருக்கிறது. அங்கே 'போச்சலேசுவரர்' என்று ஜனங்கள் சொல்லுகிற கோவிலுக்குப் போயிருந்தேன். 'போஜேச்வரர்'தான் இப்படிப் பெயர் மருவியிருக்கிறார் என்று தெரிந்து கொண்டேன். அந்தக் கோவில் கோபுர வாசலில் ''இந்தக் கோவிலைத் துலுக்கர்கள் நாசம் பண்ணுகிற காலத்தில் கம்பண்ண உடையார் ரட்சித்தார்'' என்று பொறித்திருப்பதைப் பார்த்தேன். அருகிலேயே உள்ள கம்பரசன்பேட்டை கூட கம்பண்ண உடையார் பேரில்தான் ஏற்பட்டிருக்க வேண்டும். அது வேதப் பிராமணர்களுக்கு இறையிலியாகத் தந்த ஊரானதால் இன்றும் 'கம்பராய சதுர்வேதி மங்கலம்' என்றே பத்திரங்கள் எழுதும்போது குறிக்கிறார்கள்.

National

# நிப்போ

கசிவுத்தடுப்புள்ள பேட்டரிகள்

## அதிக காலம் நீடித்திருக்கும் அபார சக்தி

நிப்போ ஹைப்பர், ஹை டாப் பேட்டரிகளிலே எலக்ட்ரோலிட்டிக் மேங்கனீஸ் டை ஆக்ஸைடு கூடுதலாகச் சேர்க்கப்பட்டுள்ளதால், பேட்டரி சக்தியும் ஆயுளும் பெருகுகின்றன, மின் கசிவு நேருவது அற்பசொற்பமே.

உலோகப் பாதுகாப்பு

காப்புரிமை கொண்ட கசிவுத தடுப்புள்ள நிர்மாண அமைப்புடைய நிப்போ பேட்டரிகள், உங்கள் கருவிகளுக்குக் கேடான கசிவைத் தடுத்திடும் பொருட்டு, உட்புறத்தில் வினைல் கேஸிங்கு பொருந்திய உலோக ஜாக்கெட் உடையவை.




ஜப்பான் நாட்டு நேஷனல்
கம்பெனியின் தொழில்நுட்பம்

தயாரிப்பாளர்கள்: இன்டோ நேஷனல் லிட்.

everest/939a/INL-tn.

# அப்பா

அ. கிருஷ்ணன்



மகள் லக்ஷ்மியுடன் ராஜாஜி. காந்தி ஆசிரமத்தில் எடுக்கப்பட்ட மிகப் பழைய படம். இன்று 'பொல பொல' வென்று உதிரும் நிலையில் உள்ளது!

"அம்மையே! அப்பா!
ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த
ஆரமுதே!" - திருவாசகம்

தன் குழந்தைகளுக்குத் தாயுமாகிப் பணி புரிந்தார் ராஜாஜி அவர்கள். அவர் அன்பு உலகளாவியதாக விளங்கி உலகத் தந்தையாகவே அவரை உருவாக்கியது நானறிவேன். இதைச் சரித்திரம் பேசும். ஆனால் எளியேனுக்கு அவர் அப்பாவாக, அறிவுரை வழங்கிய இரண்டொரு நிகழ்ச்சிகளை மட்டும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

1930ம் வருடம் நான் திருச்செங்கோடு காந்தி ஆசிரமத்தில் ஓர் ஊழியனாகச் சேர்ந்தேன். ஒரு சமயம் நான் அறையில் சமையல் செய்து கொண்டிருந்தபோது ஒரு பையன் கையில் ஒரு காகிதத்துடன் வந்து "இரண்டு பிரதிகள் நகலுடன் டைப் செய்து கொண்டு வரச் சொன்னாங்க பெரிய ஐயா" என்று என்னிடம் கொடுத்துப் போனான். அது அமெரிக்காவுக்கு அனுப்ப வேண்டிய ஒரு கடிதம். அப்போது அகில இந்திய மதுவிலக்குக் குழுவின் காரியதரிசியாக இருந்தார் ராஜாஜி. கொடுக்கப்பட்ட டிராப்டை டைப் செய்து கொண்டு போய் அவர் முன் வைத்தேன். படித்துப் பார்த்துக் கையெழுத்திட்டபடியே "சமையல் செய்துகொண்டிருந்தாயா?" என்றார். "ஆம்" என்றேன். "அது இதில் தெரிகிறது" என்று சொல்லிப் புன்முறுவல் செய்தார். டைப்ரைட்டரில் லெட்டர் பேப்பரைச் செருகும் போது என் இரண்டு கைக் கட்டை விரல்களிலும் ஒட்டியிருந்த கரி அதில் ரேகையைப் பதித்திருந்தது. அதைப் பார்த்ததும் நான் சிறிது கலவரமடைந்து, "வேறு டைப் செய்து கொண்டு வருகிறேன்" என்றேன். "வேண்டாம், ஒரு லெட்டர் பேப்பர் ஒரு அணா விலையாகிறது. அதை வீண் அடிக்க முடியாது. ஆபீஸ் உதவியாளனே சமையலும் செய்வான் போலும் என எண்ணிக் கொள்வார்கள். அவ்வளவுதானே!" என்று ஆங்கிலத்தில் சொன்னார். கவனக் குறைவாக இருக்கக் கூடாது. எதையும் வீணடிக்கக் கூடாது என்ற போதனைகளை, மறைமுகமாக, எவ்விதக் கோபமும் காட்டாமல், மன்னிக்கக் கூடிய தந்தையாக இருந்து போதித்ததாக உணர்ந்தேன்.



அப்பொழுதெல்லாம் காந்தி ஆசிரமமே அவருடைய தலைமை இருப்பிடம். அங்கிருந்துதான் நாட்டின் பல பகுதிகளுக்கும் தேசிய வேலை நிமித்தம் சென்று வருவார். ஒரு சமயம் டில்லிக்கோ பம்பாய்க்கோ சென்று சுமார் ஒரு மாதம் கழித்துத் திரும்பினார். அந்த இடைக்காலத்தில் நான் சிறிய மீசை வளர்த்திருந்தேன். மாலை நேரங்களில் பிரார்த்தனைக்குப்பின் சிறிது நேரம் பல விஷயங்கள் பற்றிச் சொல்வார். ஆசிரமத் தொண்டர்களும் பல கேள்விகளைக் கேட்பார்கள். அவரும் சுவாரஸ்யமாகப் பதில் சொல்லிக் கொண்டிருப்பார். அன்று மாலையில் திடீரென "சில பேர்களுக்கு மீசை எடுப்பாக, அமைப்பாக இருக்கும். சில பேருக்கு அது நன்றாயிராது" என்றார். ஸ்ரீ நாராயண ராவ் எப்போதும் மீசை வைத்திருந்தார். புதிதாக மீசை வைத்தவன் நான் ஒருவன்தான். ஆகவே நண்பர்கள் சிரித்தார்கள். நானும் மீசையைத் தடவிப் பார்த்துக் கொண்டேன். மறு நாள் நான் மீசையை எடுத்து விட்டேன் என்று சொல்லவும் வேண்டுமா? தந்தை மகனைத் திருத்திய விதம் எப்படி!



# உங்களுக்காக பிலிப்ஸ் வழங்கும் இந்த அபூர்வமான மியூஸிக் ஸிஸ்டம் பல அரிய சிறப்புகள் கொண்டது...



**இந்த பிலிப்ஸ் ஜீஎ:ப் 533 செய்து காட்டுவதை வேறெந்த ரெகார்டு பிளேயரும் செய்யமுடியாது.**

**மெயின்ஸ்-பாட்டரி ஸிஸ்டம் ஜீஎ:ப் 533**



இதில் மோனோ இசைத்தட்டு ஒலி பிரமாதமாக இருக்கும்; ஸ்டீரியோ கூடத்தான். இது ஸ்டீரியோ கார்ட்ரிஜ் மற்றும் அவுட்புட் வசதி கொண்டது. இதை உங்கள் ரேடியோவுடன் இணைத்துப் பாருங்கள். என்ன ஆச்சரியம்! இதோ ஸ்டீரியோ தயார்.



ஸ்டீரியோவாகவும் மாற்றிக்கொள்ளலாம்

இதை நேரடியாக டேப்-ரெகார்டிங் செய்யவும், பதிவு செய்ததைத் திருப்பிக் கேட்கவும் பயன்படுத்தலாம். மேலும், ஸ்டீரியோ, இரண்டுமே!

மெயின்ஸில் இயக்குங்கள்; அல்லது பாட்டரிகளில். மின்விசை நின்று விட்டால், இது தானாகவே பாட்டரிகளில் இயங்குகிறது.



இது எப்போழுதும் ஒரு சீரான வேகத்தில் இயங்குகிறது என்பதை நம்பலாம். இதை உறுதிப்படுத்துகிறது விசேஷ 'எலெக்ட்ரானிக் ஸ்பீட் 'கவர்னர்'

இசைத்தட்டின் ஒலி முடிந்ததும், இது தானாகவே நின்றுவிடுகிறது. இது மட்டுமா? இதில் வால்யூம் மற்றும் தொனிக் கட்டுப்பாடுகளும், வெவ்வேறு 3-ஸ்பீட்களும் உள்ளன.

இதை வீட்டிலும், வெளியிலும் இயக்கலாம். (இன்பமாகப் பொழுது போக்க, வசதியாக வெளியில் எடுத்துச் செல்லலாம் என்பதை எண்ணிப் பாருங்கள்!)

இதன் அழகிய தோற்றமே உங்களைக் கவர்ந்துவிடுமே! மரம், பிளாஸ்டிக் மற்றும் அலங்கார அலுமினியத்தில் அழகான அமைப்பு கொண்டது.

**இத்தனை சிறப்புகளும் கொண்ட பிலிப்ஸ் மெயின்ஸ்-பாட்டரி ஸிஸ்டம் ஜீஎ:ப் 533-ஐ, இவ்வளவு குறைந்த விலையில், பிலிப்ஸ் தொழில் நுட்பத் திறன் மட்டுமே உங்களுக்கு வழங்க முடியும்.**

இன்றே உங்கள் பிலிப்ஸ் வியாபாரியைக் காண்க.

# பிலிப்ஸ்

OSM 3464 TM

# சிவகாமியின் சபதம்

அமரர் கல்கி

### முப்பத்தோராம் அத்தியாயம்

## புலிகேசி ஓட்டம்

**மா**மல்லரும் பரஞ்சோதியும் ஆயனரின் அரண்ய வீட்டுக்கு எப்படி வந்து சேர்ந்தார்கள், என்ன மன நிலையில் வந்து சேர்ந்தார்கள் என்பதைச் சற்றுக் கவனிப்போம்.

மணிமங்கலம் போர்க் களத்தில் மகேந்திர பல்லவரின் சிறு படை அடியோடு நாசம் செய்யப்பட விருந்த தறுவாயில் மாமல்லரும் பரஞ்சோதியும் பாண்டியனைப் புறங் கண்ட குதிரைப் படையுடன் அங்கு வந்து சேர்ந்தார்கள். சற்று நேரத்துக்கெல்லாம் போர் நிலைமை அடியோடு மாறிவிட்டது. சளுக்க வீரர் பின்வாங்கி ஓட ஆரம்பித்தனர். அவர்களைத் தொடர்ந்து போய் அடியோடு அழித்துவிட்டு வர மாமல்லர் எண்ணிய சமயத்தில் போர்க் களத்தில் ஒரு மூலையில் மகேந்திர பல்லவர் மரண காயம் பட்டுக் கிடப்பதாகச் செய்தி கிடைத்தது. மாமல்லரும் பரஞ்சோதியும் அவ்விடத்துக்கு ஓடிப் பார்த்த போது, காயம்பட்ட மகேந்திரரைப் பக்கத்து மணிமங்கலம் கிராமத்திலிருந்த அரண்மனை வீட்டிக்குத் தூக்கிக் கொண்டு போய் சிகிச்சை செய்து வருவதாகத் தெரிந்தது. சிநேகிதர்கள் இருவரும் உடனே அவ்விடத்துக்குச் சென்றார்கள். சிறிது நேரம் சிகிச்சைகள் செய்த பிற்பாடு மகேந்திரர் கண் திறந்து பார்த்தார். புதல்வனைக் கண்டதும் முதலில் அவருடைய முகத்தில் மகிழ்ச்சி தோன்றியது. மறு கணத்திலே மகிழ்ச்சி பாவம் மாறி அளவற்ற வேதனையும் கவலையும் அந்த முகத்தில் பிரதிபலித்தன.

''மகனே! உனக்குப் பெரிய துரோகம் செய்துவிட்டேன்! என்னை மன்னிப்பாயா?'' என்று அவருடைய உதடுகள் முணு முணுத்தன.

''அப்பா! நீங்கள் கவலைப்படவேண்டாம். நாங்கள்தான் சரியான சமயத்



துக்கு வந்து சேர்ந்துவிட்டோமே! சளுக்கர்கள் சிதறி ஓடுகிறார்கள்!....'' என்று மாமல்லர் சொல்லும் போதே மகேந்திரர் நினைவை இழந்துவிட்டார்.

மாமல்லரும் பரஞ்சோதியும் மகேந்திர சக்கரவர்த்தியைப் பத்திரமாகக் காஞ்சி நகருக்குக் கொண்டு போக ஏற்பாடு செய்துவிட்டுப் போர்க்களத்தின் நிலைமையை ஆராய்ந்தார்கள். மகேந்திர பல்லவருடன் காஞ்சியிலிருந்து புறப்பட்டு வந்த சைனியத்தில் பெரும் பகுதி வீரர்கள் மணிமங்கலம் போர்க்களத்தில் வீர சுவர்க்கம் புகுந்துவிட்டதாக அறிந்தார்கள். சேனாபதி கலிப்பகை யாரும் அந்தப் போர்க்களத்திலேயே உயிர் துறந்த செய்தி தெரிய வந்தது. மேலே தாங்கள் செய்ய வேண்டியது என்ன என்று மாமல்லரும் பரஞ்சோதியும் யோசனை செய்தார்கள். காஞ்சி நகரைச் சுற்றிலும் இன்னும் பல இடங்களில் சளுக்க வீரர்களின் சிறு படைகள் ஆங்காங்கே கிராமங்களில் புகுந்து ஜனங்களை ஹிம்சித்துக் கொண்டிருப்பதாக அவர்களுக்குத் தகவல் தெரிய வந்திருந்தது. எனவே, அப்படிப்பட்ட கிராதக ராட்சதர்களை முதலில் ஒழித்துக் கிராமவாசிகளைக் காப்பாற்றுவது தான் தங்களுடைய முதற் கடமை என்றும் காலாட்படையும் வந்து சேர்ந்த பிறகு புலிகேசியின் பெரும் படையைத் தொடர்ந்து போகலாம் என்றும் தீர்மானித்தார்கள்.

அவ்விதமே மூன்று நாட்கள் சுற்றிச்



சுற்றி வந்து காஞ்சிக்குக் கிழக்கிலும் தெற்கிலும் மேற்கிலும் சளுக்கர் படையே இல்லாமல் துவம்சம் செய்தார்கள். இதற்குள்ளாகக் காலாட் படையும் வந்து சேரவே மீண்டும் வடக்கு நோக்கிப் புறப்பட்டார்கள். காஞ்சிக்கு வடக்கே மூன்று காத தூரத்தில் சூரமாரம் என்னும் கிராமத்துக்கு அருகில் ஒரு பெரும் போர் நடந்தது. இங்கே சளுக்கர் படைக்குத் தலைமை வகித்தவன் தளபதி சசாங்கன். இந்தச் சண்டையில் தளபதி சசாங்கனும் சளுக்க வீரர்களில் பெரும் பகுதியினரும் மாண்டார்கள். மற்றவர்கள் பின் வாங்கிச் சிதறி ஓடினார்கள். பல்லவர் படை அவர்களைத் துரத்திக் கொண்டு வெள்ளாறு வரையில் சென்றது. தளபதி சசாங்கனைப் பின்னால் நிறுத்திவிட்டுப் புலிகேசிச் சக்கரவர்த்தி முன்னதாகவே வெள்ளாற்றைக் கடந்து போய்விட்டதாக மாமல்லரும் பரஞ்சோதியும் அறிந்தார்கள். மாமல்லர் வெள்ளாற்றையும் கடந்து அப்பால் புலிகேசியைத் துரத்திக் கொண்டு போக விரும்பினார். கலிப்பகையின் மரணத்தினால் இப்போது பல்லவ சேனாதிபதியாகிவிட்ட பரஞ்சோதியார் அதற்கு ஒத்துக் கொள்ளவில்லை.

''பிரபு! சக்கரவர்த்தியை எந்த நிலைமையில் நாம் விட்டு விட்டு வந்தோம் என்பது தங்களுக்கு நினைவில்லையா? அவரை அப்படி விட்டு விட்டு நாம் நெடுகிலும் போய்க் கொண்டே யிருப்பது நியாயமா? கலிப்பகையும் போர்க்களத்தில் காலமாகிவிட்டார். நாம் இல்லாத சமயத்தில் சக்கரவர்த்திக்கு ஏதேனும் நேர்ந்துவிட்டால் பல்லவ இராஜ்யம் என்ன கதி ஆவது? சளுக்கர்களால் சூறையாடப்பட்டும் ஹிம்சிக்கப்பட்டும் தவித்துக் கொண்டிருக்கும் கிராமவாசிகளின் கதி என்ன? அவர்களுக்கு அன்னவஸ்திரம் அளித்துக் காப்பாற்றும் கடமையை யார் நிறைவேற்றுவார்கள்? மதுரைப் பாண்டியன் மீண்டும் பல்லவ இராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டான் என்பது என்ன நிச்சயம்? பிரபு! இதையெல்லாம் யோசித்துப் பார்த்து விட்டுச் சொல்லுங்கள்'' என்றார் பரஞ்சோதி.

மகேந்திரருடைய தேக நிலைமையைப் பற்றிக் குறிப்பிட்ட வுடனேயே மாமல்லருடைய மன உறுதி தளர்ந்து விட்டது. சற்று நேரம் தலை குனிந்தபடி சிந்தனையில் ஆழ்ந்திருந்தார். பின்னர், ''சேனாதிபதி! நீங்கள் சொல்வது உண்மைதான். அது மட்டுமல்ல. நாம் இப்போது நம் சைனியத்துடன் முன்னேறினால் அவர்களுக்கு வேண்டிய உணவுப் பொருள் இல்லை. போகும் வழியில் ஏற்கனவே சளுக்க அரக்கர்கள் கிராமங்களைச் சூறையாடிக் கொண்டு



போகிறார்கள். அவர்களுக்குப் பின்னால் நாமும் போனால் கிராமவாசிகள் எங்கிருந்து உணவு அளிப்பார்கள்? நாமும் சேர்ந்து அவர்களை ஹிம்சிப்பதாகவே முடியும். எல்லாவற்றுக்கும் காஞ்சிக்குத் திரும்பிச் சென்று தந்தையின் உடல் நிலை எப்படி இருக்கிறதென்று தெரிந்து கொள்வோம். தக்க ஏற்பாட்டுடன் பிறகு திரும்புவோம்'' என்றார்.

காஞ்சியை நோக்கித் திரும்பி வரும்போது ஆங்காங்கே கிராமங்களில் சளுக்க வீரர்கள் செய்துள்ள அக்கிரமங்கள் அவர்களுடைய கவனத்தைக் கவர்ந்தன. ஊர் ஊராக வீடுகளிலும் குடிசைகளிலும் வைக்கோற்போர்களிலும் அறுவடைக்கு ஆயத்தமாயிருந்த



வயல்களிலும் சளுக்கர்கள் தீ வைத்திருந்தார்கள். எங்கே பார்த்தாலும் ஒரே சாம்பல் மயமாயிருந்தது. பல்லவ நாடே ஒரு பெரிய பயங்கர ஸ்மசான பூமியாக மாறிவிட்டதாகத் தோன்றியது. இன்னும் சில கிராமங்களில் வீடுகள் தீப்பற்றி எரிந்து கொண்டிருந்தன. ஆங்காங்கு ஜனங்களின் அழுகைக் குரல் எழுந்தது. மாமல்லரையும் பரஞ்சோதியையும் கண்டதும் ஜனங்கள் உரத்த சப்தமிட்டுப் புலம்பத் தொடங்கினார்கள். சளுக்க வீரர்கள் செய்த பயங்கர அட்டூழியங்களைப் பற்றி ஆங்காங்கே சிலர் சொன்னார்கள். சிற்பிகள் கால் கை வெட்டப்பட்டது பற்றியும், இளம் பெண்கள் சிறைப் பிடித்துப் போகப்பட்டதுபற்றியும், ஆடு மாடுகள் வதைக்கப்பட்டது பற்றியும் ஜனங்கள் சொன்னதைக் கேட்டபோது கோபத்தினாலும் ஆத்திரத்தினாலும் மாமல்லரின் மார்பு வெடித்துவிடும் போல் இருந்தது. நாக்கு உலர்ந்து மேலண்ணத்தில் ஒட்டிக் கொண்டது. பரஞ்சோதியிடம் தமது கோபத்தையும் ஆத்திரத்தையும் வெளியிட்டு நாலு வார்த்தை பேசுவதற்குக்கூட மாமல்லரால் முடியாமல் போய்விட்டது.


சிற்பிகள் பலருக்கு நேர்ந்த கதியைப் பற்றிக் கேட்ட போது மாமல்லரின் இருதய அந்தரங்கத்தில், 'நல்லவேளை, ஆயனரும் சிவகாமியும் காஞ்சிக் கோட்டைக்குள் இருக்கிறார்களே' என்ற எண்ணம் ஓரளவு ஆறுதலை அளித்தது. எனினும், சிற்பங்கள் அழிக்கப்பட்டதைப் பற்றி அறிந்த போது மாமல்லபுரத்து அற்புதச் சிற்பங்களுக்கு என்ன கதி நேர்ந்ததோ என்ற ஐயம் உதித்து மிக்க வேதனை அளித்தது. அதை நேரில் பார்த்துத் தெரிந்து கொள்வதற்காக மாமல்லரும் பரஞ்சோதியும் அதிவிரைவாக மாமல்லபுரம் சென்றார்கள். அங்கே சிற்பங்களுக்கு அதிக சேதம் ஒன்றும் இல்லை என்று தெரிந்து கொண்டு காஞ்சிக்குப் பயணமானார்கள். மாமல்லபுரத்திலிருந்து காஞ்சிக்குப் போகும் வழியில் ஆயனரின் அரண்ய வீடு இருந்ததல்லவா? அந்த வீட்டையும் பார்க்க வேண்டும். அதிலிருந்த தெய்வீக நடனச் சிலைகளுக்கு ஒன்றும் சேதம் இல்லை என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்று மாமல்லர் விரும்பினார். ஆயனரின் வீட்டு வழியாகப் போவது காஞ்சிக்குக் குறுக்கு வழியாகவும் இருந்ததல்லவா ?

ஆயனர் வீட்டு வாசலுக்கு வந்ததும் கதவு திறந்திருப்பதைப் பார்த்தார்கள். உடனேயே இருவருக்கும் 'திக்' என்றது. வீட்டின் முன் பக்கத் தோற்றமே கலக்கத்தை உண்டாக்கிற்று. ஏதோ ஒரு மகத்தான விபத்தைப் பற்றித் தெரிந்து கொள்ளப் போகிறோம் என்ற உள் உணர்ச்சியுடன் வீட்டுக்குள்ளே பிரவேசித்தார்கள்.

உடைந்தும் சிதைந்தும் அலங்கோலமாகக் கிடந்த சிலைகளைப் பார்த்த போது இருவருக்கும் தங்களுடைய நெஞ்சு எலும்புகள் உடைவது போன்ற உணர்ச்சி உண்டாயிற்று. அவர்களுடைய காலடிச் சத்தத்தைக் கேட்டதும் படுத்திருந்த ஆயனர் எழுந்து நிமிர்ந்து உட்கார்ந்தார்.

காஞ்சியில் பத்திரமாக இருப்பதாக அவர்கள் எண்ணிக் கொண்டிருந்த

## நாங்கள் காட்டும் அத்தாட்சி இதோ:




## இதோ நீங்கள் காட்டும் அத்தாட்சி:




# ஸிக்னல் ஃப்ளூரைடு ஒன்றுதான் பற் சிதைவையும் வாய் நாற்றத்தையும் தடுத்துநிறுத்திக் காட்டுகிறது

## ஒப்புற்ற பல்சுத்திகரிப்பு மூலப் பொருளின் அடிப்படையிலே.

**பற்சிதைவை நிறுத்துகிறது ஸிக்னலில் உள்ள ஃப்ளூரைடு**

ஜெர்மனியிலே பல்டாக்டர்கள் கிங்கல், ஸ்டோல்டே....400 குழந்தைகளைக் கொண்டு பரிசோதனைகள் நடத்தி நிரூபித்தனர்: பற்சிதைவை 33 சத விகிதம் குறைத்தது ஸிக்னல் ஃப்ளூரைடு (ஆதாரம்: DAS DEUTSCHE ZAHNARZTEBLATT, 1968, 9, 445-460). எப்படி நிரூபித்தது ஸிக்னலின் ஃப்ளூரைடு? பல்லாறுமேலோடு அது ஒருங்கிணைகிறது: பற்கள் அரித்துப் போகவும், முடிவில் சிதைவுபடவும் முக்கிய காரணமான அமிலத் தாக்குதலை வலுவாக எதிர்த்து நிற்கிறது. ஸிக்னல் தேய்க்கும் சிறுவர்கள் பல்வலி என்றால் இன்னதென்றே அறியார். உங்கள் குடும்பத்தினருக்கும் இதுவன்றோ சுகாதாரப் ஸிக்னல் சிகிச்சையே முத்காப்பு.

**வாய்நாற்றத்தை நிறுத்துகிறது ஸிக்னல் உள்ள எஸ்-14**

அமெரிக்காவிலே டாக்டர் ஹாவர்டு E. விண்டு ... மருத்துவப் பரிசோதனைகளை நடத்தி நிரூபித்தார்: துலக்கிய 15 நிமிடங்களில் வாய்நாற்றக் கிருமிகளிலே 95 சத விகிதத்தை ஒழித்துக் கட்டியது ஸிக்னலின் எஸ்-14. 10 மணி நேரம் ஆனபின்னரும் வாய்நாற்றம் 75 சத விகிதம் குறைந்திருந்தது (ஆதாரம்: U.S.A., நார்த் வெஸ்டர்ன் யூனிவர்ஸிட்டி அறிக்கை 23 அக் 1968)

**ஸிக்னலுக்கே உரிய சுத்திகரிப்பு மூலப் பொருளால் பற்களுக்கு மருத்துவப் பரிசுத்தம்**

ஸிக்னலின் ஒப்பிலா மூலப் பொருளான அலுமினியம் ட்ரைஹைட்ரேட், பல் டாக்டரே துலக்கித் தந்தது போல் தூய்மை அளிக்கிறது. பல் எனாமலைப் பாதிக்காமலே (ஆதாரம்: ரிஸர்ச் ரிவியூ 7 மே 1969, வெளியீட்டோர் U.R. லெபாரட்டரீஸ், ஐல்வொர்த், U.K.) ஒப்பில்லாச் சுத்திகரிப்பு மூலப் பொருளிலே ஃப்ளூரைடு, எஸ்-14--இம் மும்மணிகளும் இணைபுமிடம்: ஸிக்னல் ஒன்றுதான். இன்னொரு பற்பசை இவ்வளவு செய்யாது.

**அத்தாட்சி காட்டுவது**

**ஸிக்னல் ஃப்ளூரைடு ஒன்றே— கேளுங்களேன் பல் டாக்டரை.**

லின்டாஸ்-SGF 63-140 TM



ஆயனரை இங்கே கண்டதனால் ஏற்பட்ட வியப்பு ஒருபுறமிருக்க, பயங்கரத்தால் வெளிறிய அவருடைய முகமும் வெறி கொண்ட அவருடைய பார்வையும் அவர்களுக்கு விவரிக்க முடியாத பீதியை உண்டாக்கின. ''என் சிவகாமி எங்கே ?'' என்று ஆயனச் சிற்பியார் கேட்டதும், மாமல்லருக்கு மலை பெயர்ந்து தலையில் விழுந்துவிட்டது போல் இருந்தது.

## முப்பத்திரண்டாம் அத்தியாயம்

# இரத்தம் கசிந்தது

**மா**மல்லர் கீழே விழுந்து விடுவாரோ என்ற பயத்தினால் பரஞ்சோதி அவருடைய கரத்தைப் பிடித்துக் கொண்டார். இருவரும் பேச நாவெழாமல் ஆயனரைப் பார்த்தபடியே நின்றார்கள்.

மீண்டும் ஆயனர், ''பல்லவ குமாரா! சிவகாமி எங்கே? என் செல்வக் கண்மணி எங்கே? ஆயனச் சிற்பியின் அருமைக் குமாரி எங்கே? மகேந்திர பல்லவரின் கலைகாரப் புத்திரி எங்கே? பரத கண்டத்திலேயே இணையற்ற நடன கலா ராணி எங்கே?'' என்று வெறி கொண்ட குரலில் கேட்டுக் கொண்டே போனார்.

மாமல்லருடைய உள்ள மானது பெரும் புயல் அடிக்கும்போது கடல் கொந்தளிப்பது போல் கொந்தளித்தது. ஆயினும் சிவகாமிக்கு என்ன நேர்ந்தது என்று தெரிந்து கொள்ளும் ஆவலினால் பல்லைக் கடித்து மனத்தை உறுதிப்படுத்திக்கொண்டு, பசையற்ற வறண்ட குரலில், ''ஐயா! தயவு செய்து மனத்தை நிதானப்படுத்திக் கொள்ளுங்கள். சிவகாமி எங்கே என்று நானல்லவா தங்களைக் கேட்க வேண்டும்? சிவகாமிக்கு என்ன நேர்ந்தது? சொல்லுங்கள்'' என்று கேட்டார்.

ஆயனருடைய வெறி அடங்கியது. அவருடைய உணர்ச்சி வேறு உருவங் கொண்டது. கண்ணில் நீர் பெருகிற்று. ''ஆமாம், பிரபு! ஆமாம்! என்னைத்தான் தாங்கள் கேட்க வேண்டும். சிவகாமியை இந்தப் பாவியிடம்தான் தாங்கள் ஒப்புவித்திருந்தீர்கள். நான்தான் என் கண்மணியைப் பறிகொடுத்து விட்டேன். ஐயோ! என் மகளே! பெற்ற தகப்பனே உனக்குச் சத்துருவானேனே!'' என்று கதறிய வண்ணம் தலையைக் குப்புற வைத்துக் கொண்டு விம்மினார்.

ஆயனரின் ஒவ்வொரு வார்த்தையும் நரசிம்ம வர்மரின் இருதயத்தை வாளால் அறுப்பது போல் இருந்தது. சிவகாமி இறந்து போய் விட்டாள் என்றே அவர் தீர்மானித்துக் கொண்டார்.

பொங்கி வந்த துயரத்துக்கும், ஆத்திரத்துக்கும் இடையே சிவகாமி எப்படி இறந்தாள் என்று தெரிந்து கொள்ளும் ஆவலும் எழுந்தது. ஒருவேளை சளுக்கர்களால் அவளுடைய மரணம் நேர்ந்திருக்கும் என்ற எண்ணம் மின்னலைப் போல் உதயமாகி அவருடைய உடம்பையும் உள்ளத்தையும் பிளந்தது.

**மீ**ண்டும் ஒரு பெருமுயற்சி செய்து மனத்தைத் திடப்படுத்திக்கொண்டார். அதிகார தொனியுடைய கடினமான குரலில், ''ஆயனரே! மறுமொழி சொல்லிவிட்டு அப்புறம் அழும். சிவகாமி எப்படி இறந்தாள்? எப்போது இறந்தாள்?'' என்று கர்ஜித்தார்.

''ஆஹா! என் கண்மணி இறந்து விட்டாளா?'' என்று அலறிக்கொண்டு



படுத்திருந்த ஆயனர் எழுந்து நிற்க முயன்றார். அவர் கால் தடுமாறியது. பயங்கரமாக வீரிட்டுக் கொண்டு தொப்பென்று தரையில் விழுந்தார்.

''இறந்து விட்டாளா?'' என்ற கேள்வியினால், சிவகாமி இறந்துவிடவில்லை என்ற உண்மை மாமல்லரின் மனத்தில் பட்டது. ஆயனர் அப்படி நிற்க முயன்று விழுந்தபோது, அவருடைய காலில் ஊனம் என்னும் விவரமும் மாமல்லருக்



குத் தெரிந்தது. இதனால் அவர் கல்லாகச் செய்து கொண்டிருந்த மனம் கனிந்தது. ''ஐயா! தங்களுக்கு என்ன?'' என்று கேட்டுக் கொண்டே ஆயனரின் அருகில் வந்து உட்கார்ந்தார்.

''ஐயோ தங்கள் கால் முறிந்திருக்கிறதே? இது எப்படி நேர்ந்தது?''என்று இரக்கத்துடன் வினவினார்.

''மலையிலிருந்து விழுந்து கால் முறிந்தது. என் கால் முறிந்தால் முறியட்டும். சிவகாமி இறந்து விட்டதாகச் சொன்னீர்களே! அது உண்மைதானா?'' என்று ஆயனர் கேட்டார். ''ஐயா! சிவகாமியைப் பற்றி எனக்கு ஒன்றுமே தெரியாது. நான் போர்க்களத்திலிருந்து நேரே வருகிறேன். நீங்களும் சிவகாமியும் காஞ்சியில் சௌக்கியமாக இருப்பதாக எண்ணி யிருந்தேன். நீங்கள் எப்படி இங்கே வந்தீர்கள்? சிவகாமியை எப்போது பிரிந்தீர்கள்? அவள் இறந்து போய்விடவில்லை யல்லவா?'' என்று மிகவும் அமைதியான குரலில் பேசினார் மாமல்லர்.

இதற்கு மாறாக, அலறும் குரலில், ''ஐயோ! சிவகாமி இறந்து போயிருந்தால் எவ்வளவோ நன்றாக இருந்திருக்குமே?'' என்றார் ஆயனர்.

''ஐயா! சிவகாமிக்கு என்னதான் நேர்ந்தது?''

''ஐயோ! எப்படி அதைச் சொல்வேன்? எல்லாம் இந்தப் பாவியால் வந்த வினைதான், பிரபு! சிவகாமியைச் சளுக்கர்கள் சிறைப்பிடித்துக் கொண்டு போய்விட்டார்கள்!''

''என்ன? என்ன?'' என்று மாமல்லர் கேட்ட தொனியில் உலகத்திலேயே கண்டும் கேட்டுமிராத விபரீதம் நடந்து விட்டது என்று அவர் எண்ணியது புலனாயிற்று.

''ஆம். பிரபு! சிறைப் பிடித்துக் கொண்டு போய் விட்டார்கள். தாங்கள் சளுக்கர்களைத் தொடர்ந்து போனது பற்றிக் கேள்விப்பட்டபோது, சிவகாமியை விடுவித்துக் கொண்டு வருவீர்களென்று நம்பி யிருந்தேன். என்னை ஏமாற்றி விட்டீர்கள். ஆனால் உங்கள் பேரில் என்ன தப்பு? எல்லாம் இந்தப் பாவியினால் வந்ததுதான். சித்திரம், சிற்பம் என்று பைத்தியம் பிடித்து அலைந்தேன். என் உயிர்ச் சித்திரத்தை, ஜீவ சிற்பத்தைப் பறி கொடுத்தேன்! ஐயோ! என் மகளுக்கு நானே யமன் ஆனேனே?''

இவ்வாறெல்லாம் ஆயனர் புலம்பியது மாமல்லரின் காதில் ஏறவேயில்லை. சிவகாமியைச் சளுக்கர் சிறைப்பிடித்துச் சென்றார்கள் என்னும் செய்தி ஒன்றுதான் அவர் மனத்தில் பதிந்திருந்தது. சிறிது நேரம் பிரமை பிடித்தவர் போல் உட்கார்ந்திருந்தார்.


பிறகு, தொண்டையைக் கனைத்துக் கொண்டு, மிக மெலிந்த குரலில், ''சிற்பியாரே! இதெல்லாம் எப்படி நடந்தது? காஞ்சியிலிருந்து நீங்கள் ஏன் கிளம்பினீர்கள்? சிவகாமி எப்படிச் சிறைப்பட்டாள்? உங்கள் கால் எப்படி ஒடிந்தது? அடியிலிருந்து எல்லாம் விவரமாகச் சொல்லுங்கள்!'' என்றார்.

ஆயனரும் அவ்விதமே விவரமாகச் சொன்னார். தட்டுத் தடுமாறி இடையிடையே விம்மிக் கொண்டு சொன்னார்.


மாமல்லர் கேட்டுக் கொண்டிருந்தார். அச்சமயம் உறையிலிருந்து எடுத்த கத்தியை அவர் கையில் வைத்துக் கொண்டிருந்தார். கத்தியின் கூரிய விளிம்பை அவர் இடக் கை விரல்கள் தடவிக் கொண்டிருந்தன. அவ்வாறு தடவியபோது விரல்களில் சில கீறல்கள் ஏற்பட்டன. அந்தக் கீறல்களில் கசிந்த இரத்தம் சொட்டுச் சொட்டாகத் தரையில் சொட்டிக் குட்டையாகத் தேங்கியது.

(தொடரும்)





# காற்சட்டைகள் இலவசமாகக் கிடைப்பதற்குச் சமம்




இது எப்படி என்று நீங்கள் ஆலோசித்திருக்க மாட்டீர்கள்... 'டெரீன்'® காற்சட்டைகள் சாதாரண காற்சட்டைகளை விட அதிகம் உழைக்கின்றன! உண்மையில் 'டெரீன்' துணிகள் மும்மடங்கு உழைக்கின்றன. அவற்றின் விலை கூடுதலாயிருப்பினும், தரச் சிறப்பு மிக்கவை. ஆகவே நீங்கள் துணிகள் வாங்கும்போது 'டெரீன்' ட்ரேட் மார்க்கைப் பார்த்து வாங்குவதால் பல வழிகளில் லாபம் அடைகிறீர்கள். 'டெரீன்' துணிகளுக்குச் சலவைச் செலவு இல்லை. அவற்றை இல்லத்திலேயே எளிதில் துவைக்க முடியும். இஸ்திரி அவசியமில்லை.

**துணிமணிகளிலுள்ள 'டெரீன்' ட்ரேட்மார்க் அவற்றின் தரச் சிறப்பை உறுதி செய்கிறது.**

**TERENE**

® 'டெரீன்'—கெமிக்கல்ஸ் அண்ட் ஃபைபர்ஸ் ஆப் இந்தியா லிமிடெடின் ரெஜிஸ்டர்ட் ட்ரேட்மார்க்

CHAITRA-CAFS-312 TAM

வழக்குமன்றம் வரை போன காதல் அது.

சிவா பி. ஏ. வகுப்பில் படிக்கிற போது தான் ராஜி பி.யு.ஸி.யில் படிக்கத் தொடங்கினாள். இருவரையுமே அந்தப் பொல்லாத மாலை வேளை பஸ் ஸ்டாண்டில் சந்திக்கச் செய்யும். இதில் ஓர் ஒற்றுமை என்னவென்றால், இருவருமே 25-ம் எண்ணுள்ள பேருந்தில் ஏறி நுங்கம்பாக்கத்தில் இறங்கக் கூடியவர்கள். காலாண்டு பரீட்சை வரை கண்கள் பேசி, அரையாண்டில் இதயப் பரீட்சை முடிந்து. நிறைவாண்டில் காதல் தேர்ச்சியடைந்து விட்டது.

ராஜி மாநிறமானாலும் வாளிப்பானவுடல். மிடுக்குடன் பேரழகியாய் விளங்கினாள். பதினேழு வயது தான் என்றாலும் பால் வியாபாரியின் மகளான அவள் இஷ்டத்துக்குப் பாலைக் குடித்து இருபது வயது மதிக்கத் தக்க அளவுக்கு உடற் கட்டுக்கோப்புடன் வளர்ந்திருந்தாள்.

ராஜியின் காதல் விவகாரம் ராஜகோபால் பிள்ளைக்குத் தெரிந்து விட்டது. பெண் படித்தது போதும் என்று பால் விற்ற காசு பழுதாகி விடாமல் நிறுத்தி விட்டார்.

உண்மையான காதல், கறந்த பாலுக்குச் சமானமாயிற்றே! சிவாவைச் சந்திக்க ராஜி துணிந்து விட்டாள். இதனால் ஒரு சங்கடம். சிவா அடிக்கடிக் கல்லூரிக்கு விடுமுறை போட்டு அதே 25-ம் எண் பேருந்தில் ஏறி கடற்கரையில் ஒரு பகுதியில் காதல் கேள்விகளுக்கான பதில்களைத் தயார் செய்ய நேர்ந்தது. இதன் முடிவு. ...

இரு தரத்துப் பெற்றோர்களும் மோதிக் கொள்ளும்படி யாயிற்று.

ராஜகோபால் பிள்ளை சற்று முரடர். மீசையை முறுக்கிக் கொண்டு, பால் கறப்பதற்குமுன் பசுவின் பின்னங் கால்களைக் கட்டுகிற கயிற்றுடன் தங்கராசு முதலியார் பங்களாவுக்குச் சென்று சத்தமிடத் தொடங்கி விட்டார். முதலியார் கொஞ்சம் மானஸ்தர். பிள்ளையைக் கண்டித்தார். முடியவில்லை. சத்தம் அதிகமாக அதிகமாக அவர் சொன்ன பதில் இதுதான்: ''பெண்ணை அடக்கத் தெரியாம ஏய்யா, இப்படிக் கூச்சல் போடறே ... இனிமே இப்படிக் கூச்சல் போட்டா, போலீசுக்குப் போக நேரிடும்..''

''யோவ், முதலியார், நியாயமா பேசய்யா ... அசிங்கமா முடிந்திடக் கூடாதில்லே....''

''அதையும் பெண்ணைப் பெத்த நீதான் யோசிக்கணும்!''

''அப்போ உன் புள்ளையை நான் பாக்கற வழியிலே பாத்துக்குவேன்.''

''பாத்துக்க...! நான் போலீசுக்குப் போகிற சிரமம் குறையும். போலீஸே உன் வீட்டுக்கு வந்துடும்.''

ராஜகோபால் பிள்ளைக்கு மீசை துடித்தது.

''உன்னைக் கோர்ட்டிலே பார்த்துக்கறேன் ஐயா...'' என்று கூறி, கயிற்றை ஓங்கித் தோளில் போட்டுக் கொண்டு புறப்பட்டு விட்டார்.

அவருக்கே தெரியும், மகளைக் கண்டித்துப் புண்ணியமில்லை என்று! திருமணமே செய்து கொள்ளப் போவதாக அவள் அவரிடம் — நேருக்கு நேர் சொல்லி விட்டாள். அவர் என்ன செய்ய முடியும்? பிள்ளை வீட்டாரையும் படிய வைக்க முடியாமல் போகவே, ஒன்றுமிரண்டுமாகச் ஜோடித்து இந்தக் காதல் விவகாரத்தை வழக்கு மன்றத்துக்குக் கொண்டு போய் விட்டார், எப்போதும் பெண் பக்கமே வழக்கு சாதகமாக அமையும் என்று எதிர்பார்த்ததால்.

''ஏம்பா! இப்படி என்னைக் கோர்ட்டுலே கொண்டு வந்து நிக்க வச்சிட்டீங்களே, என்னப்பா பிரயோசனம்? நாளைக்கு நான் யாருக்குமே விலை போகாமப் போயிடுவேனே. இதைப் பத்தி யோசிச்சீங்களா? இது குடம் பாலிலே தண்ணி கலந்து விக்கிற வியாபாரம் என்று நினைச்சீங்களா?''

இப்படி ஒரு தருமசங்கடமான கேள்வியைக் கோர்ட்டில் தான் கேட்டாள் ராஜி.

ராஜகோபால் பிள்ளை சொன்னார்: ''நீ விலை போகாதது பற்றி எனக்குக் கவலையில்லை. ஜாதி விட்டு ஜாதியிலே கல்யாணம் பண்ணி வச்சு, சமூக விரோதத்துக்கு நான் ஆளாக முடியாது.'' பாலும் தண்ணியுமாகச் சேர்ந்து கோபக் கனலில் கண்டத் தொடங்கியது.

வழக்குப் பதிவானபடி வக்கீல்கள் காரசாரமாக விவாதித்தனர். மேஜராகாத பெண்ணைக் காதலித்தது குற்றம் என்றும் கடத்த முயற்சி நடந்து வருவதாகவும் பிள்ளைவாள் தரப்பு வக்கீல் வாதித்தார்.

ராஜி எந்தக் கேள்விக்கும் விட்டுக் கொடுக்காமல் மண்டையில் அடிப்பது போலப் பதில் சொன்னாள்: ''கடத்தல் என்று பதிவாகி இருப்பது தவறு. அப்படி ஓர் எண்ணம் எங்களுக்குக் கிடையாது. காதலித்தது குற்றம் என்று சொன்னால் ...''

''நீ மேஜராகவில்லை.''

''கலியாணத்துக்குத்தான் இந்தச் சட்டம். காதலுக்குப் பதினேழு வயது என்பது அதிகம். காதல் பருவமே பதினாறு. காவியங்களைப் படித்தவர்கள். அறிவார்கள். நீங்கள் சட்டம் மட்டும் படித்தவர்.''

கோர்ட் சிரித்து விட்டது.

''ஆர்டர், ஆர்டர்....''

நீதிபதியின் குரல். அடுத்து, ''உன் முடிவு தான் என்னம்மா?''

''மை லார்ட்! நான் அவரைக் கல்யாணம் பண்ணிக்கப் போறேன். இதுலே எந்தவித மாற்றமுமில்லை.''

''அதுக்கு பதினெட்டு வயசாகணும்மா.''

''ஒரு வருஷத்துலே அப்படி என்ன அபார அறிவும், அபரிமிதமான மாற்றமும் ஏற்பட்டு விடப் போகிறது?''

நீதிபதி ஒருகணம் வியந்து போனார். ''சட்டத்துக்குப் புறம்பா நடக்கக் கூடாதம்மா...''

நீதிபதிக்கே அவள் மீது ஒரு பிடிப்பு ஏற்பட்டது. எத்தனை துணிவாகவும் புத்திசாலித்தனமாகவும் பதில் சொல்கிறாள்.

ராஜி சொன்னாள்: ''நான் சம்மதிக்கிறேன், மைலார்ட்! ஒரு வருஷம் வரை காத்திருந்து அவரையே கல்யாணம் பண்ணிக்குவேன்.''

''மிஸ்டர் சிவா! நீங்க என்ன சொல்றீங்க?''

''எனக்கும் சம்மதம்.''

நீதிபதிக்கே சிரிப்பு வந்து விட்டது.

# எட்டி நிலவு



விஷமக் கவிதை - 8

தகுதி !
அடிப்படைத் தலைமை
யாருக்குத் தகுதி? - அவரே
அடிப்படைத் தலைவர்
பெருக்குத் தகுதி !

- தமிழமுதன்



---

கொம்புகளைக் கூர் தீட்டிக் கொண்டு மனைவியை முட்டித் தள்ளிக் கொண்டிருந்தார் ராஜகோபால் பிள்ளை. ''இந்தக் கழுதை மேஜர் ஆகிற வரை காதலிக்குமாம், மேஜர் ஆன பிறகு கல்யாணம் செஞ்சிக்குமாம்; அதுவரையில் நான் தண்டச் சோத்தைப் போட்டு அழணுமாம்! எனக்கென்ன தலையெழுத்து? போற கழுதை இப்பவே போய்த் தொலையட்டும்!''

''எங்கே போவாங்க!'' — பெற்ற வயிறு புலம்பியது.

''கழுதை கெட்டா குட்டிச் சுவரு!''

''அவமானம் யாருக்கு?''

''இனிமே என்ன புதுசா அவமானம் வரணும்? தலை குனிஞ்சாச்சு! அந்தச் சோமாறிப் பய வீட்டிலேயே போய் தங்கிக் கட்டும். ஒரு வருஷம் பொறுத்துப் போறவ, அட்வான்ஸாகவே போயிடட்டுமே!''

அறையிலிருந்து வெளிப்பட்டாள் ராஜி. ஆவேசத்துடன். ''வக்கீலை அழைச்சுக்கிட்டு வந்தா இதே வார்த்தைகளைச் சொல்லுவீங்களாப்பா?''

''சீ, கழுதை வெளியே போ !''

''நான் இப்ப கோர்ட்டுக்குப் போனா... படி அளக்க வேண்டியதாயிடும்!''

''கப்பி என்னை வேண்டிய தாயிருந்தாலும் கவலைப்பட மாட்டேன். ஓடுகாலி நாயே! வெளியே போ....!''

ராஜகோபால் பிள்ளை வீட்டில்தான் இந்த ராட்சதக் குதிப்பு என்றில்லை. தங்கராக முதலியார் வீட்டிலும் இதே கதை தான். உணர்ச்சிகளில் வேண்டுமானால் சற்று வித்தியாசமிருக்கலாம்.

தங்கராக முதலியாரைப் பொறுத்தவரை காதலித்தது குற்றமில்லை. ஒரு முதலியார் பெண்ணைப் பார்த்துக் காதலித்துத் தொலையக் கூடாதா என்பதுதான் பிரச்னை! சமுதாயத்துக்குப் பயப்படாதவர்கள் யார்? தொண்டை கிழிய பாரதியாரின் பாடலை எடுத்துச் சொல்கிறவன் இனத்தையும் பணத்தையும் தான் பார்க்கிறான்; தொடை தட்டித் தமிழ் முழக்கம் செய்கிறவன் வீட்டுப் பிள்ளைகள் 'கான்வென்டில்' தான் படிக்கிறார்கள்! எல்லாம் வெறும் வேஷம்!

திடுமென்று அந்தச் சமயத்தில் ராஜி அங்கு நுழைந்தது தான் அனைவருக்குமே அதிர்ச்சி. அவளை வரவேற்று விசாரித்தான் சிவா. அழுத கண்ணீரும் குமுங்கிய நெஞ்சமுமாக ராஜி நடந்ததைச் சொன்னாள்.

அனைத்தையும் கேட்ட தங்கராக முதலியாருக்கே வேதனையாக இருந்தது.

''அது சரி, அம்மா! இப்ப நீ எங்கே வந்தே?'' என்று கேட்டார்.

''ஒரு நாளைக்கு வரப்போற இடத்துக்கு!''

''முடிவு கட்டிட்டியா?''

''முடிந்து போன விஷயம், மாமா!''

தங்கராக வாயடைத்துப் போனார்.

ராஜியே பேசினாள்: ''நீங்க படிச்சவங்க! நான் அதிகமாப் பேசறதா நினைச்சிக்கக் கூடாது. இந்த நாடு குட்டிச் சுவராப் போனதற்கே காரணம், ஜாதிப் பிரச்சினையும் கௌரவப் பிரச்சினையும் தான். மொழிக்கு ஜாதி வேண்டாம் .. காதலுக்குக் கௌரவம் வேண்டாம். தயவு செய்து எங்களை வாழ விடுங்க!''

தங்கராக முதலியார் காலில் விழுந்து விட்டாள் ராஜி. தங்கராக முதலியார் கண்கள் மேலும் கலங்கி விட்டன. ''வாஸ்தவம் தாம்மா .. எனக்கே இந்த எண்ணம் உண்டு. செயல்பட முடியலையே ... ஒரு வருஷம்வரை உன்னை என் வீட்லே வச்சிக்கிறது சட்டப்படிக் குற்றம்மா...''

''என் 'மேஜர்க்'கு நடுவே எட்டே மாசம் தான்.''

''அதுவரைக்கும் ...''

''யாருக்கும் கஷ்டம் வைக்க மாட்டோம். ஒரு முடிவோடதான் நாங்க இருக்கோம்.''

''என்ன?''

''தனிக்குடித்தனம். உங்களுக்கு அதிர்ச்சியா இருக்கும். கல்யாணமாகாமல் தனிக் குடித்தனமான்னு! எல்லாருக்கும் கல்யாணம் ஆனப்புறம் தேன் நிலவு. எங்களுக்கு எட்டி நிலவு; கசப்பான நிலவு. அதுவே அனுபவ நிலவு. எட்டியிருந்தே வாழப் பழகிக்குவோம். முடியாத காரியமான்னு நினைப்பீங்க. முடியும்னு சாதிக்கப் போறோம். என்னை நீங்க எந்த டாக்டரை வச்சி வேணும்னாலும் டெஸ்ட் பண்ணிக்கலாம்.''

அதிர்ச்சி மேல் அதிர்ச்சி! 'இவள் உண்மையிலேயே ஒரு புதுமைப் பெண்! புரட்சிப் பெண்!'

மேஜர் தெளிந்தது; மேரேஜ் நடந்தது.

விஷயமறிந்த பத்திரிகைக்காரர்கள் ஈ மாதிரி மொய்க்கத் தொடங்கினர். அவர்களுக்கு இது பரபரப்பான செய்தியல்லவா?


ஒரு வாரப் பத்திரிகை வரிந்து கட்டிக் கொண்டு பேட்டி வெளியிட்டது. அந்தப் பேட்டியில் ராஜி தெளிவாக ஒரு செய்தியைக் குறிப்பிட்டிருந்தாள்:

''ஆயிரம் எழுத்தாளர்கள், பத்தாயிரம் யோகிகள் போதிக்காத — போதிக்க முடியாத ஒன்றை எட்டே மாதங்களில் எட்டி நின்று எட்டி நிலவை ரசித்ததன் மூலம் கற்றுக் கொண்டோம். காமத்தையடக்க—மனத்தைப் படம் போட நாங்கள் ஒரு யாகமே நடத்தி விட்டோம். இனி மேல் எந்தக் கவர்ச்சிப் பொருளும் எங்களை வசப்படுத்த முடியாது. ஏன்? சினிமாவால் மனத்தளவில் அழிகிற ஒழுக்கக் கேடுகூட எங்களிடம் தலை நீட்டாது.''

இப்படி ஒரு அதிசயப் பெண்ணைப் பெற்று விட்டோம் என்பதை அறிந்த ராஜகோபால் பிள்ளையே சீர் செனத்தியோடு வருகை தர ஆயத்தமானார்!

வாழ்க்கையில் சந்தோஷமளிக்கும் பல தருணங்கள் ஏற்படுகின்றன

# தலைவலி உங்கள் சந்தோஷத்தை கெடுக்க விடாதீர்கள்



## 2 ஆஸ்ப்ரோ சாப்பிடுங்கள்

ASPRO

Nicholas

மைக்ரோ-பைன் ஆஸ்ப்ரோ வலியை அதிவேகமாக வெளியே இழுத்து விடுகிறது

A.G.62 TM

87-TAM

# மதுரை மில்ஸ் மட்டுமே 260 க்கும் அதிகமான வண்ணங்களின் ரகங்களை வழங்குகிறது— தனிப்பட்ட பண்புள்ள ஆடவருக்காக

# அவரே தன்தேவையைத் தெரிந்தவர்.

நிச்சயமாக
மதுரா.

மதுரா அளிக்கும்
260 க்கும் அதிகமான
வண்ணங்களில்
தரம் செறிந்த
'டெரீன்' இழை கலந்த
சூட்டிங்குகள். அதோடு
எண்ணிலா இழைகளில்
'டெரீன்' இழை கலந்த
ஷர்ட்டிங்குகள்.
அவை யாவும் கண்கவர்
தோற்றமுள்ளவை.
தனிப் பெருஞ்சிறப்பு
வாய்ந்தவை.
அவாவைத் தூண்டுபவை.



**மதுரா துணிகள்**

**மதுரை மில்ஸ்**
மதுரை, தென் இந்தியா.

**விநியோகஸ்தர்கள்:**
மதுரா சௌத் இந்தியா கார்ப்பொரேஷன் (பிரை.) லிட்., சென்னை-600 001 ● ஹாஜி பி. சையத் முகம்மத், விருதுநகர்-626 001 ● டி. எம்.'ஸ் டெக்ஸ்டைல்ஸ், மதுரை-625 001 ● வி. வி. வி. ஆர். முருகேச முதலியார் & சன்ஸ், ஈரோடு-638 001 ● வி. வி. வி. ஆர். முருகேச முதலியார் & சன்ஸ், சேலம்-636 002.

**சில்லறை விற்பனை ஷோ ரூம்கள்:**
தரூப் எண்டர்ப்ரைசஸ், 40-41, கிழக்கு சித்திரைத் தெரு, மதுரை-625 001 ● செட்டிநாடு ஏஜன்ஸீஸ், 40, மௌண்ட் ரோடு, சென்னை-600 006 ● வி. வி. வி. ஆர். முருகேச முதலியார் & ஸன்ஸ், 139, ஒப்பணக்காரத் தெரு, கோயம்புத்தூர்-641 001 ● பாண்டியன் எண்டர்ப்ரைசஸ், 25, சின்னக்கடைத் தெரு, திருச்சிராப்பள்ளி-620 002 ● செட்டிநாடு ஏஜன்ஸீஸ், லி-7, யூனிடி பில்டிங், ஜே. ஸி. ரோடு, பெங்களூர்-560 009.



# பட்டாசின் கோப வெடி!

"எல்லோரும் விடியற்காலையில் அரைத் தூக்கத்துடன் எண்ணெய் தேய்த்துக் கொண்டுவிட்டு, 100க்கு 10 சதவிகிதம் தள்ளிக் கொடுப்பதாகச் சொல்லப்படும் புத்தாடைகளைக் கடனுக்கு வாங்கியாவது அணிந்து கொண்டு, எந்த எண்ணெயிலோ, எந்த வனஸ்பதியிலோ செய்யப்படும் பட்சணங்களை வெறும் வயிற்றுக்குள் திணித்து விட்டு உடனேயே பட்டாசுக்கட்டை எடுத்துக்கொண்டு வாசற்பக்கம் போய் அதைக் கொளுத்தித் தெருவில் போகிறவர்கள் மீது வீசவேண்டும்! இதற்கு அருள்வாய் ஓ, வெண்ணெய் திருடிய கிருஷ்ண பகவானே!" என்று நரகாசுரன் பகவானிடம் வரம் கேட்டுப் பெற்றதாகப் பலர் நம்பிக் கொண்டிருக்கிறார்கள்.

பட்டாசாகிய எனக்கும் தீபாவளி என்பதற்கும் கங்கா ஸ்நானம் கிடக்கட்டும், குழாய் ஸ்நானப் பிராப்தி கூட இல்லை. நான் சுமார் 150 ஆண்டுகளுக்கு முன்னர்தான் தோன்றியவன்; துவாபர யுகத்தில் அல்ல.

நான் சீனத்தில் பிறந்தவன். 'பௌடர்' என்ற வெடிமருந்தை அந்தத் தேசத்தவர்கள் கண்டுபிடித்தார்கள். நாளடைவில் அது குண்டுகள் சுடும் பீரங்கிகளிலும், கோவில் உற்சவங்களில் அதிர்வெடி போடும் குழாய்களிலும் உபயோகப்படுத்தப் பட்டது.

எனக்கு இந்தியர்கள் சீனவெடி என்று பெயர் வைத்தார்கள். அது சரி. ஆனால் பட்டாஸ் கட்டு என்று ஏன் பெயர் வைத்தார்கள் என்று தெரியவில்லை.

இந்தியாவில் தீபாவளி தின விபத்துக்கள் அதிகம். சில வருடங்கள் முன்வரை வெங்காய வெடி என்று வெங்காயம் சம்பந்தப் படாத ஒரு வெடி உண்டு. இதற்கான மருந்துகளைக் கலந்து கொண்டிருக்கும்போது வெடித்து நெருப்புக் கிளம்பும். அதன் பயனாக எத்தனையோ வாலிபர்கள் தங்கள் கண்கள், மூக்கு, கைகளை இழந்திருக்கிறார்கள். தீபாவளிக்கு அடுத்த இரண்டு நாளைய தினசரிப் பத்திரிகைகளில் "வாண விபத்தால் மரணம்" என்ற தலைப்புடன் விபத்துக்கள் ஜாபிதா வெளியிடுவது வழக்கமாகி விட்டது.

சில வாரங்களுக்கு முன்னர் குஜராத்தில் ரயிலில் பிரயாணம் செய்து கொண்டிருந்த ஒரு ஸ்திரீ வெடி மருந்து அடங்கிய சாக்கு மூட்டை ஒன்றை வைத்துக் கொண்டிருந்தாள். அப்போது பக்கத்தில் உட்கார்ந்து கொண்டிருந்த ஒரு கிழவர் சுருட்டுக் குடித்த போது தீப்பொறி பறந்தது. வெடிமருந்து தீப்பற்றி வெடித்து ரயில் பெட்டிகளிலிருந்த சுமார் 6 பேர் கருகி மாண்டார்கள். பலருக்குக் கடுமையான தீப்புண். இறந்தவர்களின் குடும்பத்துக்கு 50,000 ரூபாய் கொடுத்தார்களாம். கதை மாதிரி இல்லையா? ஆம், ஒரு கதைகூடக் கேள்விப்பட்டிருக்கிறேன். ஒரு வயோதிகர் தமது உயிரைப் பல லட்சம் டாலர்களுக்கு இன்ஷூர் செய்து கொண்டு ஒரு விமானத்தில் ஏறினாராம். அவரிடம் ஒரு வெடி குண்டு வைத்திருந்தார். அதை வெடிக்கச் செய்தால் அவர் இறப்பது நிச்சயம். இன்ஷூரன்ஸ் பணம் அவர் மனைவிக்குக் கிடைக்கும். 'ஏர் போர்ட்' என்று ஒரு நாவலில் அப்படி வருகிறது.


இந்தியாவின் ஜனத் தொகை சுமார் 55 கோடி. கிட்டத்தட்ட 10 கோடி குடும்பங்கள் இருக்கலாம். அவற்றுள் 4 கோடி குடும்பங்களில் தீபாவளிப் பட்டாசுக்குத் தலா 5 ரூபாய் செலவழித்தாலும் 20 கோடி ரூபாய் வீணாகிறது. என்றாலும் "காசைக் கரியாக்காமல் வாணத்தை வாங்கிச் சுடு!" என்று திருவாய்மலர்ந்தருளியதைக் கேட்டுப் பொருளாதார நிபுணர் ஒருவர் மட்டுமே திருப்தியடைவார். அவரும் பட்டாசு சுடாமல் இருக்க மாட்டார் தீபாவளி யன்று.

ராக்கெட் வாணங்கள், ஆட்டம்பாம், ஒற்றை வெடிகள் போன்றவற்றால்தான் ஆபத்து. பட்டாசு எனப்படும் என் சகாக்களால் பிரமாத ஆபத்து ஏதும் ஏற்படுவதில்லை. திரியைக் கொளுத்தி எரித்தால் எரியாதது போல் பாவனை செய்வோம். கிட்ட வந்து பார்த்தால் வெடிப்போம். இப்படி நாங்கள் திடீர் என்று வெடிப்பதைப் பல இளம் மனைவிமார் சரியான விதத்தில் பயன்படுத்திக் கொள்கிறார்கள். திடீர் என்று வெடித்ததும் பயந்து விட்டது போலப் பாசாங்கு செய்து கொண்டு தங்கள் கணவன்மாரைக் கட்டிக் கொள்கிறார்கள்.

சீன வெடியாகிய நாங்கள் மட்டுமாவது தடைசெய்யப்படாமல் இருந்தாக வேண்டியது ரொம்ப ரொம்ப முக்கியம். நாங்கள் இல்லாமற்போனால் பல வாலிபர்களுக்கும் சிறுவர்களுக்கும் கிரிக்கெட் டெஸ்ட் மாட்ச்களைகட்டாது!

—அநாமதேயம்




THERE ARE ONLY TWO KINDS OF WOMEN-
THOSE WHO READ
femina
AND THOSE WHO DON'T
WHICH KIND ARE YOU?
If you are not already one among our 16 lakh readers*, do yourself a favour.....start ordering your copies of Femina today.
Twice every month, Femina will speak on issues that need to be talked about. We will take you from the metros to the suburbs, from the small towns to the villages, to show you the new Indian woman at work and in the home. We will bring you her ideas on health, politics, the economy, clothes, furniture, films and books—the whole business of living—right up to your doorstep. Maybe you will want to give Femina to your husband, your children, your friends. So that they can understand you better. Don't wait another day!
BUY YOUR COPY TODAY!!
* Source : ORG Survey
femina
INDIA'S FASTEST GROWING FORTNIGHTLY




புகழ்பெற்ற அமெரிக்க நகைச்சுவை எழுத்தாளர் ஜேம்ஸ் தர்பர், 'ஸீக்ரட் லைஃப் ஆஃப் வால்டர் மிட்டி' என்று ஒரு கதை எழுதினார். டானி கே நடித்து அது திரைப் படமாகவும் வந்தது. அதில் கதாநாயகன் அடிக்கடி பகல் கனவில் ஆழ்ந்துபோய் நம்மை வேதனைக்குள்ளாக்கினான். என்ன வேதனை என்கிறீர்களா? சிரித்துச் சிரித்து வயிறு புண்ணான வேதனைதான்!

'அன்பைத் தேடி'யிலும் சிவாஜி கணேசன் திடீர் திடீரென்று பகற் கனவுகள் கண்டு சக்கைப் போடு போட்டிருக்கிறார். பலவிதமான சம்பவங்களுக்கு இடம் தரும் பகற் கனவுகள்—கற்பனைகள்—ஆன்றால் நடிப்பாற்றலை வெளிப் படுத்த அரிய சந்தர்ப்பம். தன் பகற் கனவுகளால் பலருக்கும் ஏற்படும் சங்கடங்களைக் கண்டு ராமு வேதனையில் துடிக்கும்போது நாமும் துடிக்கிறோம். பகவான் புத்தராக வந்து புத்த தர்மத்தை விளக்குவது மெய்சிலிர்க்க வைக்கிறது. சிவாஜியின் வேஷப்பொருத்தம் தத்ரூபமாக இருக்கிறது.

ராமுவின் கள்ளங் கபடமற்ற வெள்ளை உள்ளம் ராணியைக் கொள்ளை கொண்டு விட்ட தருணத்தில் ஜெயலலிதா உணர்ச்சி பொங்க நடித்திருக்கிறார். பிறந்த குழந்தையை உடனேயே பிறருக்குக் கொடுத்துவிட வேண்டிய நிர்ப்பந்தமான சூழ்நிலையில் அவரது நடிப்பின் சிறப்பு பாராட்டைப் பெறுகிறது.

பகற் கனவு கண்டு தன் வாழ்வையே பாழாக்கிக் கொள்ளும் ராமு, சகோதரியினாலும், அவள் கணவனாலும் வெறுக்கப்படுகிறான். ஆனால், இடைவேளைக்குப் பிறகு அவர்களுடைய பெரும் சொத்துக்கு அவனே உரிமையுள்ளவனென்று அவர்களாலேயே அறிவிக்கப்படுகிறான்! இந்த இடத்தில் திரைக்கதை பெரிய விபத்தில் சிக்கிய காரைப் போல் நசுங்கி உருமாறிப் போய் விடுகிறது.

மேஜர் சுந்தரராஜன் ராமுவின் அக்கா புருஷனாக வந்து மிடுக்காக நடித்துத் துடுக்காகப் பேசிக் கடைசியில் சோகத்தில் துவண்டு போகிறார். சோக நடிப்புக்காக விஜயகுமாரிக்கு ஒரு சபாஷ் போடலாம்.

தன் அக்காளின் ஒரே மகளைத் தன் பகற் கனவினால் வில்லனிடம் கோட்டை விட்ட ராமுவின் சபதம் திரை உலகில் மட்டுமே காணக் கூடியது! தன் சகோதரிக்குத் தன்னால் ஏற்பட்டுவிட்ட தாங்கமுடியாத சோகத்துக்கு ஈடாகத் தான் பெற்ற குழந்தையை இழப்பது தான் தக்க தண்டனை என்று ராமு முடிவெடுப்பது விபரீதமானதுதான். ஆனால் அந்த மாதிரி அசாதாரண சபதம் இல்லையென்றால், சிவாஜி, விஜயகுமாரி, ஜெயலலிதா ஆகிய மூவரையும் விம்மி வெடிக்கச் செய்வது எப்படி?

'சோ'வின் 'காமெடி'கள் அரசியல் வாடையுடன் கலந்து காலத்துக்கு ஏற்ற விருந்தாயிருக்கின்றன.

'டிஷ்யூம் டிஷ்யூம்' உண்டு.

பேபி இந்திரா இந்தப் படத்தின் ஜீவநாடி. ஆரம்ப முதல் அப்பாவி ராமுவிடம் அன்பு காட்டுபவள் அவள் ஒருத்தி தான். அவன் மன நோயைத் தீர்த்து வைப்பவளும் அவள் தான். குழந்தையின் நடிப்பு பாராட்டுக்குரியது.

''புத்தி கெட்ட பொண்ணு ஒண்ணு'', ''சித்திர மண்டபத்தில்'' என்னும் பாடல்கள் இனிமையாக ஒலிக்கின்றன. வாணி ஜெயராம் பாடும் ''சிப்பியிலே முத்து'' என்ற பாடல் சோகக் குரலில் ஒலித்து ரசிகர்களின் கையொலியைப் பெறுகிறது. பாடல்களை இயற்றியிருப்பவர் கவியரசு கண்ணதாசன்.

திரைக் கதை, வசனம் தீட்டியிருப்பவர் தூயவன். வசனம் பாராட்டுக்குரியது. வி. சீனிவாசனின் டைரக்ஷன் பல இடங்களில் சபாஷ் பெறுகிறது. இந்த வண்ணப் படத்துக்குப் பெருமை சேர்த்திருப்பது சிறப்பான ஒளிப்பதிவு.

கண்ணைக் கவரும் வண்ணக் கலவையையும் சிறந்த நடிப்பையும் தேடி அலைபவர்களுக்குப் பூரண திருப்தியை அளிக்க வல்லது முக்தா பிலிம்ஸின் ''அன்பைத் தேடி!''

- காந்தன்

# வரலாற்று நூல் வளர்கிறது!



ராஜாஜியின் வாழ்க்கை வரலாற்றினை உருவாக்கும் நோக்கில் சென்ற ஆண்டு ஜனவரி மாதத்தில் ஒரு குழு அமைந்தது. இதனைக் கூட்டியவர் கல்கி திரு சதாசிவம்.

திரு க. சந்தானம், திரு வி. ஆர். நரசிம்மன், திரு ராஜ்மோகன் காந்தி ஆகியோர் வாழ்க்கை வரலாற்று நூலின் ஆசிரியர்களாக இருக்கச் சம்மதித்தனர். இதனை எழுதுகின்ற பொறுப்பை திரு ராஜ்மோகன் காந்தியிடம் ஒப்படைத்தனர்.

இப்பணிக்கு ராஜ்மோகன் காந்தியைவிடப் பொருத்தமானவர் யாரும் இருக்க முடியாது. மகாத்மா காந்தி — ராஜாஜி — ஆகிய இருவரின் பேரர் என்பதால் மட்டுமல்ல. கூர்ந்த மதியும், ஆத்ம சக்தியும் பெற்றிருப்பவர். மக்களிடையே தார்மீக வாழ்வை மீண்டும் நிலைநாட்டப் பாடுபட்டு வரும் 'மாரல் ரீ ஆர்மமெண்ட்' (M. R. A.) என்ற அகில உலக அமைப்பின் தலைவர்களுள் முக்கியமான ஒருவர். பல துறைகளில் உலகத் தலைவர்களாக விளங்குபவர்களுடன் நேரிடைப் பரிச்சயமும் பழக்கமும் கொண்டவர். ஹிம்மத் பத்திரிகையின் பிரதம ஆசிரியர். இப்படி இளம் வயதிலேயே நல்ல அனுபவமும், ஆங்கிலத்தில் எழுத்தாற்றலும் பெற்றுள்ளார் ராஜ்மோகன் காந்தி.

ராஜாஜியுடன் நெருங்கிப் பழகியவர்கள், அவருடன் போராட்டங்களில் ஈடுபட்டவர்கள் அனைவரையும் இவர் சென்ற இரண்டு ஆண்டு காலமாகச் சந்தித்து வருகிறார்.

இந்நாட்டில் மட்டுமின்றி பாரதத்துக்கு வெளியேயும் பலப் பல பிரமுகர்களை — ராஜாஜியுடன் பல்வேறு கால கட்டங்களில் பழகியவர்களையும் அவர்களுடைய சந்ததியினரையும் — சந்தித்து அரிய தகவல்களைத் திரட்டியிருக்கிறார். அவற்றை யெல்லாம் பற்றிக் கொஞ்சம் கல்கி வாசகர்களுக்குச் சொல்லுங்களேன் என்றால், 'அவற்றையெல்லாம் இப்போதே சொல்லிவிட்டால் நான் எழுதும் புத்தகம் சப்பெனப் போகுமே. சொல்லமாட்டேன்!' என்று விளையாட்டாகக் கூறிச் சிரித்தார். பிறகு உற்சாகமாகப் பேச ஆரம்பித்தார்!

ராஜ்மோகன் காந்தி, முன்னாள் பாரதத்தின் வைஸ்ராயாக இருந்த லார்டு இர்வினின் மகன் ரிச்சர்டு வுட் என்பவரைச் சந்தித்தார். ரிச்சர்ட் வுட் பிரிட்டிஷ் அரசாங்கத்தில் மந்திரியாக இருந்தவர். அவர் தமது தந்தை இந்தியாவில் வைஸ்ராயாக இருந்த நாட்களில் காந்திஜி — ராஜாஜி நடத்திய உப்பு சத்தியாக்கிரக நாட்களை நினைவுகூர்ந்தார்.


காந்தி மகான், ''வெள்ளையனே, வெளியேறு!'' என்று யுத்தகாலத்தில் கடைசிப் போராட்டம் நடத்திய போது பாரதத்தின் வைஸ்ராயாக இருந்தவர் லார்டு லின்லித்கோ. பிரிட்டிஷ் சரித்திரத்திலும் சரி, இந்திய சரித்திரத்திலும் சரி, அவை மிக முக்கியமான ஆண்டுகளாகும். அந்நாளில்தான் காங்கிரஸுடன் மாறுபட்டு ராஜாஜி நின்றார். அந்நாட்களில் பிரிட்டிஷார் இந்தியத் தலைவர்களைப் பற்றி என்ன கருத்துக்களைக் கொண்டிருந்தார்கள் என்பதனை அறிய லார்டு

வின்சிக்கோவின் புதல்வரைப் பேட்டி கண்டு அரிய செய்தி களைத் திரட்டியிருக்கிறார் ராஜ்மோகன்.

ராஜாஜி முதல் முறை சென்னை ராஜதானியின் பிரதமர் பதவி ஏற்றது 1937ல். அன்று பிரதம செயலாளராக இருந்தவர் பிராக்கன் பார்ரியின் புதல்வரான லீஸில் பிராக்கன்பார்ரியை மோகன் சந்தித்து அளவளாவினார். அவர் ராஜாஜி பிரதமர்பதவி ஏற்றவுடன் தமது தகப்பனாருக்குக் கதராடைகளை அன்பளிப்பாக வழங்கியதையும் அதை அவர் மிகச் சிறந்த பரிசாகப் போற்றி வந்ததையும் குறிப்பிட்டார்.

ராஜாஜி, பெங்களூர் செண்ட்ரல் காலேஜில் படித்துக் கொண்டிருந்த காலத்தில் அவருக்கு ஆங்கிலப் பேராசிரியராக இருந்தவர் ஸ்காட்லாந்து நாட்டைச் சேர்ந்த டெய்ட் என்பவர்.

பேராசிரியர் டெய்ட்டினிடம் ராஜாஜிக்கு அளவு கடந்த மதிப்பும் மரியாதையும் அன்பும் உண்டு. அப்படியே டெய்ட்டுக்கும் இந்த அபூர்வ மாணவரிடம் அளவுகடந்த பாசம். ராஜாஜி இம்மாகாணப் பிரதமரான பிறகும் கூட அவர்கள் பரஸ்பர கடிதப் போக்கு வரவு வைத்துக் கொண்



ராஜாஜி வாழ்க்கை வரலாற்று நூல் ஆசிரியர்கள் ராஜ்மோகன் காந்தி. க. சந்தானம், வி. ஆர். நரசிம்மன்.

டிருந்தார்கள். ராஜாஜி தமது வாழ்க்கையின் ஒவ்வொரு முக்கியமான கட்டத்திலும் பேராசிரியருக்குத் தமது முடிவைத் தெரிவிப்பார். அதைப் பற்றிப் பேராசிரியர் டெய்ட் தமது கருத்தை வெளியிடுவார்.

சில சமயங்களில் அவர்கள் கருத்துக்கள் ஒன்றுக்கொன்று மாறுபட்டதாகவும் இருந்தன. இருப்பினும் பரஸ்பரம் மதிப்பும் மரியாதையும் சிறிதும் குறையவில்லை; வளர்ந்தே வந்தது.

ராஜாஜி காந்தி மகானின் இயக்கத்தில் சேர முடிவு செய்த போது, இவ்வியக்கத்தில் சேராதே என்று ராஜாஜிக்கு யோசனை கூறினார் டெய்ட். குருவின் யோசனையை மீறி காந்தியப் போராட்டத்தில் சேர்ந்து முன்னேறி வந்த போது, பெரிதும் மகிழ்ந்தவர்களுள் ஒருவர் டெய்ட். 1937ல் சென்னை ராஜதானியின் பிரதமரான போது முதல் பாராட்டைத் தெரிவித்தவர் டெய்ட்தான். ராஜாஜி காலமாவதற்கு இருபது நாட்களுக்கு முன்புகூட தமது பேரன்மார்களோடு அளவளாவிக்கொண்டிருந்தபோது தமது ஆசிரியர் டெய்ட் துரையை நினைவுகூர்ந்தார். இப்படி ராஜாஜி நினைத்து நினைத்து மகிழ்ந்த பெரியாரின் சந்ததியாரைச் சந்திக்க வேண்டும் என்று ராஜ்மோகன் காந்தி ஆர்வம் கொண்டார். அதற்காக ஸ்காட்லாந்து சென்று பல நாள் தங்கி யாரையெல்லாமோ விசாரித்தார். யாருக்கும் அப்படியொருவர் இருந்ததாகவோ, அவர் வம்சத்தார் இருப்பதாகவோ தெரியவில்லை. இனி திரும்பிப் போக வேண்டியதுதான் என்று தீர்மானித்தார் ராஜ்மோகன். அவர் ஸ்காட்லாந்தில் எடின்பரோ நகரத்தில் — ஒரு நண்பரின் விருந்தினராகத் தங்கியிருந்தார். ராஜ்மோகன் காந்தி புறப்படுகிறேன் என்றதும் அந்த நண்பர் ஒரு பிரிவு உபசார விருந்து நடத்தத் தீர்மானித்தார். அதற்கு உள்ளூரில் இருந்த பல நண்பர்களை அழைத்தார். அப்போது ஒருவரை நினைத்து அழைக்க, டெலிபோன் தொடர்பு தவறுதலாக வேறொருவருடன் ஏற்பட்டது. டெலிஃபோனில் அழைப்புப் பெற்ற நபர், விருந்தளிக்கும் நண்பரிடம், தாங்கள் யாரைக் கேட்கிறீர்களோ, அந்த நபர் நானில்லை என்றார். விருந்தளிக்கும் நண்பருக்கு என்ன தோன்றியதோ தெரியவில்லை. "அதனாலென்ன? நீங்களும்தான் இந்த விருந்துக்கு வரலாமே. காந்தி - ராஜாஜி பேரரைச் சந்திக்கலாம். அவசியம் வாருங்கள்" என்றார்! அவரும் அழைப்பை ஏற்று விருந்துக்குப் போனார். போன இடத்தில், விருந்தளிக்கும் நண்பரிடம் தான் இன்னார் என்று அறிமுகம் செய்துகொண்டார். ஒருவரை நினைத்துப் ஃபோன் செய்யப் போக, வேறொரு புது நண்பர் கிடைத்தார் என்ற மகிழ்ச்சியுடன் வரவேற்றார். டெலிஃபோன் செய்யும் கூத்துக்களை நினைத்துச் சிரித்துக் கொண்டே "காந்தி — ராஜாஜி பேரரான ராஜ்மோகன் காந்தியைச் சந்தியுங்கள்" என்று சொல்லி வந்த நபரை உள்ளே அழைத்துச் சென்றார்.

அறிமுகமானதும் ராஜ்மோகன், பேச்சுவாக்கில் தாம்

இப்பொழுது ராஜாஜியின் வாழ்க்கைச் சரித்திரத்தை எழுதும் பணியில் ஈடுபட்டிருப்பதாகவும், ராஜாஜியின் ஆசிரியரான டெய்ட் இப்பகுதியைச் சேர்ந்தவர்தான் என்றும், அவருடைய வம்சத்தினர் யாரையாகிலும் சந்திக்க இத்தனை நாள் முயன்றும் பயனில்லாமல் போய்விட்டது என்றும் அங்கலாய்த்தார்.

இதைக் கேட்ட அந்தப் புதிய நபர், "அந்த டெய்ட்டின் மகள் மார்க்கரெட் இருக்கிருரே!" என்றார்.

அதைக் கேட்டபோது ராஜ்மோகனுக்கு எப்படி இருந்திருக்கும்! ஹநுமான் சீதையை அசோக வனத்தில் கண்ட போது ஏற்பட்ட குதூகலந்தான்.

திருமதி மார்க்கரெட்டின் விலாசம்தெரிந்து கொண்டு போய் அந்த அம்மையாரைச் சந்தித்தார். அந்த அனுபவத்தைத்தான் என்னவென்று சொல்வது!

ராஜாஜி 1920லிருந்து தமது பேராசிரியர் டெய்ட்டுக்கு எழுதிய கடிதங்களை அம்மையார் இன்றளவும் போற்றிப் பாதுகாத்து வந்திருக்கிருர். அதைப் பார்த்த ராஜ்மோகன் கண்களில் ஆனந்தக் கண்ணீர் பெருகியது!

மற்றொரு சுவையான விஷயம். ராஜாஜி முதல் தடவை பிரதமராக இருந்த போது சென்னை மாகாண கவர்னராக இருந்தவர் லார்டு எர்ஸ்கின். அப்போது பிரிட்டனில் மன்னராக இருந்தவர் ஆருவது ஜியார்ஜ்!

ஜியார்ஜ் மன்னர், சென்னை மாகாணத்தில் மதுவிலக்குத் திட்டம் அமுல் செய்யப்பட்டிருப்பதை மிக உன்னிப்பாகக் கவனித்து வந்தாராம். அது வெற்றிகரமாக நடைபெறுவது கண்டு மகிழ்ச்சி அடைந்தாராம்! இச்செய்திகள் அன்றைய கவர்னர் லார்டு எர்ஸ்கினுக்கும் மன்னரின் செயலாளருக்கும் நடைபெற்ற கடிதப் போக்குவரத்திலிருந்து தெரிய வருகின்றன என்கிருர் ராஜ்மோகன்.

ராஜ்மோகன் காந்தி இங்லொந்தில் சந்தித்த மற்றொரு பிரமுகர் நமது கடைசி பிரிட்டிஷ் கவர்னர் ஜெனரலான லார்டு மவுண்ட் பாட்டன். அவர், "ராஜாஜி இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பே என்னிடம் பாகிஸ்தான் நீண்ட நாள் நிலைக்காது. கிழக்கு வங்கம் பிரிந்துவிடும் என்ருர். அவர் சொன்னது பலித்துவிட்டதே!" என்ருராம்!

தொடர்ந்து பிரிட்டன் இந்தியாவிடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்த அந்த நாட்களில் ஏற்பட்ட பல்வேறு பிரச்னைகளையும் அச்சமயங்களில் ராஜாஜி அரிய முறையில் உதவியதையும் மவுண்ட் பாட்டன் நினைவு கூர்ந்து விவரித்தாராம்.

அரசியல்வாதியாக மட்டுமின்றி ஆத்ம ஞானியாகவே விளங்கிய ஒப்பற்ற தலைவர் ராஜாஜியின் வாழ்க்கை வரலாற்றை எழுதும் பெரும் பொறுப்பை ஏற்றுள்ள ராஜ்மோகன் காந்தியின் முயற்சி வெல்க! — **எஸ்.வி.எஸ்.**

# வட்ட மேஜை

"மல்லிகை மணமும் மெய்யான்தே!" தலையங்கத்தில் தாங்கள் கூறியுள்ளவை ஒத்துக் கொள்ளக்கூடியதாக இருக்கும்போது கட்டுரையில் கலைத் துறையில் இருப்பவர்கள் கூற்று கொஞ்சம்கூடப் பொருந்தாமல் உள்ளது.

பரிசுக் குழுவினர் எந்த அளவுக்கு 'யதார்த்த' வாழ்க்கையை (கதை—வசனம், டைரக்ஷன், ஒலிப்பதிவு, ஒளிப்பதிவு முதலிய துறைகளால்) போட்டியாளர்கள் சித்திரிக்கின்றனர் என்பதைப் பார்க்கின்றனரே தவிர கதாநாயகி 'சோரம் போவதை'க் காட்டினுல் தான் பரிசு என்று அவர்கள் நினைப்பதில்லை. இது சில பரிசு பெற்ற படங்களான செம்மீன், சுயம்வரம், துலாபாரம், தோ பூந்த் பானி, காயத்ரி, அச்சனும் பாப்பாயும், அபெசூரின போஸ்டாபீஸ், சுரம் ஹவா — இவற்றின் கதைகளைக் கேட்டாலே விளங்கும்.

செம்பனூர்கோயில்
21—11—74 ஜி. அழகிரி ரகுநாத்

'நிர்மால்யம்' என்கிற அந்த உணர்ச்சிக் காவியத்தை ரசித்து, மனம் நெகிழ்ந்து, பரவசமுற்றவன் என்கிற உண்மையினுல், அதற்குப் பரிசு கொடுத்ததில் இப்படிக் கண்டனக் கூச்சல் எழுகிறதே என்ற வருத்தத்தில், இதை எழுதுகிறேன். திரைப் படம் என்கிற ஒரு கலைச் சாதனம் எப்படி அமைந்தால் அது மனித வளர்ச்சிக்கும், ஆத்ம சுத்திக்கும், அனுபவ பரிமாற்றத்துக்கும் பயன்படும் என்பதற்கு எடுத்துக்காட்டாகத் திகழுவது 'நிர்மால்யம்'. சாக்கடையின் துர்நாற்றத்துடன் மல்லிகையின் மணமும், தெளிவாகப் பிரிந்து இதில் வீசமாறு செய்திருக்கிருர் டைரக்டர்.

மீஞ்சூர்
16-11-74 இரா. ஜோதி இராமலிங்கம்


கல்கி தீபாவளி மலர் வெளியிட ஆரம்பித்த முதல் மலரிலிருந்தே இதுவரை அத்தனை மலர்களும் என்னிடம் பொக்கிஷமாக உள்ளன. தீபாவளிக்குப் புத்தாடை, பட்சணம், பட்டாசு எல்லாம் எவ்வளவு இன்றியமையாததோ அவ்வளவு இன்றியமையாததாக ஆகிவிட்டது கல்கி மலரும். ரூபாய் பத்து என்றவுடன் சற்றுப் பகிரென்றது. இருந்தாலும் நான் வாங்காமல் இருப்பேனு? மலரைப் பார்த்தவுடன் அதற்குப் பத்தும் கொடுக்கலாம்; இருபதும் கொடுக்கலாம் எனத் தோன்றியது. மலரின் வண்ணப் படங்களை வர்ணிப்பதா? கட்டுரைகளின் தத்துவங்களைப் பேசுவதா? கதைகளின் கருத்தாழத்தைக் கூறுவதா? திக்குமுக்காடித் திணறுகிறேன்.

பாண்டிச்சேரி
17-11-74 கல்வே. எஸ். சதாசிவம்

ருஷ்ய ராமரும் ருஷ்ய சீதையும் ஒருவரின் இடது கையை மற்றவர் பிடிக்க, ஜனக மகாராஜா வாழ்த்துவது போலப் படம் போட்டுள்ளீர். அந்த ராமனும் சீதையும் இடதுசாரிக் கட்சியைச் சேர்ந்தவர்களா? ருஷ்ய ராமர் என்பதாலா?

சென்னை
21—11—74 பி. வாசுதேவன்

# இயற்கை உங்களுக்கு அளித்துள்ளது எழில்மிகு கேசம்...
## அதனை அவ்வண்ணமே வைத்திருப்பீர்
## ஹேலோ கேச பராமரிப்புமூலம்



HSR.G.I.TH

**ஹேலோ ஷாம்பூக்கள் மட்டுமே சீரான, சிறந்த உத்தியின்படி தயாரிக்கப்படுகின்றன—உங்கள் கேசத்தின் பராமரிப்பிற்கெனவே**

**ஹேலோ காஸ்மெடிக் ஷாம்பூ:**
இந்த விசேஷ ஷாம்பூவை உபயோகித்து, உங்கள் கேசம் எவ்வளவு மெதுமென்றும், மிருதுவாகவும் இருக்க கூடும் என்பதைக் கண்டு கொள்ளுங்கள்.

**ஹேலோ எக் ஷாம்பூ:**
விசேஷ போஷாக்கு மிக்க இந்த ஷாம்பூவில் உள்ள வளமிக்க முட்டைப் புரதத்தின் பயனாக உங்கள் கேசம் கட்டுக்-கோப்புடன், கவர்ச்சியாகத் திகழ்கிறது.




**ஹேலோ லெமன்—ஃப்ரெஷ் ஷாம்பூ:**
உங்கள் கேசத்திற்கு இயற்கையான தூய்மையான பளபளப்பைத் தருகிறது.

**ஹேலோ கான்ஸென்ட்ரேட் ஷாம்பூ:**
ஏராளமான நுரையினத்தின் மூலம் உங்கள் கேசத்தை மென்மையாகவும், கட்டுக்கடங்கியும் வைத்திருக்க சிறிதளவே போதும்.

**இயற்கை ஆரோக்கியத்துடன் கூடிய கேசத்திற்கு—இன்றே உபயோகிக்கத் தொடங்குவீர் ஹேலோ**



# பரிந்து கொண்ட உணர்ச்சி!

அந்த நாள் நெருங்கிக் கொண்டிருந்தது. மனத்தில் அமைதி சூழ்ந்து கொண்டிருந்தது. எப்போதும் வெளியிலேயே சுற்றிக் கொண்டிருப்பவன் இப்போது வீட்டுக்குள்ளேயே வளைய வந்து கொண்டிருந்தேன். அப்பா, அம்மா, அக்கா யார் எது சொன்னாலும் கொஞ்சம்கூட முகம் சுளிக்காமல் உடனே செய்து கொண்டிருந்தேன். எதற்கெடுத்தாலும் கூப்பாடு போடும் எனது குரலில் இவ்வளவு மிருதுத் தன்மை எங்கிருந்து வந்தது ? வீட்டில் அனைவரும் எனது மாறுதலைக் கண்டு சாடை மாடையாகப் பேசிக் கொண்டார்கள்.

''அப்பா ! ஹரி அண்ணாவுக்கு என்ன வந்தது ?'' என்று தரங்கிணியின் குரல் கேட்டது.

''ஏன்?''

''இரண்டு மூணு நாளா ஆளே மாறிட்டானே. வீட்டையே சுத்திச் சுத்தி வரான். வீட்டு வேலையெல்லாம் செய்யறான். வள் வள்ளுன்னு விழாமல் ஒரே அன்பு சொட்டப் பேசறான். அவனுக்கு உடம்பிலோ மனத்திலோ கோளாறு இருக்கப்பா....''

நான் எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டு தான் இருந்தேன்.

''நீ பேசாமல் உன் வேலையைப் பார்த்துக் கொண்டு போ, தரங்கா. வெளியிலே யார் கூடவாவது சண்டையின்னை போட்டிருப்பான். வெளியில் போகப் பயந்து கொண்டு வீட்டுக்குள் வளைய வரான் போல இருக்கு.'' இது அப்பாவின் சமாதானம்.

தரங்கிணி, அக்கா ஜானுவிடம் போனாள். ஜானு சமையல் அறையில் அம்மாவுக்கு ஏதோ உதவி செய்து கொண்டிருந்தாள். நானும் அப்பாவுக்குக் காப்பி வாங்கிக் கொண்டு கொடுக்கலாம் என்று அங்கே போனேன்.

''ஜானக்கா, ஹரி அண்ணாவைக் கவனிச்சியா ?''

''என்னடா வேணும்?'' என்று ஜானு என்னைப் பார்த்துக் கேட்டாள்.

''அப்பாவுக்குக் காப்பி வேணும்.''

''கொஞ்சம் இரு.''

''அக்கா, நான் ஹரி இங்கே வந்ததைச் சொல்லவில்லே'' என்று தரங்கிணி தன் கேள்வியைத் தொடர்ந்தாள்.

''தொண தொணக்காதே ! பேசாமல் போ....!'' என்று ஜானு எரிந்து விழவே தரங்கிணிக்கு முகம் வாடிப் போயிற்று.

ஜானு வேண்டும் என்றேதான் அவளுக்குப் பதில் சொல்லவில்லை என்று தெரிந்தது. ஒரு வேளை அவள் என் மன நிலையைப் புரிந்து கொண்டிருப்பாளோ ? ஆம் ! அப்படித் தான் இருக்க வேண்டும். அவள் என்னைவிட ஐந்தாறு வயது பெரியவள். எம். ஏ. ஹைகாலஜி படித்துவிட்டு லெக்சரராக இருக்கிறாள். அவளுக்குத் தெரியாதா ?

''அம்மா!'' என்று தரங்கிணி தாயாரிடம் திரும்பினாள்.

''என்ன ?'' அம்மா எப்போதும் அதிகாரமாகத்தான் கேட்பாள். அதிலேயே பாதி பேச்சு நமக்கு அடங்கிவிடும். ஆனால் அவள் மனம் மிக மிக நைவுடையது. அந்தக் குரலுக்கும் செயலுக்கும் தொடர்பே இராது. நான் ஒருவன்தான் இதைக் குழந்தை முதல் புரிந்து கொண்டு அம்மாவின் இளகிய மனத்தை எனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு ஆட்டம் காட்டி வந்தேன்.

''ஹரி, இந்தா காப்பியை அப்பாவுக்குக் கொண்டு போய்க் கொடுத்துவிட்டு இங்கே வா'' என்று ஜானு தம்ளரை நீட்டினாள்.

அப்பாவிடம் காப்பியைக் கொடுத்து விட்டு நின்றேன். அவர் என்னை ஏற இறங்கப் பார்த்தார்.

''உம்....தேவலையே !''

''என்னப்பா ?''

''ஹிப்பி தலையெல்லாம் போய்ப் பழைய ஹரியாய் லட்சணமாய் நிற்கிறியே....''

''தலையெல்லாம் ஒரே பேன் வந்து விட்டதப்பா. 'சோ' மாதிரி அடிச்சுக்கலாமோன்னு பார்த்தேன். பிரார்த்தனையில்லாமெ அப்படி அடிச்சுக்கப்படாதுன்னு என் நண்பன் ஒருத்தன் சொன்னான். சரின்னு 'சம்ரா' பண்ணிண்டேன்.''

''போறது. இப்பவாவது புத்தி தெளிந்ததே. ஹரி.... தில்லிக்குப் போறியா ?''

''உங்களையெல்லாம் விட்டுட்டு நான் எங்கேயும் போகலையப்பா.''

''என்னடா இத்தனை நாளா இல்லாத அன்பு வழியறது ? உன் மாமா அனுப்பச் சொல்லி எழுதியிருக்கார் !''

''என்னமோ போகலேயப்பா.....!''

அப்பா என்னை விசித்திரப் பிறவியைப் பார்ப்பது போலப் பார்த்தார்.



'கஜமுகன்'

காப்பித் தம்ளரை வாங்கிக் கொண்டு சமையல் அறைக்குப் போனேன்.

''ஹரி, சட்டுனு டிபன் சாப்பிடு. நாம கொஞ்சம் வெளியிலே போய்விட்டு வரணும்!''

அக்காவா பேசுகிறாள்? அவள் என்னை வெளியிலேயே கூட்டிப் போகமாட்டாள். அவளுக்கு எப்போதும் அவள் தோழிகள்தான் துணை. என்னுடைய மாறுதல்கள் அவள் போக்கையும் மாற்றிவிட்டனவா?

''ஆறரை மணி ஷோவுக்கு ஸஃபையர்லே டிக்கட்டு கிடைக்குமா?''

அக்கா சினிமாவுக்கு என்னை அழைக்கிறாள். என் நடத்தையில்தான் மாறுதல் என்றால் அக்காவின் மனத்திலுமா மாறுதல்?

அக்கா என் மாறுதலைக் கண்டு ஏதாவது மனத் தத்துவ பரீட்சையில் இறங்கியிருக்கிறாளோ என்று நினைத்தேன்.

ஸஃபையரில் இறங்கினோம். நான் போய் டிக்கெட் வாங்கி வந்தேன். இருவரும் படம் பார்த்தோம். ஜானு ஏதும் அதிகமாகப் பேசவில்லை. அது ஒரு ஸைகலாஜிகல் கதை. அக்காவின் 'ஸப்ஜக்ட்'.

படம் ஒன்பது மணிக்கு முடிந்துவிட்டது.

''ஹரி: பீச்சுக்குப் போய்விட்டு வீட்டுக்குப் போகலாமா?''

'' என்ன அக்கா இத்தனை நேரத்துக்கு மேலா?''

''வீட்டுக்குப் போய் என்ன செய்யறது?''

''சாப்பிட்டுவிட்டுத் தூங்கறது!''

''தூக்கம்தான் வரமாட்டேன் என்கிறதே?''

''ஏனக்கா, உனக்குக் கூடவா?''

அக்கா சிரித்தாள்.

''எனக்குக்கூடவா என்றால்....? வேறு யாருக்குத் தூக்கம் வரவில்லை...?''

நான் தூங்குவதில்லை என்பதை உளறிவிட்டேனே!

''இல்லே... எனக்குக்கூட இரண்டு நாளா சரியாத் தூக்கம் வரல்லேங்கிறதைச் சொன்னேன்......''

''ஆமாம், எப்படித் தூக்கம் வரும்? வீட்டிலேயே கத்தறயோ இல்லையோ?''

சரி, அக்கா என்னை விளக்கத்தான் வெளியே கூட்டி வந்திருக்கிறாள் என்பதைப் புரிந்து கொண்டேன்.

''ஹரி, நான் உன்னை எதுக்காகச் சினிமாவுக்குக் கூட்டி வந்தேன்னு தெரியுமா? இது தான் கடைசியாக நாம் இரண்டு பேரும் சேர்ந்து வெளியே வந்திருப்பது!''

''அக்கா!'' என்று பாதை என்றும் பார்க்காமல் கத்திவிட்டேன்.

''உஸ்!'' என்று அக்கா அடக்கிவிட்டு முன்னே நடந்தாள்.

என் உள்ளம் பதைத்தது. 'அக்கா என்ன இப்படி ஒரு குண்டைத் தூக்கிப் போடுகிறாள்?'

'' ஏனக்கா, எங்களை விட்டுப் போகப் போகிறாயா?''

''அப்படித்தான் தோன்றுகிறது.''

''அக்கா, அந்த மாதிரியெல்லாம் செய்து விடாதே. உனக்கென்ன அக்கா குறை? அப்பா, அம்மா, தங்கை, தம்பி என்று எல்லோரும் உன்னிடம் உயிராய் இருக்கிறோம். நீயோ நன்றாகப் படித்துப் பிடித்தமான வேலை பார்க்கிறாய். ஒரு வேளை... கல்யாணம் ஆகவில்லை....''

''சீ! அதற்கு நான் ஏன்டா கவலைப்பட வேண்டும்? எனக்கு இந்த உலகமே பிடிக்கவில்லை ஹரி. நான் எந்தச் சமயத்தில் உயிரை மாய்த்துக் கொள்வேனோ தெரியாது....''

''வீட்டுக்கே நேரே போகலாம். நீ வழியில் ஏதாவது செய்து வைத்தால் என்னால் அப்பா அம்மாவுக்குப் பதில் சொல்ல முடியாது. நானும் அங்கேயே உயிரை விட்டு விடுவேன்.''

''அப்படி வா வழிக்கு. நீ எனக்காக உயிரைக் கொடுப்பாய் அல்லவா?''

''ஆம்; என்னுடைய உயிர் உன்னுடையது.''

''அப்படியானால், அதை மாய்த்துக் கொள்ள உரிமை உனக்குக் கிடையாது.''

நான் திடுக்கிட்டேன். 'அக்கா என்னைப் புரிந்து கொண்டுவிட்டாளா? எப்படியோ மடக்கி என் வாயிலிருந்து என் எண்ணத்தை வெளி வரச்செய்து விட்டாளே.'

''ஹரி! நீ இரண்டு நாட்களாகப் போடற வேஷம் எனக்குத் தெரியும். இதுவே உண்மையாக என்றென்றும் நிலையாக மாறினால், அப்பா, அம்மா, நான், தரங்கிணி எல்லோரும் எவ்வளவு சந்தோஷப்படுவோம்?

''நீ இந்த இரண்டு நாளாக ஏன் இப்படி மாறினாய்? நாம் இந்த உலகத்தை விட்டுப் போகப் போகிறோம்: அதற்குள் நல்ல பேர் எடுத்துவிட்டு எல்லோரையும் கதற அடித்து விட்டுப் போவோம் என்கிற எண்ணம் தானே உனக்கு? நீ நல்லவனோ கெட்டவனோ நம் வீட்டுக்குப் பிள்ளைதானே! பெற்றவர்

ளுக்கு மனம் தாங்குமா? உயிரை விடுவதற்கு ஒரு லட்சியம் வேண்டாமா ?''

''என்னக்கா, என்ன சொல்றே நீ! கொஞ்ச நேரம் முன்னே நீதான் உலகத்தை வெறுத்து விட்டுப் போகப் போறதாகச் சொன்னே. இப்ப எனக்கு உபதேசம் பண்ணறயே ?''

''நான் உயிரை விடப் போகிறேன் என்று சொன்னதும் நீ ஏன் அப்படிக் கத்தினாய்? அந்த உணர்ச்சிதானே எங்களுக்கும் இருக்கும். அதைக் காட்டத்தான் அப்படிச் சொன்னேன். நீ அசட்டுத்தனமாக ஏதும் செய்யக் கூடாதுன்னுதான் உன்னைச் சினிமாவுக்கு அழைத்து வந்தேன்.''

''நான் உயிரை விடப் போறதா யார் சொன்னா அக்கா ?''

''உன் டைரி. மூணு நாட்களுக்கு முன்னால் அதிலே என்ன எழுதினே நினைவிருக்கா ?''

''மூணாவது வருஷம் பெயிலான பிறகு எந்த முகத்தைக் கொண்டு அக்கா நான் நடமாடுவேன்? என்னாலே இனி படிக்க முடியாது. பரீட்சை எழுத முடியாது. பரீட்சை எழுதி பாஸ் செய்யாட்டா எவன் வேலை கொடுக்கிறான்? அதுதான் தீர்மானித்தேன். இனி இந்தத் தொல்லை பிடித்த உலகமே வேண்டாம். அதற்குள் வீட்டில் எல்லாரிடமும் அன்பாய்ப் பழகுவோம். வீட்டிலேயே இருப்போம் என்று வளைய வந்தேன்.''

''பரீட்சையில் பாஸ் செய்யாட்டா உலகில் வாழ முடியாதுன்னு எவன்டா சொன்னான் ? இந்த நாட்டிலே படிக்காமலே வாழற ஜனங்கள் எத்தனை கோடி பேர் இல்லே. ஹரி! நீ எனக்குக் கொடுத்த வாக்கை மறந்துவிடாதே. இனி உன் உயிர் உன்னுடையதல்ல. சித்த முன்னாடி எனக்கு அதை அர்ப்பணம் செய்துவிட்டே. உனக்கு இந்த ஊரில் இருக்க வெட்கமா இருந்தால், அப்பா சொன்னது போல் தில்லிக்குப் போய்ப் படிப்பை முடித்து விட்டு வா. என்ன?.....''

நான் பலி ஆடு மாதிரி தலையை ஆட்டினேன்.

# மகள் தீட்டிய ஓவியம்



கீழே உள்ள ராஜாஜியின் ஓவியத்தை வரைந்தவர் அவர் புதல்வியரான ஸ்ரீமதி நாமகிரி அம்மாள். இதைச் சிலர் நம்பவே மறுப்பார்கள்.

ராஜாஜியின் காவலராக, செயலாளராக, தொண்டராகக் குடும்ப நிர்வாகஸ்தராக இப்படிப் பலபடியாக நண்பர்கள் பார்த்திருப்பார்கள் ஸ்ரீமதி நாமகிரியம்மாளை. ஆனால் சித்திரம் வரையும் — அதுவும் ஆயில் பெயின்டிங் — செய்யும் திறமை அவருக்கு உண்டு என்பது அவர் குடும்பத்தாரைத் தவிர வேறு யாருக்கும் தெரியாது.

அவர் ஐந்து வயதுச் சிறுமியாக இருந்தபோது சேலத்தில் பிரபல கிரிமினல் வக்கீலாக இருந்தார்



ராஜாஜி. குழந்தைக்கும் பாடம் சொல்லிக் கொடுக்கவும், பார்த்துக் கொள்ளவும் ஒரு வெள்ளைக்கார மாது நியமிக்கப்பட்டிருந்தார். அந்த அம்மையார் சிறுமி நாமகிரியிடம் சித்திரக் கலை புதையுண்டிருப்பதைக் கண்டு, அதை வெளிப்படுத்த, இயற்கைக் காட்சிகளை - மலை, மரம், மேகம், கடல் - இப்படிப் பலவற்றை வரையச் செய்தார். அந்த நாளில் ராஜாஜி வீட்டில் ஏராளமான ரவிவர்மா படங்கள் இருக்குமாம். பின்னர் அவற்றைப் பார்த்து எழுதப் பழகினாராம். பிறகு போட்டோக்களைப் பார்த்தும், ஆட்களை நேரில் பார்த்தும் எழுதப் பழகிக் கொண்டாராம்.

ஆயில் பெயின்டிங் செய்யவும் தொடங்கினார்.

அந்த நாளில் சென்னையில் கவர்னராக இருந்த ''நை''யின் மனைவியார் லேடி நை ஒரு நல்ல ஓவியர். அவர் ஸ்ரீமதி நாமகிரியின் ஓவியங்களைப் பார்த்து மிக வியந்து பாராட்டியிருக்கிறார். ஸ்ரீமதி நாமகிரி, எந்தச் சித்திரக் கலைப் பள்ளிக்கும் போகாமலே இவ்வளவு தூரம் வரைவதிலும், வண்ணக் கலவைகள் சேர்ப்பதிலும் தாமாகவே திறமை பெற்றிருப்பதைக் கண்டு அவருக்கு ஒரே வியப்பு.

ஒரு முறை காந்தி மகானை மையத்தில் வரைந்து காங்கிரஸ் தலைவர்கள் அனைவரையும் — ஐம்பது அல்லது அறுபது பேர்களை — ஒரு மாலையாக வரைந்திருந்தார் நாமகிரி. அப்படம் மிக நேர்த்தியாக அமைந்திருந்ததைக் கண்டு, ராஜாஜி, அப்போது சென்னைக்கு விஜயம் செய்திருந்த சீனப் பிரதமர் சூ என் லாய்க்கு அதனை அன்பளிப்பாக வழங்கினார்.

அச்சமயம் கவர்னராக இருந்த ஸ்ரீ பிரகாசா, ''இவ்வளவு அரிய படத்தை எனக்கல்லவோ ராஜாஜி அளித்திருக்க வேண்டும்?'' என்று குறைப்பட்டுக் கொண்டார்!

இதோ இங்குள்ள ராஜாஜியின் ஓவியத்தை ராஜாஜி காலமான ஒரு சில நாட்களில் வரையத் தொடங்கி முடித்திருக்கிறார் நாமகிரி. ராஜாஜி கடைசி நாட்களில் தேசம் போகிற போக்கைக் கண்டு மிகவும் மன வேதனையோடிருந்தார். அந்த பாவத்தை அப்படியே ஸ்ரீமதி நாமகிரி இப்படத்தில் கொண்டு வந்திருக்கிறார் அல்லவா ?

— சீதா



கொசுக்களின் பிடுங்கல்
தீருமா என்று
தவித்தோம்...
டார்ட்டாய்ஸ்
கொசுவர்த்திச் சுருள்
(TORTOISE MOSQUITO COIL)
வாங்கினோமோ பிழைத்தோம்...
சரிவர உபயோகித்தால்
சிறந்த பயன்.
பத்து சுருள்கள் அடங்கிய பெட்டியிலிருந்து ஓர் இரட்டைச் சுருளை எடுத்து ஒன்றின் வளைகொம்பு முனையை இரு விரல்களுக்கிடையே பிடித்துக் கொண்டு... மெல்லப் பிரித்தேன்.
கதவுகள் ஜன்னல்களை எல்லாம் மூடிய பின் சுருளை அதற்கான ஸ்டாண்டு ஒன்றின் மீது பொருத்தி, தரை மீது ஒரு மூலையில் வைத்துப் பற்ற வைத்தேன். 20 நிமிடங்கள் கழித்து இலேசான அதன் புகை பரவிய பின்—ஒரு ஜன்னல் கதவைத் திறந்தேன்—பறந்தோடின கொசுக்கள் வெளியே!
மலேரியா, ஃபிலேரியாக் காய்ச்சலைத் தடுக்கும் பொருட்டு சிபாரிசு செய்யப்படுகிறது இது—கொசுக்கடியே இனி இராது. ஆட்கள் நிரம்பிய ஓர் அறைக்கு ஒற்றைச் சுருளே போதும். 8 மணி நேரம் புகை பரப்பும். குழந்தைகளுக்குத் தீங்கற்றது.
இவ் வகையான சுருள்கள் ஜப்பான், ஹாங்காங், சிங்கப்பூர், கானடா நாடுகளில் பெயர் பெற்றுள்ளன. அதிசயமென்ன, நயமான விலையிலே—நல்ல பயன் தருபவை, இப்போதெல்லாம் கொசுத் தொல்லையே இல்லாமல் நிம்மதியாகத் தூங்குகிறோம்.
டார்ட்டாய்ஸ்-இந்தியாவிலே இதன் வகையில் ஒன்றே ஒன்றான கொசு விரட்டி
இன்று மேலும் பயன் தருமாறு மேம்படுத்தப் பட்டுள்ளது.
தயாரிப்பாளர்கள் :
பாம்பே கெமிக்கல்ஸ் பிரை. லிட்.
மானேக்ஜி வாடியா பில்டிங்,
129, மகாத்மா காந்தி ரோடு,
ஃபோர்ட், பம்பாய் 400001. போன் : 251970
everest/770/BCL-tm
தமிழ்நாட்டுக்கு விநியோகஸ்தர்கள் :
M/s. கே. எஸ். & சன்ஸ்,
நெ. 1, விருபாக்ஷீஸ்வரர் கோவில் தெரு, மைலாப்பூர், சென்னை - 600 004 (தமிழ்நாடு

# பொன்னியின் புதல்வர்



சுந்தா



கல்கியின் தாயாரைப் போலவே மனைவியும் தலையூர்ப் பெண். இன்னமும் கல்கியாகப் பரிணமிக்காத கிருஷ்ணமூர்த்திக்கு வாழ்க்கைப்பட்டார்.

## 19. முடிந்த வரனும் முறிந்து போன வரன்களும்

**கல்யாணம் இல்லாத கதை இருந்தாலும், கதை இல்லாத கல்யாணம் கிடையாது.**

கல்கி பிறந்த ஊரான புத்தமங்கலத்துக்கும் நன்னிலம் தாலுகாவிலுள்ள தலையூருக்கும் இடையே வெகு காலமாகவே கொள்வனை கொடுப்பனை உண்டு. கல்கியின் தாயாரைப்போலவே மனைவியும் தலையூர்ப் பெண். ஒன்றரை வேலி நிலத்துக்குச் சொந்தக்காரரும், பெரிய பண்ணையார் ஒருவரின் காரியஸ்தருமான ராமசாமி அய்யரின் குமாரி சௌபாக்கியவதி ருக்மிணி, 1924 மார்ச் மாதம் சுபதினம் ஒன்றில் (தேதி தெரியவில்லை) இன்னும் கல்கியாய்ப் பரிணமிக்காத சிரஞ்சீவி கிருஷ்ணமூர்த்திக்கு வாழ்க்கைப்பட்டாள்.

அந்தக் காலத்தில் சாதாரணமாய்ப் பன்னிரண்டு வயதுக்குள்ளேயே பெண்களுக்குக் கல்யாணம் ஆகிவிடும். ருக்மிணிக்கோ கல்யாணம் ஆகும்போது, வயது பதினாறு. அந்தத் தாமதத்துக்கு, அதுவரை வியாழானுகூலம் வராததுதான் என்று ஜோதிடத்தில் நம்பிக்கை உள்ளவர்கள் சொல்லலாம். கல்யாணுகூலம் வராததுதான் காரணம் என்று மற்றவர்கள் சொல்லலாம்.

பிள்ளைகளுக்கும் அந்தக் காலத்தில் பதினெட்டு வயதுக்குள் கல்யாணம் ஆகிவிடும். கல்கியின் அண்ணா வெங்கடராமனுக்கும், நண்பர் சுப்பிரமணியத்துக்கும் அதே வயதில் திருமணமாகிவிட்டது. கல்கி மட்டும் இருபத்தைந்து வயதுவரை பிரம்மச்சாரியாய் இருந்தது ஏன்? விவேகானந்தரின் பக்தன் முத்துக்கிருஷ்ணனைப் போல் தானும் சம்சார பந்தம் இன்றித் தேசத் தொண்டுசெய்ய எண்ணியது ஒரு காரணம். பின்னர் தேசத் தொண்டுக்கு இல்லறம் இடையூறாய் இராமல் உதவியாகவே இருக்க முடியும் என்று எண்ணியபோது, சரியான வரன் அமையாமல் போனது, அதற்கு மேல் காரணம்.

தேசத் தொண்டு பற்றிக் கற்பனைத் தம்பிக்குப் புத்திமதி சொல்லும் கட்டுரை ஒன்றில் கல்கி கூறினார்:

நமது பொதுஜனங்களின் மனப்பான்மையில் ஒரு மகத்தான விசித்திரத்தைக் காண்கிறேன்... தேசத் தொண்டர்கள் விஷயத்தில் ஓர் அதிசய புத்தி அவர்களிடம் குடிகொண்டிருக்கிறது. சர்க்கார் உத்தியோகஸ்தன் ஒருவன் எவ்வளவுக்கெவ்வளவு அதிகச் சம்பளம் வாங்குகிறானோ, அவ்வளவுக்கவ்வளவு அவனுக்கு மரியாதை செய்கிறார்கள். ஆனால் தேசத் தொண்டுக்ு என்றே தன் வாழ்வை அர்ப்பணம் செய்தவனை அவமதிப்புடன் நோக்குகிறார்கள். அதிலும் தேசிய ஸ்தாபனம் ஒன்றில் அவன் சொற்ப ஊதியம் பெறுகிறவனாய் இருந்தால் கேட்க வேண்டியதில்லை.

சர்க்கார் உத்தியோகம் மட்டும் அல்ல; பொதுஜனங்களிடமிருந்து வேறு எந்த வழியில் பணம் சம்பாதித்தாலும், அது நமது தேசத்தில் கௌரவமாகக் கருதப்படுகிறது. ஜோதிடம் சொல்லலாம்; மருந்து விற்கலாம்; பத்திரிகை வெளியிடலாம்; வக்கீல்

தொழில் செய்யலாம்; வட்டிக்குக் கொடுத்து வாங்கலாம்; லாட்டரி போடலாம்; ஸோப்பு விற்கலாம்; வேறு எது வேண்டுமானாலும் செய்யலாம். இவை எல்லாம் ஒருவனுக்குக் கௌரவம் அளிக்கின்றன. பிரம்மச்சாரி ஒருவன் இந்தத் தொழில்களில் எது செய்தாலும் அவனுக்கு நான் நீ என்று போட்டி போட்டுக் கொண்டு பெண் கொடுக்க முன் வருவார்கள். ஆனால், "உனக்கு என்ன உத்தியோகம்?" என்று கேட்பவர்களுக்கு "தேசத் தொண்டு" என்று மட்டும் பதில் சொல்லு; அறுபது வயதுக் கிழவனுக்கு ஏழாந்தாரமாகக் கொடுத்தாலும் கொடுப்பார்களேயன்றி உனக்குப் பெண் கொடுக்க மாட்டார்கள். (ஆ.வி.—10-5-33)

சொந்த அனுபவத்திலிருந்தே கல்கி இவ்வாறு எழுதினார் என ஊகிக்கலாம். இந்த ஊகத்துக்கு ஆதாரமாக கல்கியின் அண்ணா வேங்கடராம அய்யர் தம்பி திருச்சியில் தொண்டனாய் இருக்கையில், நாலைந்து வரன்கள் தட்டியோ முறிந்தோ போன விவரங்களைத் தெரிவித்தார். அவற்றில் ஒரு விவரம் வேடிக்கை கதையாகச் சொல்லத்தக்கது.

நடேச அய்யர் என்பவர் — பேரைச் சொன்னாலும் ஊரைச் சொல்லக் கூடாது — வேங்கடராம அய்யரிடமிருந்து கிருஷ்ணமூர்த்தியின் ஜாதகத்தை வாங்கிக் கொண்டு போனார். அதை அவர் தமது குடும்ப ஜோதிடரிடம் காட்டியதில், தமது பெண்ணின் ஜாதகத்துடன் "திவ்வியமாய்ப்" பொருந்துகிறது என்பதைத் தெரிந்து கொண்டார். உடனேயே புத்தமங்கலத்துக்குப் பந்து மித்திரர்களுடன் சென்று, தமது புத்திரியைக் கிருஷ்ணமூர்த்திக்குக் கன்னிகாதானம் செய்து கொடுப்பதாய் நிச்சயதார்த்தம் செய்துவிட்டார்.

ஊருக்குத் திரும்பிய நடேச அய்யரை "தியாகபூமி" நாவலில் வரும் சங்கர தீக்ஷிதரைப் போன்ற சகுனி மாமா ஒருவர், விரைந்தோடிக் கண்டார், வத்தியும் கையுமாக. "ஏங்காணும், அந்தப் புத்தமங்கலம் பிள்ளைக்கா உம்மோட பொண்ணைக் கொடுக்கப் போகிறீர்?" என்று கேட்டார்.



"ஏன், அந்தப் பையனுக்கு என்ன குறைச்சல்?"

"என்ன குறைச்சலா? அவனுக்குப் பெண்ணைக் கொடுத்தால் உம்முடைய உத்தியோகத்துக்கே ஆபத்து வந்துவிடும், ஓய்!"

நடேசஅய்யரின் உத்தியோகம் என்னவென்றால் போலீஸ் சப் இன்ஸ்பெக்டர்!

"எப்படி ஓய் ஆபத்து?" என்று போலீஸ் நடேச அய்யர் கேட்டார்.

"அந்தப் பிள்ளையாண்டான் காந்திக் கட்சியிலே சேர்ந்து கம்பியை எண்ணினவனுக்கும்!"

"நீர் சொல்வது உண்மைதானா?" என்று உத்தியோக தோரணையில் அதட்டிக் கேட்டார் நடேச அய்யர்.

"நீங்களே விசாரிச்சுக் கொள்ளுங்களேன். நீங்கள் போலீஸ் உத்தியோகம் பார்த்தும், பையனோட பூர்வோத்திரத்தைத் தெரிஞ்சுக்காம சம்பந்தம் பண்ணப் போயிட்டேளேன்னு ஆச்சரியமா இருக்கு."

போலீஸ் அய்யர் உடனேயே வில் வண்டியைப் பூட்டச் சொல்லி புத்தமங்கலத்துக்கு விரட்டச் சொன்னார்.

"உங்கள் தம்பி ஜெயிலுக்குப் போனவன் என்கிறது நிஜம்தானா?" என்று கோபமாய்க் கேட்டார்.

"நிஜந்தான்; ஆனால் பிராயச்சித்தம் செய்தாச்சு" என்று வேங்கடராம அய்யர் சாந்தமாய்ப் பதில் சொன்னார்.

"பிராயச் சித்தமாவது பிலாக் கொட்டையாவது! போலீஸ்காரனையே ஏமாத்திட்டேளேங்காணும்! இந்தக் காந்திக்காரங்களை யெல்லாம் எனக்கு நன்னாத் தெரியும். திரும்பத் திரும்ப ஜெயிலுக்குப் போயிண்டே இருப்பானுக. என் மாப்பிள்ளையை நானே அரெஸ்ட் பண்ண வேண்டி யிருக்குமே ஓய்!"

செய்த நிச்சயதார்த்தத்தைச் செல்லாமல் அடித்துவிட்டு அவர் திரும்பினார். ஊருக்கு வந்ததும், அவர் நேரே வண்டியை, பொருத்தம் பார்த்துச் சொன்ன ஜோதிடர் வீட்டுக்கு விடச் சொல்லிச் சத்தம் போட்டிருப்பார்: "கிரகங்களை யெல்லாம் குடைஞ்சு குடைஞ்சு பார்த்திரே! பையன் காராக் கிரகம் போனவன்னு எப்படித் தெரியாமப் போச்சு? உம்மாலே என் பெண்ணைக் கைதிக்குக் கொடுக்க இருந்தேனே ஓய்!"

"கிரகங்களையெல்லாம் குடைஞ்சு குடைஞ்சு பார்த்திரே, பையன் காராக்கிரகம் போனவன்னு எப்படித் தெரியாமப் போச்சு?"

மிரண்டுபோன ஜோதிடர், மறுபடியும் பையனின் கிரக நிலைகளை ஆராய்ந்து, அவன் காராக்கிரகம் சென்றதையும், மீண்டும் செல்லப் போவதையும் கண்டு பிடித்தாரோ என்னவோ!

அப்படி அந்த வரன் முறிந்துபோனது பற்றி மிக்க மகிழ்ச்சியடைந்தவர் ஒருவர் இருந்தார். அவர்தான், அப்போது திருச்சியிலிருந்து அந்த விவரத்தை அண்ணாவிட மிருந்து கேள்விப்பட்ட கிருஷ்ணமூர்த்தி. ''ரொம்ப நல்லதாய்ப் போச்சு!... நான்தான் சொன்னேனே!''

'' உனக்குக் கல்யாணம் பண்ணிப் பார்க்கணும் என்று அம்மா' துடியாய்த் துடிக்கிறாள்.''

'' பின்னாலே பார்த்துக் கொள்ளலாம். இப்போதைக்கு வேண்டாம்.''

சிறை புகுவதற்கு முன்னால் கிருஷ்ணமூர்த்தி பள்ளி மாணவனாய் இருந்தபோதே ஒரு கல்யாணப் பேச்சு நடந்தது. அதுவும் ஒரு வேடிக்கைக் கதைதான்.

கிருஷ்ணமூர்த்தி ஐந்தாம் படிவம் படித்துக் கொண்டிருந்தபோது, அவனுடைய வகுப்பு வாத்தியார், அவனை செல்ல மாணாக்கனாய்க் கொண்டிருந்தார். அவனை அடிக்கடி வீட்டுக்கு வரச் சொல்லி, டிஃபன் கொடுப்பார். அல்லது ''வீட்டுச் சாப்பாடு'' போடுவார். வகுப்புப் பயிற்சி நோட்டுக்களை அவனுக்குப் பகிர்ந்து கொடுத்துத் திருத்தச் சொல்வார். அவருடைய அகத்துக்காரிக்கும் அவனை மிகவும் பிடித்திருந்தது. கறுப்பாயும் குள்ளமாயும் இருந்தாலும் களையான முகம்; கட்டுக் குடுமியும் தானுமாய், ஆசாரமாய், வேத பாராயணம் எல்லாம் செய்து கொண்டு அதே சமயம் இங்கிலீஷ் படிப்பிலும் கெட்டிக்காரனும் இருந்து கொண்டு... தங்கள், பத்து வயதுப் பெண்ணை அவனுக்குக் கொடுத்துவிடலாம் என்று இருவருமே ஒருமித்து எண்ணினார்கள்.

ஒரு நாள் மாலே வாத்தியாரும் அவருடைய செல்ல மாணாக்கனும் அழித் திண்ணையில் உட்கார்ந்திருக்கையில், தெரு வாசலில் பெண் பாண்டி விளையாடிக் கொண்டிருந்தாள். தாண்டியும் நொண்டியும் அவள் குதித்துக் கொண்டிருந்ததைக் கிருஷ்ணமூர்த்தி பார்ப்பதைக் கவனித்த அம்மணி, ''ஏண்டாப்பா கிருஷ்ணமூர்த்தி, எங்காத்துப் பெண்ணைக் கல்யாணம் பண்ணிக்கிறையாடா?'' என்று திடுமெனக் கேட்டாள்.

'' நாசமாய்ப் போச்சு !'' என்றான் கிருஷ்ணமூர்த்தி.

மனைவியின் முகம் அதைக் கேட்டுச் சுருங்கியதைக் கண்ட வாத்தியார், '' இவன் நாசமாய்ப் போச்சுன்னு சொன்னா, பேஷாய்ப் போச்சுன்னு அர்த்தம், தெரியுமோ'' என்று கூறினார்.

''தெரியும், தெரியும். ஆனாலும் ஒரு நல்ல விஷயத்தைப் பேச எடுத்தப்போ இப்படி அச்சான்யமாய்...''

''நான் என்ன செய்யறது, மாமி! எத்தனையோ பேர் சொல்லியும், இந்த நாசமாய்ப் போற வார்த்தையை விட முடியலே.''

''சரி, விடமுடியாவிட்டால் போறது நான் கேட்டதுக்குப் பதில் சொல்லு.''

''நான் ஏழைப் பையன்னு தெரியுமோல்லியோ உங்களுக்கு?''

''நாங்கள் மட்டும் பணக்காராளா?' என்று கேட்டாள், பெண்ணைப் பெற்றவள்.

அவளைத் தொடர்ந்து அவனுடைய அகத்துக்காரரும், ''நானும் ஏழைப் பையனாய்த்தான் இருந்தேன். இன்னமும் ஏழை வாத்தியாராய்த்தான் இருக்கேன்'' என்றார். ''நீ படிக்கிறதைப் பார்த்தால், நிச்சயமாய் நீ பெரிய உத்யோகம் பார்த்துக் கைநிறையச் சம்பாதிப்பேன்னு தோணறது.''

''நிச்சயமாய் இவன் தாசில் பண்ணுவான்'' என்று மனையாள் ஒத்துப் பாடினாள். ''ஜட்ஜாகூட வரலாம்.''

''ஓஹோஹோ!'' என்று கிருஷ்ணமூர்த்தி சிரித்தான்.

''ஏண்டாப்பா, உங்க ஜாதி என்னன்னு தெரிஞ்சுக்கலாமோ?''

''நாசமாய்ப் போச்சு! என்னைப் பார்த்தால் பிராம்மணனாய்த் தோணலேயோ?''

''இல்லேடா, வடமாளா, பிருகசரணமான்னு கேட்டேன்.''

''நாங்க வடமாள்.''

''ரொம்ப நல்லதாய்ப் போச்சு.... கோத்திரம் என்னவோ?''

''சங்கிரிதி கோத்திரம்.''

''நல்லவேளை! எங்கே ஒரே கோத்திரமா இருந்துடுமோன்னு பயந்தேன்'' என்றாள் பெண்ணின் தாயார். ''என்ன உங்களைத்தானே! உடனேயே இவனுடைய ஜாதகத்தை வாங்கிப் பாருங்கோ.''

''ஏதேது! நீங்கள் படுகிற அவசரத்தைப் பார்த்தால், இந்தத் தையிலேயே கலியாணத்தை நடத்திடுவேள் போல் இருக்கே!'' என்று பையன் சிரித்தான்.

''தை இல்லாட்டா, பங்குனி, சித்திரையிலாவது பண்ணித் தீரணும். பெண்ணுக்குப் பத்து நிரம்பிப் பதினொண்ணு நடக்கிறதேடா! தெருக்காரா, ஊர்க்காரா பேசற பேச்சைக் கேட்க முடியலேயேடா!''

# இலவசம்

ஒவ்வொரு
175 கிராம் டின்னுடனும்
300 கிராம் சர்க்கரை




ரிக்கரி
இன்ஸ்டன்ட்
—விசேஷச் சுவை கொண்டஸ்பெஷல் காப்பி

ஒவ்வொரு 50 கிராம்
ஜாடியுடனும்
ஒரு 95 கிராம்
பார்லே குளுகோ
பிஸ்கட் பாக்கெட்




இச்சலுகை,
சரக்குகள்
உள்ளவரை
மட்டுமே!

NACH.1 TAM

''இந்தப் பாரு'' என்று அவளைக் கணவர் கண்டித்தார். ''இன்னமே அடாபுடான்னு சொல்லாதே. நம் மாத்து மாப்பிள்ளையா வரப் போறு னுக்கும்!''

''இப்போதே வந்த மாதிரிதான்னு சொல்லுங்கோ!''

''நான் சொல்றதைக் கொஞ்சம் கேளுங்கோ. உங்காத்துப் பெண்ணை நான் கட்டாயம் பண்ணிக்கிறேன். ஆனா 'பணம் கட்டிப் பரீட்சை'யிலே தேறினப் புறந்தான் பண்ணிப்பேன்.''

''அதாவது இன்னும் ஒண்ணரை வருஷம் கழிச்சுப் பண்ணிக்கிறானாம்'' என்று வாத்தியார் விளக்கம் சொன்னார்.

''அதுவரை எப்படிப் பெண்ணுக்குக் கல்யாணம் செய்யாமல் வைத்திருப்பது! ஊர்க்காரா எல்லாம்...''

''ஊர்க்காரா கிடக்கட்டும். இந்தப் பிள்ளைக்காக நாம் காத்திருக்கத்தான் வேணும்.''

பாவம், காத்திருந்து ஏமாந்தார்கள். 'பணம் கட்டிப் பரீட்சை'க்குப் பணம் கட்டுவதற்கு முன்னாலேயே கிருஷ்ண மூர்த்தி பள்ளிக்கூடத்தை விட்டு 'ஓடி விட்டான்!' ''நல்லவேளை, இப்படிப் பட்ட பிள்ளைக்குப் பெண்ணைக் கொடுக் காமல் தப்பினோம்'' என்று அந்தப் பெற்றோர்கள் நினைத்திருப்பார்கள்...

''ஓடிப்போன'' கிருஷ்ணமூர்த்தி, சிறை வாசம் செய்து, தொண்டராய் இருந்து, பின்னர் நவசக்தியில் சேர்ந்து, சில மாதங்கள் ஆன பிறகு அவருடைய தாயார் பிறந்த ஊரான தலையூருக்குப் போய், சகோதரர் ராமுவுடன் கொஞ்ச நாள் தங்கியிருந்தார். அப்போது ஒரு நாள், ''பாவம் கிருஷ்ணமூர்த்தி, பட் டணத்திலே எங்கே சாப்பிடுகிறானோ, உடம்புக்கு ஒத்துக்கொள்ளாமல் என்ன சங்கடப்படுறானோ!'' என்று அங்கலாய்த் துச் சொன்னாள்.

''பேசாமல் அவனுக்குக் கல்யாணம் பண்ணி வச்சுட்டாக் கவலைப்படாமல் இருக்கலாமே'' என்று ராமு அய்யர் சொல்லி, உள்ளூர் ராமசாமி அய்யரின் பெண் ருக்மிணியைச் சிபாரிசு செய்தார். '' தாயார் குஞ்சம்மாளைப் போலவே பெண்ணும் குடித்தனப் பாங்கானவள்'' என்பதைக் கேட்டதும் தையல்நாயகி அம்மாளுக்கு அந்த வரனில் விருப்பம் உண்டாயிற்று.

கேட்க வேண்டுமா கிராமத்தில்? வீட் டுக்கு வீடு பேச்சுப் பரவி மள மள வென்று காரியங்கள் நடந்தன. பெண் ணின் தகப்பனார், தாயார், மற்றும் உறவினர்கள் எல்லாரும் ராமு அய்யர் வீட்டில் கூடிவிட்டார்கள். அவர்கள் பேச உட்கார்ந்தபோதே, கோவிலில் அதிர்வேட்டு வெடித்தது. ''ரொம்ப நல்ல சகுனம். சுவாமியே அனுக்கிரகம் பண்ணிவிட்டார்'' என்றார் ஊர்ப் பெரி யவர் நாராயணசாமி அய்யர்.

சிறிது நேரத்துக்குப் பிறகு பெண்ணை அலங்காரம் செய்து கொண்டு வந்து பெரியவர்கள் எல்லோருக்கும் நமஸ் காரம் செய்யச் சொன்னார்கள். அவள் குனிந்தபோது, மறுபடியும் அதிர்வேட் டுக் கேட்டது.

''இன்னொரு தரமும் ஈச்வர சம்மதம் கிடைத்து விட்டது'' என்று மகிழ்ந் தார் பெரியவர். ''ஜாதகம் கீதகம் ஒண்ணும் பார்க்க வேண்டாம்.''

''கிருஷ்ணமூர்த்தி — ருக்மிணின்னு பெயர்ப் பொருத்தம் ஒண்ணே போதுமே!'' என்றார் மற்றொரு பெரிய வர். அப்போதுதான் அந்தப் பொருத் தத்தை உணர்ந்த எல்லாரும், ''ஆமாம், ரொம்பச் சிலாக்கியமான பொருத்தம்'' என்றார்கள்.

நமஸ்காரம் செய்த பெண்ணைப் பார்த்த தையல்நாயகி அம்மாள், மூக் கும் முழியும் நன்றாய்த்தான் இருக்கிறாள் என்று நினைத்தாள். ஆனால் தன் மகனை விடக் கொஞ்சம் உயரம். அதனால் என்ன, எத்தனையோ ஜோடிகள் ஏறத் தாழ இல்லையா?

உடனேயே புறப்பட்டு வரும்படி ராமு மாமா வேங்கடராமனுக்குச் சீட்டு எழுதி, ஓர் ஆள் மூலம் புத்தமங்கலத் துக்குக் கொடுத்தனுப்பினார். மறுநாள் வந்த வேங்கடராம அய்யர், தம்பியின் மனம் தமக்கு நன்றாய்த் தெரியும் என் றும், அவனைக் கலந்து கொள்ளாமல் ஏதும் செய்யக் கூடாது என்றும் கூறினார்.

பெரியவர் நாராயணசாமி அவரைத் தனியே கூட்டிக்கொண்டு போய்ச் சொன்னார்: ''உன் தம்பிக்கு லேசில் கல்யாணம் ஆகாது என்பது உனக்குத் தெரியும். ஜெயிலுக்குப் போனவன் என்று ஏற்கனவே பல தடவை வரன்கள் முடங்கி இருக்கு. இவர்கள் அதை யெல்லாம் பாராமல் விரும்பிப் பெண் கொடுக்கிறார்கள். சட்டுப்புட்டுனு இதை முடித்துவிடு.''

''எதற்கும் அவனுக்கு எழுதிக் கேட் கணும்'' என்றார் வேங்கடராம அய்யர்.

''எழுதிக் கேட்டால் வேண்டாம்னு தான் சொல்லுவான். நிச்சயம் செய்து விட்டு எழுது. அவன் கட்டுப்படுவான். எல்லாம் உங்கள் குடும்ப நன்மைக்கா கத்தான் சொல்கிறேன். அவனுக்கு நாமெல்லாம் சேர்ந்து இப்படிக் கால்

கட்டுப்போட்டால்தான் இனிமேலாவது ஜெயிலுக்குப் போகாமல் இருப்பான்.''

''சரி, யோசிப்போம்.''

''யோசிக்க என்ன இருக்கு? சுபஸ்ய சீக்கிரம். இன்னிக்குச் சாயந்திரமே தாம் பூலம் மாற்ற ஏற்பாடு செய்யறேன்.''

அப்படியே அக்கிரகாரத்தார் எல்லாருடைய முன்னிலையிலும் நிச்சயதார்த்தம் நடந்துவிட்டது. பெரியவரின் வக்கணைப்படி வேங்கடராம அய்யர் தமது தம்பிக்கு விவரமாய் ஒரு கடிதம் எழுதி, அதிலும் கவரிலும் நாலு மூலைகளிலும் மஞ்சள் தடவி தபாலில் சேர்ப்பித்தார். தம்பி என்ன நினைப்பானோ, எப்படி நடந்து கொள்வானோ என்று கவலைப் பட்டுக் கொண்டே புத்தமங்கலத்துக்கு திரும்பினார்.

இனி, கல்கியின் கதைப் பாணிகளில் ஒன்றைத் தழுவி, அந்தக் கடிதத்தைத் தொடர்ந்து சென்னைக்குச் செல்வோம்.

நவசக்தி அலுவலகத்தில், தலைமயிரைத் திருகிக்கொண்டே அடுத்த இதழுக்கான அச்சுத் தாள்களைக் கிருஷ்ணமூர்த்தி திருத்திக் கொண்டிருந்தபோது, அண்ணாவின் கடிதம் — அல்லது கல்கியே அடிக்கடி எழுதுவது போல் 'மேற்படி' கடிதம் — தொப்பென்று மேஜை மேல் விழுந்தது. மஞ்சள் குறிகளையும், அண்ணாவின் கையெழுத்தையும் கண்டு திகைத்துக் கொண்டே கடிதத்தைப் படித்தார். கண்கள் சிவந்தன. ''இருக் கட்டும்'' என்று சொல்லிக் கொண்டே பாக்கி அச்சுத் தாள்களைத் திருத்தி வைத்துவிட்டு, மிகக் கோபமாக அண்ணாவுக்குப் பதில் எழுதினார். தாம பாராத பெண்ணைக் கல்யாணம் செய்து கொள்ள முடியாது என்றும், எந்தப் பெரியவர்கள் அந்த ''மரப்பாச்சி''க் கல்யாணத்தை நிச்சயம் செய்தார்களோ அவர்களே அதை முடக்கிவிட வேண்டும்என்றும் எழுதினார். முக்கியமான சொற்களுக்கு அடியில் அடிக்கோடு இட்டு விட்டுக் கையெழுத்துப் போட்டார்.

கடிதத்தைத் தபால் நிலையத்துக்கே சென்று சேர்ப்பித்து விட்டுக் கடற்கரைக்குச் சென்றார். கடற் காற்று உடம்புக்கு இதமாய் இருந்தபோதிலும் அலையோசை அவருடைய மனக் கலக்கத்தை அதிகமாக்கிற்று. வலிக்க வலிக்க உதட்டை நிமிண்டிக் கொண்டே கால் ஒய்கிறவரை மணலில் நடந்தார்.

அதற்கு மூன்றும்நாள் அண்ணா வந்து நிற்பதைக் கண்டு கிருஷ்ணமூர்த்தி ஆச்சரியப்படவில்லை. தம்மைச் சமாதானப் படுத்திச் சம்மதிக்க வைப்பதற்காக அவர் நேரில் வருவார் என்பதை அவர் எதிர்பார்க்கவே செய்தார். ஆனால் அவர் வந்ததும் என்னவெல்லாம் கோபமாய்ப் பேச வேண்டும் என்று யோசித்து வைத்திருந்தாரோ, அதை யெல்லாம் பேச முடியவில்லை. கோபக் குறியைக் கூடக் காட்ட முடியவில்லை. அருமை அண்ணாவைக் கண்டதும், கனிவும், கவலையும் நிறைந்த அவருடைய முகத்தைக் கண்டதும், கோபத்துக்குப் பதிலாக வாஞ்சைதான் பொங்கிற்று. ''வா அண்ணா'' என்று பாசத்துடன் வரவேற்று உபசரித்தார். (தொடரும்)

---



# இயேசு குறித்து ராஜாஜி

கிறிஸ்துமஸ் பண்டிகையன்று (25-12-72) ராஜாஜி தமது பூதவுடலைத் துறந்தார்.

ராஜாஜிக்குக் கண்ணனின் கீதையில் இருந்ததைப் போன்ற பக்தியும் ஈடுபாடும் கிறிஸ்துவ வேதத்திலும் உண்டு. 1921 சிறைவாசத்தின் போது அவர் வைத்திருந்த புத்தகங்களின் பட்டியலை அவரே கொடுத்துள்ளார். அதில் கிறிஸ்துவ வேதம் முதலிடம் பெறுகிறது. ராஜாஜி தமது புத்தக அலமாரியில் எப்போதும் வைத்துப் போற்றி வந்த நூல்களுள் ஒன்று பைபிள்.

'உயிரைக் கொடுத்த திருமகன்' என்ற கட்டுரையில் ஏசு பகவான் குறித்து ராஜாஜி எழுதியுள்ளதில் இரு சுவைமணிகள்:

★ நம் நாட்டில் கௌசல்யா தேவியின் வயிற்றில் இராமச்சந்திரனும் தேவகியின் குழந்தையாகக் கண்ணனும் தோன்றியவாறு ஆசியா கண்டத்து மேற்குக் கோடியில் வசித்து வந்த யூதர்களை மேல் தூக்க மேரி அம்மையின் குழந்தையாக பகவான் ஏசு அவதரித்தான்.

★ செய்துவிட்ட பாவங்களை எண்ணி வருந்தித் துயரப்பட்டுப் பகவானைச் சரண் அடைந்தால் பாவங்கள் நீங்கிப் போகும். குற்றம் செய்தவர்களைக் கோபிக்காமல், அறியாமல் செய்தார்கள் என்று அவர்களை மன்னித்துவிட வேண்டும். வெறுப்படையாமல் அவர்கள்பால் இரக்கம் கொள்ள வேண்டும். இது ஏசு பகவானின் உபதேசம்.

'மற்ற வழிகளில் பயனில்லை, நீயே கதி என்று என்னைச் சரண் அடை, எல்லாப் பாவங்களினின்றும் விடுபடுவாய், கவலைப் படாதே' என்று கண்ணன் கீதை இறுதியில் வாக்குத் தந்ததும் பகவான் ஏசுநாதன் உபதேசமும் ஒன்றே. ஹிந்து சமயாசாரியார்களின் பாகுபாட்டின்படி ஏசு பகவானுடைய உபதேசம், சரணாகதியும், பக்தி மார்க்கமும் சுத்தத் வைதமுமாகும்.

- வி. ச. வாசுதேவன்


ஒற்றர் ஜாக்கிரதை
சென்ற இதழ் தொடர்ச்சி
ஜப்பான் பேர்ல் ஹார்பரைத் தாக்கிய அன்று அமெரிக்க வீரர்கள் ஹவாய்யி லிருந்த ஜப்பானிய தூதரகத் தைச் சூழ்ந்தனர்.
எல்லோரும் சரணடையுங்கள்! தஸ்தாவேஜுகளை எரிக்க முயல வேண்டாம்!
கைப்பற்றிய கடிதங்களை ஆராய்ந்த போது...
ரூத் தன் அழகினால் நம்மை மயக்கி விட்டாள். அவள் உளவாளி என்பதை இது நிரூபிக்கிறது!
ரூத்தும் அவள் பெற்றோரும் சிறைபிடிக்கப் பட்டனர்.
ஆல்பர்ட்! ரூத் தூக்கில் தொங்குவாள் என்பதை நினைக்க என்னவோ செய்கிறது.
அவள் தப்ப வழி உண்டு!...
....அவர்கள் ஜெர்மனியிலிருந்து வந்தவர்கள். ஜப்பான் பற்றியும் டாக்டர் கூஹனுக்கு நிறைய விஷயங்கள் தெரியும்!
நம்மை ஏமாற்றியது போதாது இப்போது அக்குடும்பம் தாய் நாட்டுக்கே துரோகம் செய்ய வேண்டும் என்கிறாய்!
உயிர் தப்ப அவர்கள் எதையும் செய்வார்கள், காப்டன்! ஹிட்லரிடம் என்ன விசுவாசம் வேண்டிக் கிடக்கிறது!
ஆல்பர்ட் கூறியது மெய்யாயிற்று. ரூத்தும் அவள் பெற்றோரும் விடுதலை பெற்றனர்.
கடலின் ஆழத்தைக் கூட அளக்கலாம். பெண் மனத்தின் ஆழத்தை அறிவது சிரமம் என்பது புரிகிறது!


3
முதல் உலகப் போரின் போது ஜெர்மானியன் லெஸ்லர் பெல்ஜியம் வந்து சேர்ந்தான். வியாபார நிமித்தம் ஊர் ஊராகச் சுற்றுவது போல் லெஸ்லர் பாசாங்கு செய்ய, அவன் ஆசை நாயகி, ஜெர்மானிய அழகி அன்னா மரியா பொழுது போக்காக ஓவியம் தீட்டத் தொடங்கினள்.
இந்தக் கோட்டைச் சுவரில் பல பீரங்கி வாய்கள் தெரிந்தாலும் நேர் எதிரே வரும் படைகளைத் தான் அவற்றால் சுட முடியும். பக்க வாட்டில் தாக்கினால் வெற்றி பெறலாம்....
இருப்பிடம் திரும்பியதும்...
கோட்டையின் ஓவியத்தை ஜெர்மனிக்கு அனுப்பினால் சந்தேகம் எழும். எனவே வெள்ளை பூசி....
....அதன் மேல் இயற்கைக் காட்சியை வரைந்து அனுப்புகிறேன். ஜெர்மானிய அதிகாரிகள் மேல் பூச்சுக்களை அகற்றி உண்மையை உணர்வார்கள்.
ஒரு நாள் லெஸ்லர் திடீரென்று இறந்து விட்டான். அன்னா மரியா பெருந் துயரமடைந்தாள்.
உன் ஆத்மா சாந்தியடையும் விதத்தில் நான் தொடர்ந்து ஒற்றாடல் செய்வேன்!
தன் தீர்மானப் படியே அழகி, அலங்காரி, அன்னா மரியா பெல்ஜிய தளபதிகளுடன் பழகி ரகசியங்களை அறிந்தாள்.
அன்பே! நீ அருகில் இருந்தால் ஒரே கிளு கிளுப்புத் தான்!


அப்போது யதேச்சையாக அவள் கைப் பை திறந்து கொள்ள....
வண்டியை நிறுத்த வேண்டாம். அந்தக் காகிதங்கள் முக்கியமல்ல!
சேச் சே...
பறந்து போன இவற்றைக் காரை நிறுத்திப் பொறுக்கி வைப்பது என்ன பிரமாதம்?
ஒரு நாள் மீது தற்செயலாகக் கண்ணோட்டம் செலுத்திய பெல்ஜிய தளபதி...
துரோகி! பாசாங்குக்காரி! ராணுவ ரகசியங்களை ஜெர்மனிக்கு அனுப்புகிறாயா!
ஆனால் அவன் கடிதத்தைப் படிப்பதை அன்னா மரியா ஓரக் கண்ணால் பார்த்து விடவே....
டாட்டா!
ஏய்! நில்லு! நில்லு!
தான் இனி பெல்ஜியத்தில் இருப்பது ஆபத்து என உணர்ந்த அன்னா, இங்கிலாந்துக்கு எப்படியோ வந்து சேர்ந்தாள். தன்னை ஓர் ஐரிஷ் நாரி என வர்ணித்துக் கொண்டாள். பள்ளி ஆசிரியையாக வேலை ஏற்றாள். ஒரு நாள்...
சாரணச் சிறுவர்களா! மரப் பொந்தில் பதுங்கி இருந்து கண் காணிக்கும் வித்தையை இன்று சொல்லித் தருகிறேன்!

தொடரும்

## 22. பொது உடைமைப் போலிகள்

**வ**க்கீல் சங்கக் கட்டடத்தின் அறைக்குள் நாற்காலியில் சாய்ந்தவாறு கண்களை மூடிக் கிடந்த கருணாகரன், அறைக்குள் சலசலப்புத் தோன்றவே சுய நினைவடைந்தார். ஆவுடையப்ப பிள்ளை கூட்டத்துக்குத் தலைமை வகிப்பதற்காக நாற்காலியில் அமர்ந்தார். அறைக்குள் மௌனம் நிலவியது. ஆவுடையப்ப பிள்ளை பேசத் தொடங்கினார்.

''இந்த விசேஷக் கூட்டம் சிலருடைய வேண்டுகோளின்படி கூட்டப்பட்டிருக்கிறது. ஜட்ஜ் மீது கண்டனத் தீர்மானம் கொண்டு வர வேண்டும் என்பது சிலருடைய விருப்பம்'' என்றார் பிள்ளை.

''அப்படியானால், உங்களுக்கு இதில் விருப்பம் இல்லையா?'' என்று குறுக்கிட்டுக் கேட்டான் சிங்காரம்.

''இந்தமாதிரி பைத்தியக்காரத்தனமான காரியங்களில் எனக்கு எப்போதுமே விருப்பம் ஏற்பட்டதில்லை'' என்று பிள்ளை கூறியதும் அறைக்குள் சிரிப்பொலி எழுந்தது.

''மற்ற வக்கீல்களைப் பைத்தியக்காரர்கள் என்று குறிப்பிட்டதை நான் ஆட்சேபிக்கிறேன்'' என்றார் கருணாகரன்.

''வக்கீல்களைப் பைத்தியக்காரர்கள் என்று கூறவில்லை. ஜட்ஜ்மீது கண்டனத் தீர்மானம் போடுவது போன்ற காரியத்தைத்தான் நான் பைத்தியக்காரத்தனம் என்றேன்.''

''தவறு செய்பவர்களைக் கண்டிப்பது பைத்தியக்காரத்தனமா?'' என்று கேட்டார் கருணாகரன்.

''செய்த தவறு என்ன என்பதைத் தவறு செய்தவரிடமே எடுத்துச் சொல்வதுதான் விவேகம்'' என்றார் பிள்ளை.

''இது பயங்கொள்ளித்தனம். ஜட்ஜுக்கு வால் பிடிப்பவர்களின் சிந்தனையில்தான் இந்த மாதிரி யோசனை தோன்றும்'' என்று கருணாகரன் கூறியதும் ஆவுடையப்பபிள்ளை கோபம் கொண்டார்.

''மிஸ்டர் கருணாகரன்! வார்த்தையை அளந்து பேசுங்கள். இங்கு யாரும் யாருக்கும் வால் பிடிக்க வேண்டிய அவசியமே இல்லை'' என்றார்.

''வீண் சண்டை எதற்கு? மேற்கொண்டு நடக்க வேண்டியதைக் கவனிப்போமே?'' என்றார் ஒரு வயோதிக வக்கீல்.

''ஜட்ஜ்மீது நிறைவேற்ற விரும்பும் கண்டனத் தீர்மானங்கள் என்ன; அதற்கான காரணங்கள் எவை என்பதை அங்கத்தினர்கள் விளக்கலாம்'' என்று பிள்ளை கூறியதும், அறையில் சற்று நேரம் மௌனம் நிலவியது. ஒருவரும் பேச எழவில்லை.

''தீர்மானத்தைக் கொண்டு வருபவர்கள் எழுந்து பேசலாமே?'' என்று பிள்ளை கூறினார்.

கருணாகரன் தமக்குப் பக்கத்தில் இருந்த சிங்காரத்தின் முழங்கையில் இடித்தார்.

அவன் எழுந்து நின்றான். தலைவரைப் பார்த்து, ''ஜட்ஜ் வக்கீல்களை மதிப்பதில்லை. நீதிமன்றத்திலேயே பலர் முன்னிலையில் வக்கீலை இழிவாகப் பேசுகிறார்'' என்றான்.

''எப்போது பேசினார், என்ன பேசினார்?'' என்று கேட்டார் தலைவர் ஆவுடையப்ப பிள்ளை.

''இரண்டு மாதங்களுக்குமுன் ஒரு கொலைக் கேஸில் கைதிக்காகக் கோர்ட்டிலிருந்து நான் நியமிக்கப்பட்டிருந்தேன். அந்த வழக்கு நடைபெற்றுக் கொண்டிருந்த போது என்னை இழிவாகப் பேசிவிட்டார்.''

''என்ன பேசினார்?'' என்று வக்கீல் சர்மா கேட்டார்.

''கைதியைப் பார்த்து, 'இந்தாப்பா, உன்னை விடுதலை செய்ய வேண்டும் என்று எனக்கு விருப்பம்தான். பிராஸிக்யூடர்கூட உன்னை விடுதலை செய்துவிடலாம் என்றுதான் நினைக்கிறார். ஆனால் உனக்காக வாதாடும்




ர.சு.நல்லபெருமாள்

இவர், உன்னைத் தூக்கில் போட வேண்டும் என்றல்லவா முடிவு செய்துவிட்டதாகத் தெரிகிறது! இவருடைய குறுக்கு விசாரணையும் வாதமும் அப்படி அல்லவா இருக்கின்றன?' என்றார்.'' சிங்காரம் இவ்வாறு கூறியதும், அறைக்குள் பலத்த சிரிப்பொலி எழுந்தது. சிலர் வயிற்றைப் பிடித்துக் கொண்டு விழுந்து விழுந்து சிரித்தார்கள். சிங்காரத்துக்கு அவமானத்தால் அழுகை வந்துவிடும் போல் இருந்தது.

''என்ன சிரிப்பு வேண்டி யிருக்கிறது? ஒரு வக்கீலை நீதிமன்றத்தில் இப்படி ஒரு ஜட்ஜ் அவமானமாகப் பேசியிருக்கிறார். நீங்கள் சிரிக்கிறீர்கள்!'' என்று சிங்காரம் கத்தினான்.

''இது எப்படி அவமானமாகும்? உண்மையை ஒருவர் கூறியதை எப்படிக் குற்றமாகக் கொள்ள முடியும்?'' என்றான் சம்பத். மீண்டும் சிரிப்பொலி எழுந்தது. சிங்காரம் கோபத்துடன் சம்பத் இருந்த திசையை நோக்கினான்.

''இதில் என்ன சார் கேலி? எல்லா வக்கீல்களும் திறமைசாலிகளா ? சிங்காரம் தொழிலுக்கு வந்து இரண்டு வருடங்கள்தாம் ஆகின்றன. போகப் போகத்தானே அனுபவம் கிடைக்கும். ஆரம்பத்திலேயே திறமை வந்து விடுமா? ஜட்ஜ் அப்படிக் கூறியது அகம்பாவமான பேச்சுத்தான். ஏன், இங்கே சீனியர்களாக உள்ளவர்களுடைய கேஸெல்லாம் வெற்றிபெற்றுக் கொண்டா இருக்கு?'' என்று படபடப்புடன் பேசினார் கருணாகரன்.



ஓர் இளம் வக்கீல் எழுந்திருந்தார். ''வக்கீல்களை அவர்களுடைய போக்கில் வழக்கை நடத்த ஜட்ஜ் அனுமதிப்பதே யில்லை'' என்றார்.

''விவரமாகச் சொல்லுங்கள்'' என்றார் பிள்ளை.

''குறுக்கு விசாரணை செய்யும்போதெல்லாம் குறுக்கிடுகிறார்.''

'' எப்படி ?''

''சம்பந்தமில்லாத கேள்விகள் என்று தள்ளிவிடுகிறார்.''

''சம்பந்தமில்லாத கேள்விகளை ஏன் கேட்க வேண்டும்?'' என்றான் சம்பத்.

''ஜட்ஜினுடைய நினைப்பில் சம்பந்தமில்லாத கேள்வியாக இருக்கலாம். ஆனால் வழக்குக்கு மிகவும் அவசியமான கேள்வி என்று எனக்குத் தோன்றும் போது.....?''

''அப்படியானால் கேள்வியையும் மறுப்பையும் குறித்துக் கொள்ளும்படி ஜட்ஜிடம் சொல்லலாமே!'' என்றார் சர்மா.

''அதில் என்ன சார், பிரயோசனம்? அது அப்பீலுக்குத்தானே பயன்படும்? இப்படி ஒவ்வொரு வழக்கிலும் ஜட்ஜ் குறுக்கிட்டுக் கொண்டே இருந்தால், வழக்கை எப்படி நடத்த முடியும் ?''

இந்தச் சமயத்தில் கருணாகரன் குறுக்கிட்டார். ''குறுக்கு விசாரணை என்பதே ஒரு கலை. ஒவ்வொருவரும் அதை ஒவ்வொருவிதமாகக் கையாளுவார்கள். அவரவர்களுடைய போக்கில் போக அனுமதிப்பதுதான் ஜட்ஜின் கடமை. அதைவிட்டு விட்டுச் சதா குறுக்கிட்டுக் கொண்டே இருந்தால், வக்கீல்களுக்கு எரிச்சல்தான் வரும். கேஸ் நடத்துவதிலுள்ள ஆர்வமே குன்றிவிடும்'' என்றார்.

இதை எல்லாரும் ஆமோதிப்பது போல் மௌனமாயிருந்தனர்.

ஒரு வக்கீல் எழுந்து, ''ஜட்ஜ் சரியான நேரத்துக்கு நீதிமன்றத்துக்கு வருவதில்லை.... அவர் ஒழுங்காக வராதது மட்டுமின்றி வக்கீல்களைச் சரியான நேரத்துக்கு வரவில்லை என்று மிரட்டுகிறார்'' என்றார்.

''நேற்று மத்தியானம் வழக்கைப் பாதியில் நிறுத்திவிட்டு வீட்டுக்குப் போய்விட்டார்'' என்றார் கருணாகரன்.

''மிஸ்டர் கருணாகரன்! நேற்றைய வழக்கில் நீங்கள் வக்காலத்துப் போடவில்லை. அது என்னுடைய வழக்கு. ஜட்ஜ் வீட்டுக்குப் போனது பற்றி நானோ பிராஸிக்யூடரோ குறைகூறவில்லை'' என்றார் பிள்ளை.

''பயங்கொள்ளிகள்'' என்றார் கருணாகரன்.

''டோன்ட் டாக், நான்சென்ஸ்'' என்றார் ஆவுடையப்பபிள்ளை.

''ஹியர், ஹியர்'' என்று கைதட்டினான் சம்பத்.

''ஜட்ஜ் நீதிமன்றத்திலேயே தூங்குகிறார்'' என்றான் சிங்காரம்.

''அவர் தூங்கும்படி வக்கீல்களின் வாதம் இருந்தால், தூங்காமல் என்ன செய்வார்?'' என்றான் சம்பத். மீண்டும் சிரிப்பொலி அறைக்குள் அதிர்ந்தது.

''ஒரு ஜட்ஜ் நீதி மன்றத்திலேயே தூங்குவது கேவலமானது'' என்று இரைந்து கத்தினார் கருணாகரன்.

அறைக்குள் சலசலப்பு அதிகமாகியது. கருணாகரனால் தூண்டிவிடப்பட்டிருந்த இளம் வக்கீல்கள் எழுந்து நின்று ஒரே சமயத்தில் பேசத் தொடங்கினர். சிலர் மறுத்துப் பேசினார்கள். எவருடைய பேச்சும் தெளிவாகக் கேட்கவில்லை. ஆவுடையப்ப பிள்ளை மேஜையின் மீது பலமாகத் தட்டி அமைதியாக இருக்கும்படி வேண்டினார். சற்று நேரத்தில் அமைதி நிலவியது.

''இதுவரை இங்கு கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் எதுவுமே கண்டனத் தீர்மானம் போடும் அளவு இல்லையே!'' என்றார் ஆவுடையப்பபிள்ளை.

''தீர்மானத்தை வாக்கெடுப்பின் மூலம் நிறைவேற்றலாம்'' என்றார் கருணாகரன்.

''தீர்மானம் என்னவென்பதே முடிவாகவில்லையே!''

இந்தச் சமயத்தில் கருணாகரன் எதிரே இருந்த ஓர் இளம் வக்கீலைச் சைகை காட்டவும், அவர் எழுந்தார்.

''மூன்று தீர்மானங்கள்'' என்றார்.

எல்லோரும் அவரைக் கவனித்தார்கள். அவர் தொடர்ந்து சொன்னார்:

''முதல் தீர்மானம், ஜட்ஜ் நீதிமன்றத்தில் வக்கீல்களைக் கேவலமாகப் பேசுவதைக் கண்டித்து. இரண்டாவது தீர்மானம், ஜட்ஜ், சரியான நேரத்தில் கோர்ட்டுக்கு வராமல் இருப்பதைப் பற்றியது. மூன்றாவது, ஜட்ஜ், கோர்ட்டில் தூங்குவது பற்றியது.''

''இவை உண்மையிலேயே நல்ல எண்ணத்தோடு வக்கீல்களின் நன்மைக்கெனக் கொண்டு வரப்படும் தீர்மானங்களா? அல்லது ஒரு நீதிபதியை வேண்டும் என்றே கேவலப்படுத்துவதற்காகப் போடப்படும் தீர்மானங்களா?'' என்று குறுக்கிட்டார் ஆவுடையப்பபிள்ளை.

''ஒரு ஜட்ஜைக் கண்டு நடுங்கிச் சாகிறீர்கள். உங்கள் வழக்குகளுக்கெல்லாம் எதிராகத் தீர்ப்பளித்துவிடுவாரோ என்ற பயம். உங்களைப் போன்றவர்கள்தான் நீதியின் துரோகிகள்.''

கருணாகரன் கோபத்தில் இரைந்தார். அவருடைய வார்த்தைகளால் ஆவுடையப்ப பிள்ளை தாக்குண்டார். திகைத்துப் போய் அமர்ந்திருந்தார். கூட்டத்தில் பலர் கருணாகரனின் கடுசொற்களை ஆட்சேபித்து முகத்தைச் சுளித்தனர். சம்பத், கோபத்தால்



**இது சரி, ஆனால்....**

குத்துச்சண்டை வீரர் முகம்மது அலி தினமும் காலையில் மூன்று மைல் ஓடுகிறார்.

**.... இது எதற்கு?**

அவரைத் தொடர்ந்து அவரது ரோல்ஸ் ராய்ஸ் கார் வந்துகொண்டேயிருக்கும்!

ஸ்போர்ட்ஸ் வீக் - பாலி

---

கொதித்தான். கருணாகரனைப் பார்த்து, ''நிறுத்துங்கள் சார்! உங்களுக்குத் தனிப்பட்ட முறையில் ஜட்ஜ்மீது கோபமென்றால் அதற்கு வக்கீல் சங்கத்தை ஒரு கருவியாகப் பயன்படுத்த விடமாட்டோம். சங்கத் தலைவரைத் தனிப்பட்ட முறையில் தாக்கிப் பேசியதை நீங்கள் வாபஸ் பெற வேண்டும்'' என்று இரைந்து கத்தினான்.

''மீண்டும் சொல்கிறேன். நம்முடைய தலைவர் கோழைதான். இல்லையென்றால், ஜட்ஜ் மீது தீர்மானம் கொண்டு வர இவ்வளவு தயங்குவாரா? சோஷலிஸ சமுதாயத்தில்....'' என்று கருணாகரன் பேசியபோது சம்பத் குறுக்கிட்டுப் பேசினான்.

''சோஷலிஸத்தைப் பற்றிப் பேச உங்களுக்கு என்ன சார் அருகதை?'' என்று கேட்டுவிட்டான்.

அந்தக் கேள்வி அறையில் எல்லாத் திசைகளிலும் பரவிப் பலரை உலுக்கியது.

''நான் புரட்சிக் கட்சியின் தலைவன்'' என்று கர்ஜித்தார் கருணாகரன்.

''தெரியும். இதற்குமுன்பு நீங்கள் எந்தெந்தக் கட்சிகளில் இருந்தீர்கள் என்பதும் தெரியும். எதற்காக நீங்கள் ஒவ்வொரு கட்சியாக மாறினீர்கள் என்பதும் தெரியும். கம்யூனிஸம், சோஷலிஸம் என்றெல்லாம் பேச உங்களுக்கு அருகதையே இல்லை. பாட்டாளி, விவசாயி என்று பேசத் தெரிந்து கொண்டிருக்கிறீர்களே; வியர்வை சிந்த உழைத்திருக்கிறீர்களா? உடுத்தியிருக்கும் துணி அழுக்காகும்படி எந்த வேலையாவது செய்ததுண்டா? ரஷ்ய நூல்களின் ஆங்கில மொழிபெயர்ப்புக்கள் சிலவற்றை மேம்போக்காகப் படித்துவிட்டுப் பாட்டாளிகளைப் பற்றிப் பேசுகிறீர்கள்! கம்யூனிஸம் பற்றிப் பேசி வேஷம் போடுகிறீர்கள். காரும், பங்களாவும் கோழிப் பிரியாணியும்தாம் உங்கள் வாழ்க்கை அனுபவம். ஒரு நாளாவது பட்டினி கிடந்த அனுபவம் உண்டா? வீட்டில் அமெரிக்க சுகபோகங்கள். பொமெரேனியன் ஜாதி நாயும், ஸயாமிஸ் பூனையும் பிரிஜிடேரும், ஏர்கண்டிஷனும், ஸ்டீரியோ ரேடியோகிராமும், டேப்ரிகார்டரும் — இதுவா ஒரு கம்யூனிஸ்டின் வாழ்க்கை? ஒரு ஜமீந்தாரைப் போல் வாழ்ந்து கொண்டு நீங்களும் உங்களைப் பாட்டாளிகளின் தோழன் என்றும், கம்யூனிஸவாதி என்றும் கூறிக் கொள்கிறீர்கள்! பாவம், பாட்டாளிகள் உங்களை நம்பி மோசம் போய்க் கொண்டிருக்கிறார்கள். நீங்கள் அமெரிக்க கோகோ கோலாவையும், ஸ்காட்ச் விஸ்கியையும் குடித்துக் கொண்டு இருக்கிறீர்கள்...''

சம்பத்துக்கு மூச்சு வாங்கியது. முகம் வியர்த்தது. ஆவேசம் இன்னும் தணிந்தபாடில்லை. கருணாகரனை வெறிக்கப் பார்த்தான். கருணாகரனின் கண்கள் வெந்திருந்தன. கோபத்தால் அவருடைய உடல் சற்று நடுங்கிக் கொண்டிருந்தது.

''என்னைப் பற்றிப் பேச உனக்கு அருகதை ஏது? நீ ஒரு பூர்ஷ்வாக் கூட்டத்தைச் சேர்ந்தவன். ஒருநாளாவது சிறைக்குச் சென்றிருப்பாயா?'' என்றார்.

''ஆமாம். நான் ஒரு தடவைகூடச் சிறை சென்றதில்லை. ஆனால் நீங்கள் ஒரே ஒரு தடவை அரசியல் காரணத்துக்காகச் சிறைவாசம் அனுபவித்துவிட்டுப் பிறகு போராட்டம், சிறைவாசம் என்றாலே பயப்படுகிறீர்கள்! போன வாரம் நடந்த மாணவர் போராட்டத்தில்கூட மற்றக் கட்சித் தலைவர்களைத் தூண்டிவிட்டீர்கள். போலீஸ்காரர்கள் கைது செய்யத் தொடங்கியதும் எங்கோ ஓடிப் போய் ஒளிந்து கொண்டீர்கள்...''

''சம்பத், போதும் நிறுத்து'' என்றார் ஆவுடையப்ப பிள்ளை. ''உட்கார்'' என்று கட்டளையிட்டார். அவருடைய குரலில் தொனித்த கடுமையை உணர்ந்த சம்பத் உட்கார்ந்தான். பெருமூச்சு வாங்கியது. முகத்தில் வியர்வை வழிந்தது. உட்கார்ந்த பிறகும் உணர்ச்சி அடங்காமல் தவித்தான். நளினி, அவன் கையைத் தொட்டுச் சாந்தப்படுத்தினாள்.

''மிஸ்டர் கருணாகரன்! சம்பத்துக்காக நான் மன்னிப்புக் கேட்டுக் கொள்ளுகிறேன்'' என்று பிள்ளை சொன்னபோது சம்பத் எழுந்தான், வேகமாக. ''தலைவரைப் பழித்துச் சொன்னதை மிஸ்டர் கருணாகரன் வாபஸ் வாங்க வேண்டும்'' என்றான்.

''சம்பத்! உட்கார். என்னைப் பற்றிய பேச்சை நான் பொருட்படுத்தவில்லை. இந்தக் கூட்டம் சுமுகமாக முடிய வேண்டும். நாம் எல்லோரும் வழக்கறிஞர்கள். சமுதாயத்தில் மதிப்போடு நடக்கவேண்டியவர்கள். சண்டை போட்டுக் கொண்டு நம்முடைய பெருமையை இழந்துவிடக் கூடாது'' என்றார் பிள்ளை.


பலர் உற்சாகத்துடன் கைதட்டினர். கருணாகரன், கோபம் தணியாமல் ஏதோ உறுமிக்கொண்டிருந்தார். அந்தக் கூட்டத்தில் இருக்கவே மனமில்லாது தவித்தார். பின் என்ன நினைத்தாரோ, கோபத்துடன் எழுந்து அந்த அறையை விட்டு வெளியேறிவிட்டார். அவர் எழுந்து போனதும் அவரைச் சேர்ந்த சில வக்கீல்களும் சிங்காரமும் வெளியேறிவிட்டார்கள். கண்டனத் தீர்மானம் எதுவும் போடாமலேயே கூட்டம் முடிந்துவிட்டது.

சங்கக் கட்டடத்தின் வராந்தாவுக்குச் சம்பத் வந்ததும் ''உங்கள் பேச்சை நான் ரசித்தேன்'' என்றாள் நளினி. ''நன்றாகக் கருணாகரனின் மூக்கை அறுத்தீர்கள். அவருடைய கர்வமெல்லாம் பொடிப் பொடியாயிருக்கும்'' என்றாள், உற்சாகத்துடன்.

நளினி காரில் ஏறியபோது, ''நாளை என்னுடைய பிறந்த நாள்'' என்றான் சம்பத்.

''மறக்க மாட்டேன். கட்டாயம் வருவேன்'' எனக் கூறிச் சிரித்தாள், நளினி. அவள் கையை அசைத்து விடைபெற்றாள். அவள் காரை ஓட்டும் பாங்கை ரசித்தவாறு நின்றான் சம்பத்.

(தொடரும்)


உடுத்திவிட்டாலோ
உல்லாசப்பெருமிதம்
ஸெபிர் ஃபுல் வாயில்
புடவைகள்
ப்ரீதி
கண்கவர் வண்ணங்களில்
உங்கள் மனதுக்குகந்த
டிசைன்களில் கிடைக்கிறது.
100% சுத்தமான எகிப்து பஞ்சு
கொண்டு நெய்யப்பட்டவை.
தி
லக்ஷ்மி
மில்ஸ்
கம்பெனி லிமிடெட்
கோயம்புத்தூர்
உயர்ந்த துணிகளின்
உன்னத சின்னம்
VSK.LMC-PRI.659.TM.

# போட்டிக் கதை: 15

பி. ராமமூர்த்தி

பெரியாத்தாளென்கிற அவள் பெயரோடு கிழவி ஒட்டிக்கொண்டு ரொம்ப நாட்கள் ஆகி விட்டது. பெரியாத்தாக் கிழவியின் புருஷன் பினாங்கில் வியாபாரம் செய்து சம்பாதித்த ஆயிரக் கணக்கான ரூபாயை இங்கு வந்து குடித்தே அழித்து விட்டான். கடைசியில் அவன் உயிரை விடுகிறபோது சல்லிக்காசு வைக்கவில்லை பெரியாத்தாளுக்கென்று. கிழவி தன் கதையைச் சொல்கிற ஒவ்வொரு சமயமும் இதைப் புலம்பலோடு சொல்லுவாள். அவளுக்கு ஒரே குழந்தைதான். பெண் குழந்தை. ராசாத்தி என்று பெயர். ராசாத்திக்கு எட்டாவது வயதில் திடீரென்று ஒரு விஷ ஜுரம் வந்தது. அந்தச் சமயத்தில் பெரியாத்தாளின் புருஷன் பினாங்கில் இருந்தான். ராசாத்திக்கு என்ன ஜுரம், என்ன வைத்தியம் செய்வது என்று புரியாமல்,






ஆறுதலோ, தேறுதலோ சொல்ல யாரும் இல்லாமல் தவித்தாள் பெரியாத்தாள். அவளுக்குத் தெரிந்த கைவைத்தியம் சிலவற்றைக் கையாண்டும் ராசாத்தி கண் திறந்து பார்க்கவில்லை. அப்புறம் ஒரு வெள்ளிக் கிழமை விடியற்காலை மூன்று மணிக்கு ராசாத்தி கண் திறந்து பார்த்தாள். மலர்ச்சியோடு புன்னகை செய்தாள். அந்தப் புன்னகையும் மலர்ச்சியும் தன்னிடம் சொல்லிக் கொண்டு போகத்தான் என்பது அவள் தலை சாய்ந்ததும்தான் பெரியாத்தாளுக்குப் புரிந்தது.

அழக்கூடச் சக்தியற்ற நிலையில் தன் ஒரே மகளின் அல்ப ஆயுசு பித்துப் பிடித்தவளாக்கிற்று பெரியாத்தாளை.

பல மாதங்களுக்குப் பின்னர்தான் தன் சோகத்தைத் தாண்டிச் சராசரி வாழ்க்கையில் சங்கமமானாள் பெரியாத்தாள்.

அப்போது அவளுடைய வாழ்க்கை, 'பிறருக்கு உதவுவது; பிறர் நலனுக்கு உழைப்பது' என்னும் சேவா உணர்வுக்குள் அடைபட்டது.

அவளுக்குச் சரியான உதவியும், உறுதுணையும் இல்லாமல் போனதினால்தானே ராசாத்தியை இழக்க நேரிட்டது. ஆழமாய் நெஞ்சில் விழுந்த அந்தச் சூட்டின் வடு அவளைப் பரோபகாரி ஆக்கிற்று. புனர்ஜன்மம் எடுத்தது போலானாள்.

அந்த முப்பது குடிசைகளில் கல்யாணம், காது குத்து, பிரசவம் பார்ப்பது போன்ற நல்ல காரியங்களானாலும், எந்தக் குடிசையி

லாவது தலைசாய்ந்து அதைத் தொடர்ந்து கவனிக்க வேண்டிய ஏற்பாடுகளானாலும் இன்னும் சின்னச் சின்ன விஷயமென்றாலும் முன்னின்று உதவுவாள் பெரியாத்தாக் கிழவி.

அந்தக் குடும்பங்களில் நடக்கிற சுப காரியங்களைத் தன் குடும்பத்தில் நடக்கிற விசேஷமாகவே எண்ணுவாள் பெரியாத்தாக் கிழவி.

''கிழவி, உன் புண்ணியத்திலே எல்லாமே நல்லா நடந்திடுச்சு. இந்தா, நீ ஒரு சேலை வாங்கிக்க!''

சில ரூபாய்கள் அவள் முன்னால் நீளும்.

மறுத்துவிடுவாள் கிழவி. ''இதுக்காவ நான் வல்லே!''

அந்தக் குடும்பங்களின் கஷ்டங்களிலும் சோகங்களிலும் தானும் ஆட்பட்டு அதற்காக மனத்துக்குள் வருந்துவாள்; அழுவாள்.

முப்பதுகுடிசைகளுக்கும் வேண்டாதவள், அவர்களால் ஒதுக்கி வைக்கப்பட்டவள் செல்லம் ஒருத்திதான்; பெரியாத்தாக் கிழவியும், மற்றவர்களைப் போல் செல்லத்திடம் ஒட்டாமல்தான் இருப்பாள். செல்லத்துக்கு இருபத்தி ஐந்து வயதிருக்கும். அவளுடைய புருஷன் அவளைக் கைப்பிடித்த ஒரு வருடத்துக்குள் அவளை அநாதரவாக விட்டுவிட்டு எங்கோ ஓடிவிட்டான். வயிற்றுப்பாட்டுக்காக, வாழ்வதற்காகச் சந்தர்ப்பமும்சூழ்நிலையும் செல்லத்தை 'ஒரு மாதிரியாக' எல்லாம் நடந்து கொள்ளச் செய்து விட்டது. செல்லத்தைத் தேடி வெவ்வேறு ஆண்கள் வந்து போனார்கள்; அப்படி வந்தவன்தான் கோவிந்தன்...இதனால்தான் மற்ற குடிசைக்காரர்களுக்கு அவள்மேல் வெறுப்பு வந்தது. அப்புறம் கோவிந்தன் அவளைச் சேர்த்துக் கொண்டு விட்டான். இப்போது செல்லம் கோவிந்தனோடு ஒழுங்காகக் குடும்பம் நடத்துகிறாள். இருந்தாலும் கொய்யாத் தோப்பு வாசிகள் அவளை மன்னிக்கவில்லை. கோவிந்தனையும் செல்லத்தையும் 'தள்ளி' வைத்து விட்டார்கள். இந்த ஒதுக்கலுக்காகக் கோவிந்தனும் செல்லமும் துளியும் கவலைப்படவில்லை.



கிழவி வறட்டி தட்டி விற்று அதில் கிடைக்கிற காசைக் கொண்டுதான் பொங்கித் தின்கிறாள். ஒருவேளைச் சோற்றுக்குக்கூட யார் வீட்டு வாசலிலும் போய் நிற்கக் கூடாது என்கிற அழுத்தமான கொள்கை அவளுக்கு. பிறர் குடிசைகளில் உழைத்துவிட்டு வந்தால் கூடத் தன் குடிசைக்கு வந்துதான் கை நனைப்பாள்.

''சாகிறவரைக்கும் நான் உழைச்சுத்தான் சாப்பிடுவேன்.''

தன் வீட்டில் ஒரு நாள் வந்து சாப்பிடும்படி சொன்ன தனத்துக்குக் கிழவி சொன்ன பதில் இது.

வேலாயி, தங்கமணி இரண்டு பேருடைய புருஷன்களும் நிலையான வேலை இல்லாத

# இன்னும் ஒரு ஜென்மம்...

வர்கள். உப்புக்கும் புளிக்கும் தடுமாறுகிற நிலை அடிக்கடி ஏற்படும் அவர்களுக்கு. கிழவி வறட்டி விற்றுச் சேர்த்து வைத்த இரண்டோ மூன்றோ அவர்களுக்குக் கொடுப்பாள்.

முத்துமோகன், பெரியசாமி, நமச்சிவாயம் வீட்டுக் குழந்தைகள் கமர்கட் வாங்கக் கிழவியிடம் ஆளுக்கு ஐந்து பைசா வாங்கிக் கொள்ளும். வேர்க்கடலை வாங்கி வந்து அந்தக்குழந்தைகளுக்குக் கொடுப்பாள் கிழவி.

''என் கண்ணுங்களா... நீங்கள்ளாம் நல்லாப் படிக்கணும். கலெக்டர் உத்தியோகம் பார்க்கணும். அப்பன் ஆயிக்கு நல்ல பேர் வாங்கிக் கொடுக்கணும்!'' ஓர் ஆசானைப் போல் சொல்லுவாள்.

மாலை நேரங்களில் அரிச்சந்திரன் கதை, ராமர் கதை, கிருஷ்ணர் கதை எல்லாம் கிழவி சொல்லக் குழந்தைகள் அவளைச் சூழ்ந்து உட்கார்ந்து கொண்டிருக்கும்.

பெரியாத்தாக் கிழவி ஒரு மாதமாகவே சுகவீனமாக இருந்தாள். ஏற்கெனவே தள்ளாமைக்குள் சிக்கித் தவித்த அவள் உடம்பில் நோய் பற்றியதைக் கிழவி பெரிதாக நினைக்கவில்லை. யாரிடமும் சொல்லவும்

## என்ன? என்ன? என்ன?




தூங்கா விளக்கு, நந்தா விளக்குகளெல்லாம் விளக்குகள். ஆனால் சிந்தா விளக்கு விளக்கல்ல, பின் என்ன?

(கலைமகளுக்கு ஒரு பெயர்)

"பவானி" பெண்பால். ஆண்பால் என்ன?
(பவன்:சிவபெருமான்; பவானி:பார்வதி)

வேலைக்காரனுக்கும் பெண்பால் - வேலைக்காரி. இதுபோல் தொழிலாளிக்கும் பெண்பால் தெரியுமா?
(தொழிலி: வேலைக்காரி; -(கோனார் அகராதி)

- தோ



**சங்கத்துக்கு ஒரு நாடகம்; நாடகத்துக்கு ஒரு சங்கம்!**

ஒரு பள்ளிக்கூடத்தின் கட்டட நிதிக்காகப் போடப்பட்ட நாடகத்தின் பெயர்: 'வடிவேலு வாத்தியார்'. அந்த அறிவிப்பைப் பார்த்தவுடனே நாட்டிலுள்ள பலவிதமான சங்கங்கள், அசோசியேஷன்கள் நிதிக்காகப் பொருத்தமான நாடகங்கள் என்னென்ன என்று யோசித்துப் பார்த்தேன்:

டாக்சி டிரைவர்கள் சங்கம் - "எங்கே போகிறாய்?"
சென்ட் வியாபாரிகள் - "கஸ்தூரி விஜயம்"
பூக்கடை வியாபாரிகள் - "கதம்ப மாலிகை"
கள் இறக்குவோர் சங்கம் - "அவன் ஒரு தனிமரம்"
அடகு வியாபாரிகள் - "காசேதான் கடவுளடா!"
மாதர் சங்கம் - "ஊர்வம்பு"
அனாதைக் குழந்தைகள் இல்லம் - "உறவுகள் இல்லையடி பாப்பா"
ராணுவ வீரர்கள் சங்கம் - "குருக்ஷேத்திரம்"
விமானிகள் யூனியன் - Flight No. 172
வெண்ணெய் வியாபாரிகள் சங்கம் - "கிருஷ்ண விஜயம்"
நிலச் சொந்தக்காரர்கள் சங்கம் - "நாலுவேலி நிலம்"
கட்டை வண்டி இழுப்பவர்கள் யூனியன் - "அச்சாணி"

தயாரிப்பு: 'பாமாப்ரியா'

~~~~~~~~~~~~~~~~~~~~

இல்லை. தான் போக வேண்டிய நேரம் வந்து விட்டது என்பதை மட்டும் இலேசாய் உணர்ந்தாள்.

கிழவி ஒரு வாரமாகவே குடிசையைவிட்டு வெளியே வரவில்லை. அங்காளம்மன் நாமத்தை உச்சரித்தபடி சுருண்டு கிடந்தாள். கிழவிக்கு என்ன உடம்பு என்று அந்த முப்பது குடிசைக்காரர்களும் வந்து பார்த்ததாகத் தெரியவில்லை.

அவ்வப்போது கிழவியிடம் வாயாட வரும் கோவிந்தன் மட்டும் — கிழவி சுருண்டு கிடப்பதைப் பார்த்துக் கண் கலங்கினான்; செல்லத்திடம் போய்ச் சொன்னான். செல்லம் கிழவியை வந்து பார்த்தாள்.

"என்ன ஆயி... உடம்புக்கு என்ன...' கஞ்சி போட்டுக் கொண்டாந்து தரட்டுமா?"

கிழவி ஈனஸ்வரத்தில் "ஒண்ணும் வேணாம். நீ போ!" என்றாள்.

"நீ முடியாம கிடக்கியேன்னுதான் வந்தேன். உங்கூட சொந்தம் கொண்டாட சேர்ந்துக்க வல்லே!"

அழமாட்டாத குறையாகக் கூறிவிட்டு வெளியேறினாள் செல்லம்.

நேற்றிரவு கிழவியின் முனகல் அதிகமாய் இருந்தது; நிசப்தமான நள்ளிரவில் அந்த முனகல் கோவிந்தனுக்கும் செல்லத்துக்கும் தெளிவாய்க் கேட்டது. மற்றக் குடிசையில் உள்ள ஆண்கள் போதையிலும், பெண்கள் சோர்வுடனும், குழந்தைகள் பசி மயக்கத்திலும் நன்றாகக் கண்ணயர்ந்துவிட்டார்கள்.

கிழவியின் முனகல் சன்னமாகிப் பிறகு அடங்கிப் போயிற்று.

கோவிந்தனும் செல்லமும் ஓடோடி வந்து பார்த்தார்கள்.

அழுது கொண்டே விடியற்காலையில் தங்கள் குடிசைக்குத் திரும்பினார்கள்.

செல்லம் ஏற்றி வைத்த விளக்கு கிழவியின் தலைமாட்டில் எரிந்தது.

"கிழவி பூடுச்சு!"

கொய்யாத் தோப்பில் முப்பது குடிசைகளிலும் அது ஒரு சாதாரண விஷயமாகப் பேசிக் கொள்ளப்பட்டது.

நடுப் பகலாகிவிட்டது.

கிழவியை எடுக்க யாருமே வரவில்லை எந்த முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை.

ஊருக்கெல்லாம் ஓடி ஓடி உதவிய அவள் அனாதையாகக் கிடந்தாள்.


முத்து மோகனின் மூத்த மகள் மீனா. அவளிடம் கேட்டாள்: "ஆயா செத்துப் போயிடுச்சே... யாரு சுடுகாட்டுக்குத் தூக்கிட்டுப் போவாங்க?"

"கிழவி எல்லோருக்கும் எவ்வளவோ உழைச்சிருக்குது..... யாராவது எடுத்திட்டுப் போறுங்க. என்னைக் கண்டாதான் அதுக்குப் புடிக்காது. குடிக்காதே குடிக்காதேன்னு கத்தும்!" என்று கூறிவிட்டுச் சட்டையை மாட்டிக் கொண்டு ரேஸ் புத்தகத்துடன் வெளியில் கிளம்பிப் போனான் முத்துமோகன்.

வேலாயி — கஷ்டப்படும்போதெல்லாம் கிழவியிடம் இரண்டு மூன்று என்று வாங்கிக் கொண்டவள், அதே மாதிரி கிழவியால் பயன் அடைந்த தங்கமணியிடம் சொன்னாள்:

"கிழவியை எடுக்கக் காக கை வசூல் பண்ண வந்துடுவாங்கடி. நான் சினிமாவுக்குப் போவப் போறேன்! வர்றியா?"

"இரு. தலையைச் சீவிக்கிட்டு வந்திடறேன்!"
~~~~~~~~~~~~~~~~~~~~




கிழவி ஒரு மாதத்துக்கு முன்னால், கடைசியாகக் கலந்து கொண்டு உழைத்தது நாகம்மாள் மகளின் கல்யாணத்துக்குத்தான்.

நாகம்மாளின் புருஷன் கிழவியை யார் எடுப்பார்கள் என்பது பற்றி அவளிடம் பேசலானான்.

''நமக்கு ஏங்க அந்தக் கவலை?'' என்றாள் நாகம்மாள்.

'' நம்ம மக கல்யாணத்துக்கு மாடா உழைச்சது கிழவி....'' என்று பெருமூச்செறிந்தான் புருஷன்காரன்.

''நமக்கு மட்டுமா உழைச்சிருக்குது ?... எல்லாருக்குந்தான் உழைச்சிருக்குது. அவுங்க பார்த்துக்கிருவாங்க, அதையெல்லாம். நீங்க கம்முனு கிடங்க !'' முகத்தில் அடித்தாற் போல் சொன்னாள் நாகம்மாள். புருஷன்காரன் தலையை ஆட்டினான்.

இவர்கள் எல்லாம்தான் இப்படி என்றால் கண்ணம்மாகூடவா அதே மனப்பான்மையுடன் இருக்க வேண்டும் ? வாதத்தினால் கையும் காலும் இழுத்துக் கொண்டு எழுந்திருக்கவோ உட்காரவோ முடியாமல் தவித்த அவளுக்கு அவள் ; நாட்டுவைத்தியரிடம் சிகிச்சை செய்து கொண்ட மூன்று மாதங்களும் எவ்வளவு பணிவிடைகள் செய்தாள் கிழவி ?

சோறு ஊட்டுவது, குளிப்பாட்டித் துணி மாற்றுவது — இப்படியெல்லாம் உறுதுணையாய், ஊன்றுகோலாய் இருந்தாளே!

கண்ணம்மாவின் வாத நோய் கிழவியின் பிரார்த்தனையாலும் கவனிப்பினாலும்தான் குணமாயிற்று.

''ஏழேழு ஜென்மத்துக்கு உனக்கு நான் கடன்பட்டிருக்கேன் !'' என்று கிழவியிடம் அப்போது சொன்னாள் கண்ணம்மா.

ஆனால், இப்போது....

' கிழவி வேலாயிக்கும் தங்கமணிக்கும் ரொம்ப செஞ்சிருக்குது ; கிழவியை அதுங்க புருஷனுங்க தூக்கிப் போட்டுடுவாங்க !' என்று தனக்குள் அந்தப் பிரச்னைக்கு முடிவு கண்டாள் அவள்.

ராஜா எல்லாரையும் அண்டாவில் ஒரு தம்ளர் பால் ஊற்றச் சொல்ல நாம் தண்ணீர் ஊற்றிய கதையாய் — கிழவியினால் பயன் அடைந்த ஒவ்வொருவரும் கிழவியைத் தூக்கும் பொறுப்பு மற்றவர்களுக்குத்தான் என்று வெகு சகஜமாய்த் தங்கள் வேலைகளில் ஈடுபட்டனர்.

கோவிந்தனும் செல்லமும் சோகமே உருவாய்த் தங்கள் குடிசையில் எதிரும் புதிருமாய் உட்கார்ந்திருந்தனர்.

கோவிந்தன் வேலைக்குச் செல்லவில்லை ; செல்லம் சோறு பொங்கவில்லை.

''கிழவி கடைசி வரைக்கும் நம்மகிட்டே ஒட்டாமயே இருந்திடுச்சு !'' செல்லம் கம்மிய குரலில் குறைபட்டாள்.

மறு நாள் காலை.

இன்னமும் தூக்கிப் போட யாரும் வரவில்லை ; கிழவியின் முகத்தருகே பூச்சிகள் பறந்தன.

செல்லம் குடிசைக்குள் வந்தாள்.

குடிசைக்குச் சற்றுத் தூரத்தில் கார்ப்பரேஷன் லாரி வந்து நின்றது. லாரியை ஓட்டிக் கொண்டு வந்த கோவிந்தன் லாரியில் இருந்து குதித்து குடிசையினுள் நுழைந்தான்.

அவனும் உதவிக்கு வந்த ஒரு பையனும் சேர்ந்து கிழவியை லாரியில் தூக்கி வைத்தார்கள்.

''ஆயி... எங்கூட பேசாம போறியே.... எங்கிட்டே சொல்லிக்காம போறியே !'' செல்லம் 'ஓ'வென்று பெரிதாய் வாய் விட்டுக் குமுறி அழுதாள். லாரியின் அருகே ஓடினாள்.

கோவிந்தன் அவளைத் தடுத்து நிறுத்தித் தள்ளி விட்டு வேகமாக லாரியைக் கிளப்பிக் கொண்டு போனான்.

Printed and published by V. Vaidyanathan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-600031. Editor: K. Rajendran

# ஷேவர் ஸ்விஷ்

## பயங்கர "கொலகாரப்-பாய்ச்சலில்"




ஒவ்வொரு முறையும் இதே கதை: ஸ்விஷ் க்ஷவரம் செய்து கொள்பவரை மிஞ்சுவதற்கில்லே.

(ஆமின், சீங்களும் பங்கு பெறலாம் அவனது அடுத்த சாகசச் செயலில்)

Registered No. M. 4099
Registered as a Newspaper in Ceylon